

"தோழர் **வே.ஆனைமுத்து** வழியில்"


**சுவடி : 2** **ஏடு : 12**

**மார்ச்சு-ஏப்பிரல் 2024**

**ஆசிரியர்**

வாலாசா வல்லவன்

**ஆசிரியர் குழு**

க. முகிலன்

சா. குப்பன்

தி. துரை சித்தார்த்தன்

முனைவர் முத்தமிழ்

சி. நடராசன்

ந. கருணாகரன்

இரா. திருநாவுக்கரசு

**இதழ் வடிவமைப்பு :**

**சன் நகலகம்**

சென்னை - 600 005.

பேசி : 98400 15179

**அனைத்துத் தொடர்புகளுக்கும்**

ஆசிரியர் **'புதிய சிந்தனையாளன்'**

2/12, சி.என்.கே.சந்து,

சேப்பாக்கம், சென்னை - 600 005.

தொடர்புக்கு :

**86681 09047, 98947 28032**

**94885 34225**

*

**மின்னஞ்சல் :**

puthiyasinthanaiyalanmagazine@gmail.com

**இணையத்தில் படிக்க**

www.keetru.com


**ஆசிரியவுரை**

# 2024 நாடாளுமன்றத் தேர்தலில் பாசிச பா.ச.க.வை வீழ்த்துவோம்!

நாட்டு மக்களுக்கு 2014இல் பொய்யான வாக்குறுதிகளைக் கூறி ஆட்சிக்கு வந்தது மோடி தலைமையிலான பா.ச.க. அரசு. நான் ஆட்சிக்கு வந்தால் வெளிநாடுகளில் உள்ள கருப்புப் பணத்தை மீட்டு இந்தியாவிற்குக் கொண்டுவந்து ஒவ்வொருவர் வங்கிக் கணக்கிலும் பதினைந்து இலக்கம் ரூபாய் செலுத்துவேன் என்று கூறி ஆட்சிக்கு வந்தார் மோடி. ஆனால் இதுநாள் வரையில் அதற்கான எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அதற்கு மாறாக, மோடி ஆட்சிக்கு வந்த பிறகுதான், பனாமா பேப்பரஸ், பண்டோரா பேப்பர்ஸ், ஹின்டென்ட்பர்க் அறிக்கை ஆகியவற்றால் அம்பலமான இந்திய பெருமுதலாளிகள் செய்த பணமோசடிகள், கருப்புப் பணம், வெளிநாட்டில் சொத்துகள் சேர்த்தல் என்கிற மோசடிகள் அதிகரித்தன.

2014இல் மோடி நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வேளாண் விளைபொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை கொடுப்பதுடன் வேளாண் உற்பத்திப் பொருள்களுக்கு உற்பத்திச் செலவைவிட ஒன்றரை மடங்கு விலையில் கொள்முதல் செய்யப்படும் என்று வாக்குறுதி கொடுத்தார். மோடி அரசு சொன்னபடி எதையும் செய்யவில்லை. அதற்கு மாறாக மூன்று வேளாண் சட்டங்களைக் கொண்டு வந்து அவர்களின் வாழ்வாதாரத்தைப் பறித்தார். கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டார். இதை எதிர்த்து தில்லியில் உழவர்கள் 379 நாள்கள் தொடர் போராட்டம் நடத்தினர். அப்போராட்டத்தில் 670 பேர் உயிர் இழந்தனர். இந்தியாவில் மட்டுமின்றி உலகம் முழுவதும் உழவர்கள் போராட்டம் குறித்து மோடி ஆட்சிக்குக் கடும் கண்டனம் எழுந்ததால் ஒன்றிய அரசு மூன்று வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெற்றது. மோடி அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணத்தால் குறைந்தபட்ச ஆதரவு விலைக்குச் சட்ட ஏற்பு அளிக்க வேண்டும் என்று கோரி மீண்டும் உழவர்கள் போராடி வருகின்றனர். அவர்களை மோடி அரசு தில்லிக்குள் நுழையாத வாறு தடுத்து நிறுத்தி அடக்குமுறை செய்து வருகின்றது.

உழவர்களுக்கும் வேளாண் தொழிலாளர்களுக்கும் போதுமான வருமானம் இன்றி 2014 முதல் 2023 வரையில் மோடி ஆட்சியில் குற்ற ஆவணக் காப்பக அறிக்கையின்படி 1,01,562 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

2014இல் மோடி நான் ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவேன் என்று தேர்தல் அறிக்கையில் கூறியிருந்தார். அப்படியானால் இந்தப் பத்தாண்டு ஆட்சிக் காலத்தில் இருபது கோடி பேருக்கு வேலை கிடைத்திருக்க வேண்டும். ஆனால் உண்மை நிலை என்னவென்றால், இந்தியப் பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் மையத்தின் திசம்பர் 2023 தரவுகளின்படி கடந்த அய்ம்பது ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் 8.7 விழுக்காடாக அதிகரித்துள்ளது. மோடி ஆட்சியின் பத்தாண்டு கால ஆட்சியில் பல கோடி பேர்களின் வேலை வாய்ப்புகள் பறிக்கப்பட்டுள்ளன.

2014இல் பா.ச.க. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பெட்ரோல், டீசல், எரிவாயு உருளை ஆகியவற்றின் விலையைக் குறைப்போம் என்று வாக்குறுதி அளித்தது அப்போது கச்சா எண்ணெய் பீப்பாய் 105 டாலருக்கு விற்கப்பட்டது. ஆயினும் மன்மோகன் சிங் ஆட்சியில் சமையல் எரிவாயு உருளை ரூ.410க்கும் பெட்ரோல்

ரூ.71க்கும் டீசல் ரூ.57க்கும் விற்கப்பட்டன. மோடி ஆட்சிக்கு வந்தபின் கச்சா எண்ணெய் விலை 47 டாலராகக் குறைந்த நிலையிலும் எரிபொருள்களின் விலை குறைக்கப்படவில்லை ஆயினும் சமையல் எரிவாயு உருளை விலை ரூ.1000/-த்திற்கும் பெட்ரோல் ரூ.103/-க்கும் டீசல் ரூ.97/-க்கும் விற்கப் படுவது ஏன்? ஏற்கெனவே காங்கிரசு ஆட்சிக் காலத்தில் எரிவாயு உருளைக்கு கொடுக்கப்பட்டு வந்த மானியத்தையும் கொடுக்காமல் நிறுத்திவிட்டது மோடி அரசு. ஏழை மக்களைச் சுரண்டி கார்ப்பரேட் நிறுவனங்களை வளர்ப்பதுதான் பா.ச.க. வின் கொள்கையாக உள்ளது.

புழக்கத்தில் உள்ள கருப்புப் பணத்தை அழிப்பதற்காக என்று கூறி திடீரென்று 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் நாள் 500 ரூபாய், 1000 ரூபாய் பணத்தாள்கள் செல்லாது என்று மோடி அரசு அறிவித்த காரணத்தால் செலவிடுவதற்கு பணமில்லாமல் மக்கள் ஏராளமான தொல்லைக்கு ஆளானார்கள். பணம் மாற்றுவதற்காக வங்கிகளில் காத்துக் கிடந்தனர். சிறு, குறுந்தொழில்கள் அழிந்தன. பலர் மாண்டு போயினர். பெருமுதலாளிகளுக்கு ரிசர்வ் வங்கியிலிருந்து 2000 ரூபாய் புதிய தாள்கள் நேரடியாகவே வழங்கியுள்ளனர். அரசு எதிர் பார்த்த பலன் கிடைத்ததா என்றால் இல்லை என்பதுதான் பதில். ரூ.10,720 கோடி மட்டுமே வங்கிக்கு வராமல் போனத் தொகை. புதிய பணத்தாள்களை அச்சிட்ட வகையில் அரசுக்குச் செலவு 13,000 கோடி ஆகும். ஆனால் பணமதிப்பு நடவடிக்கையால் மக்கள் பெருந்துன்பங்களுக்கு உள்ளாயினர். சிறுகுறு தொழில்கள் பெருமளவில் நலிவுற்றன.

மோடி அரசு 2014இல் பதவி ஏற்ற பிறகு மாணவர் களுக்கோ, சிறு, குறு தொழில் நிறுவனங்களுக்கோ, வேளாண்மை தொழிலுக்கோ கடன் தள்ளுபடி எதையும் செய்ததில்லை. ஆனால் 2019இல் பெரு நிறுவனங்களுக்கு வரி குறைப்பு மட்டும் ஒரு இலட்சத்து நாற்பத்து அய்ந்தாயிரம் கோடி ரூபாய். 2022-2023ஆம் ஆண்டில் பெரு நிறுவனங்களுக்குக் கடன் தள்ளுபடி செய்த தொகை ஒரு இலட்சத்து ஒன்பது ஆயிரம் கோடி ஆகும். இப்படி பெருந்தொகை கடன் தள்ளுபடி செய்துவிட்டு பா.ச.க. கட்சிக்கு தேர்தல் பத்திரங்கள் மூலமும், நன்கொடையாகவும் பெருந் தொகையைப் பெற்றுக் கொள் கின்றனர். பா.ச.க. ஆட்சி முழுக்க முழுக்க கார்ப்பரேட் நிறுவனங்களைக் கொழுக்க வைக்கும் ஆட்சியாகவே உள்ளது. ஏழை மக்கள் வங்கிகளில் குறைந்தபட்ச இருப்புத் தொகை வைத்திருக்கவில்லை என்று கூறி அதற்கு தண்டம் விதித்து அம்மக்களை வயிற்றில் அடித்து பணக்காரர்களை வாழவைக்கின்றனர்.

ஆர்.எஸ்.எஸ். கொள்கைகளை நடைமுறைப்படுத்து வதற்கான முதற்கட்டப் பணிகளான ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டம், சமூகநீதியை ஒழித்துக் கட்டுவதற்காக உயர்சாதி ஏழைகளுக்கு 10 விழுக்காடு இடஒதுக்கீடு; சிறுபான்மை இசுலாமிய மக்களை அச்சுறுத்துவதற்காக குடிஉரிமை திருத்தச் சட்டம் பாபர் மசூதியை இடித்து அங்கு இராமர் கோயில் கட்டி மதவெறி அரசியலை ஊக்குவிப்பது; பல்வேறு மொழி, இனங்களை அழித்து இந்துராட்டிரம் அமைப்பதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து செய்து வருதல்; அதற்கு முதற்படி யாக இந்தி, சமற்கிருத மொழிகளைத் திணித்தல்; வருங் காலத்தில் மாநில கட்சிகளையும் ஒழித்து, மாநிலச் சட்ட மன்றங்களை ஒழித்து நாடாளுமன்றம் மட்டுமே என்ற நிலையை உருவாக்குதல்; அதன் முதல்கட்டமாக, காசுமீருக்கு அரசமைப்புச் சட்டத்தில் சிறப்புரிமை வழங்கப்பட்டு இருந்த பிரிவு 370ஐ நீக்கி மாநிலத் தகுதியை இழக்கச் செய்தது; இப்படி ஏராளமாக சொல்லிக் கொண்டே போகலாம். மொத்தத்தில் பாரதிய சனதா கட்சியென்பது மற்ற தேர்தல் கட்சிகளைப் போன்ற ஒரு கட்சி அல்ல; அது ஒரு பாசிசக் கட்சி.

இந்து சன்னியாசிகள், இந்து ராஷ்ட்டிரம் அமைப்பதற்கான அரசியல் சட்டத்தை எழுதி வருகிறார்கள். 14.8.2023 அன்று 32 பக்க அரசியல் அமைப்புச் சட்டத்தை வெளியிட்டார்கள். முதன்மையாக மூன்று செய்திகளைக் கூறியுள்ளார்கள். அவர்கள் அமைக்கவுள்ள இந்து இராட்டிரத்தில்,

1. தலைநகர் வாரணாசிக்கு மாற்றப்படும்.
2. முஸ்லிம்களுக்கும் கிறித்தவர்களுக்கும் வாக்குரிமை இல்லை.
3. இந்து மதத்தில் கூறப்பட்டுள்ள திரேதா யுகம், கிருதாயுகம், துவாபர யுகம் காலத்தில் பின்பற்றப்பட்ட சட்டமுறைகள் நடைமுறைப்படுத்தப்படும்.

இதன் பொருள் இன்றைக்கு உள்ள சனநாயகக் கட்ட மைப்பை அடியோடு ஒழித்துவிட்டு மீண்டும் மநுதர்ம ஆட்சிமுறைக்குக் கொண்டு செல்ல முயற்சி செய்கிறார்கள். ஆர்.எஸ்.எஸ். 1925இல் தொடங்கப்பட்டது. நூறு ஆண்டு களில் இந்துராட்டிரம் அமைக்க வேண்டும் என்பதே அதன் கொள்கையாக அறிவித்துக் கொண்டது. அவர்களுடைய காலக்கெடு நெருங்கிவிட்டது. ஆகவே வருகிற நாடாளு மன்றத் தேர்தலில் பா.ச.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால் அடுத்தமுறை நாடாளுமன்றத் தேர்தல் நடக்குமா? என்பதே கேள்விக்குறியாக உள்ளது.



எனவே நடைபெறவுள்ள நாடாளு மன்றத் தேர்தலில் பாசிச பார்ப்பனியப் பாரதிய சனதாக் கட்சியைத் தோல்வி அடையச் செய்ய வேண்டும். தமிழகத்தில் தி.மு.க. தலை மையிலான அணியை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்பதே சனநாயகத்திலும் சமத்துவத்திலும் சமூக நீதியிலும் பற்றுகொண்ட ஒவ்வொருவரின் கடமையாகும்.

07.04.2024 — வாலாசா வல்லவன்

# நரேந்திரரின் உறுதியளிப்பும் செய்த மோசடிகளும்
## (GUARANTEE AND FRAUD)



பேராசிரியர் **மு.நாகநாதன்**

உலகில் பல அறிவியல் அறிஞர்கள் அரசியல் தலைவர்கள் தங்களுடைய பங்களிப்பால் மானுட வரலாற்றில் முன்னேற்றத் திற்கான தடயங்களை அடையாளம் கண்டு அவற்றைத் தங்களுடைய அரும் பெரும் பணிகளால் மக்கள் நலனிற்காகப் பயன்படுத்திப் பெரும் சாதனைகளைப் படைத்துள்ளனர். குறிப்பாக 15ஆம் நூற்றாண்டு முதல் வரலாற்றுப் பக்கங்களை நோக்கினால் இன்று உலகம் காணும் அறிவியல் வளர்ச்சியும் தொழில்நுட்ப வளர்ச்சியும் மக்களாட்சிக் கருத்து களும் பல சிந்தனையாளர்களால் அரசியல் தலைவர்களால் உருவானது என்பது புலப்படுகிறது.

அவ்வரிசையில் இந்தியாவின் முதல் பிரதமரான நேரு பெரும் சாதனையாளராக என்றும் இந்திய வரலாற்றில் வலம் வருகிறார். நாட்டின் வளர்ச்சிக்கான அடித்தளங்களைப் பல அரிய வேளாண் தொழில் கட்டமைப்புகளைத் தனது ஆட்சிக்காலத்தில் உருவாக்கினார். அறிவியல் துறை, பொருளாதாரத்துறை, கல்வித் துறை ஆகியன நேரு காலத்தில் பொதுத்துறையின் வழியாக வளர்த்தெடுக்கப்பட்டன. நேரு பின்பற்றிய பொதுத் துறை சார்ந்த அறிவியல் வளர்ச்சிதான் உலகளவில் இன்று இந்தியா விண்வெளி ஆராய்ச்சியில் பெற்று வரும் வெற்றி களுக்குக் காரணமாக அமைகிறது.

காங்கிரசுக் கட்சியில் பயணித்த காலத்திலும் சரி அதற்குப் பின்பும் நேரு மீது தந்தை பெரியார் பல விமர்சனங்களை வைத்ததுண்டு. ஆனால் தந்தை பெரியார் நேரு மறைந்த போது ஆற்றிய இரங்கல் உரை நேருவின் ஆளுமையின் பன்முகத் தன்மையை விளக்குகிறது. 27.5.1964இல் சேலத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் தந்தை பெரியார் (அவர்) நேரு அடிச்சுவட்டைப் பின்பற்ற எல்லோரும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். நேரு அவர்கள் அருமையான திட்டத்தை நிறைவேற்ற முற்பட்டது அவருடைய திறமை என்றோ அல்லது அவருக்கு இருந்த செல்வாக்குக் கருதி வாய்ப்பு காரணமாக என்றோ மாத்திரம் கூறமாட்டேன். இவை எல்லாவற்றையும்விட அவர் ஒரு சிறந்த **தியாகி. தனக்கென்று எதையும் செய்து கொள்ளாதவர். தியாகம் என்று சொல்வதற்கே பொருள் தனக்கென்று எதையும் செய்து கொள்ளாமல் தொண்டாற்றுவதுதான். தியாகத்தைக் கூறிப் பலன் பெறப் பார்ப்பது வெறும் கூலித்தொண்டாகும்.** (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் முதல் வரிசை தொகுதி 6 பக்.3130 பதிப்பாசிரியர் வே.ஆனைமுத்து).

இத்தகைய மாபெரும் தலைவரை ஆர்.எஸ்.எஸ். சங்க பரிவாரங்கள் வெறித்தனமாகத் தொடர்ந்து தாக்கி வந்துள்ளன. இதன் தொடர்ச்சியாக நேருவின் சாதனைகளை மறைத்தும் நேரு உருவாக்கிய ஒன்றிய அரசின் திட்டக்குழுவைக் கலைத்தும் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் நேருவின் படமோ சிலையோ இடம் பெறாமல் செய்து ஆர்.எஸ்.எஸின் அடியாளாக பிரதமர் நரேந்திரர் நேருவின் அழியாப் புகழைச் சீர் குலைக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். பாஜக ஒன்றிய அரசின் தேர்தல் பத்திர ஊழல் இன்றைக்கு வெடித்துக் கிளம்பியுள்ளது. நேரு எங்கே? நரேந்திரர் எங்கே? என்று அரசியல் தளத்தில் இன்று கேள்வி எழுப்பப்படுகிறது. தந்தை பெரியாரின் உரையில் உள்ள நேருவைப் பற்றிய கருத்து கலங்கரை விளக்கத்தின் ஒளியாக அரசியல் கடலில் ஒளிர்கிறது. அன்றைய பிரதமர் நேரு தனது உறுதியளிப்புகளை வாரி இறைத்ததில்லை. ஆனால். விடுதலைப் போராட்டக்காலத்தில் கண்ட பட்டறிவைக் கொண்டு பல முன்னோடியான திட்டங்களை இந்தியாவிற்கு வழங்கியவர்.

ஆனால் பிரதமர் நரேந்திரர் கடந்த பத்தாண்டுகளில் அளித்த உறுதியளிப்புகளும் அவற்றை நிறைவேற்றாமல் திசை திருப்பும் திட்டங்களை வகுத்து இந்தியாவின் சமூகம் பொருளாதாரம் உட்பட அனைத்துத் தளங்களையும் சீரழித்து வருவதால் நரேந்திரர் அளித்த உறுதியளிப்பு என்பது திட்டமும் அல்ல அரசியலும் அல்ல மோசடி ஒன்றேதான் என்பதை இன்று மக்கள் உணரத் தொடங்கிவிட்டனர். ஊடகங்கள் நரேந்திரருக்குப் பயந்துகொண்டு விளம்பரப் பணத்திற்காக உண்மைகளை மறைத்து நரேந்திரர் செய்யும் பொய் பரப்புரைகளை முன்னிறுத்தலாம். ஆனால். இந்த ஊடகங்களும் தங்களின் செயல்களால் உண்மைச் செய்திகளை மறைத்து நரேந்திரரின் மோசடிகளுக்குச் சிறிதும் வெட்கமின்றி துணை போகின்றன.

ஊடகங்கள் எப்படி மூடி மறைத்தாலும் 2017ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தேர்தல் பணப்பத்திர (Electoral Bonds) ஊழல் இன்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பால் முடைநாற்றம் வீசும் சாக்கடையாக பாஜகவின் அரசியல் மாறிவிட்டதைத் தெளிவுபடுத்துகிறது. நரேந்திரர் ஆட்சியில் ஒன்றிய அரசினுடைய நிருவாகக் கருவிகளான வருமான வரித்துறை, அமலாக்கத்துறை, புலனாய்வுத் துறை ஆகிய அமைப்புகள் நடுநிலை தவறி அரசின் விதிகளை மீறி பாஜகவிற்கு நிதித் திரட்டும் அடியாட்களாக மாற்றப்பட்டமை ஜனநாயகத்தின் மீது விழுந்த பெருத்த அடியாகும். உலகின் எந்த ஜனநாயக நாட்டிலும் நடந்திராத அடாத செயலாகும். உள்ளத்திலே மோசடி, நடைமுறையில் நடிப்பு, உண்மைக்கு எதிரான உரைகள், கொடுத்த வாக்குறுதி களை மறைப்பதற்காக எதிர்க்கட்சிகள் மீதான அடாவடி நடவடிக் கைகள் ஆகியனதான் நரேந்திரரின் ஆட்சியில் நிறைவேற்றப் பட்ட காட்சிகள்.

பிரதமர் நரேந்திரரின் மற்றொரு ஊழல் எப்போது வெடிக்கும்? என்ற வினா பல சமூக ஆர்வலர்களால் எழுப்பப்படுகிறது. அதுதான் பிரதமரின் நலப்பாதுகாப்பு நிதியம்; (The Prime Minsiter Care Fund- The Prime Minister's Citizen Assistance and Relief in Emergency Situations

Fund). இந்த நிதியத்தின் கணக்கு வழக்குகளும் கமுக்கமாக பரம இரகசியமாகப் பாதுகாக்கப்படுகின்றன. யார் நிதி அளித்தார்கள் என்ன பயனைப் பெற்றார்கள் என்பதை மக்கள் அறிய ஆவலாக உள்ளனர். இங்கும் நீதியின் கண்கள் திறக்கப்பட வேண்டும் என்பது நல்லோர்களின் வேட்கையாக உள்ளது.

2014ஆம் ஆண்டிலும் 2019ஆம் ஆண்டிலும் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களின் போது நரேந்திரர் அளித்த உறுதியளிப்புகள் பலபல. அளித்த உறுதியளிப்புகள் நிறை வேற்றப்பட்டனவா? நாட்டின் நடப்புகளும் புள்ளி விவரங்களும் அளிக்கும் தகவல்கள் அதிர்ச்சியளிக்கின்றன.

2014ஆம் ஆண்டு ஆட்சிக்கு வரும் முன்பு தேர்தல் பரப்புரைகளில் நரேந்திரர் முழங்கிய ஆண்டுதோறும் 2 கோடி வேலைவாய்ப்புகளை இளைஞர்களுக்கு அளிப்பேன் என்கிற உறுதியளிப்புதான் முதல் மோசடி. ஆதற்கு மாறாக பல இலட்சக்கணக்கான இளைஞர்கள் வேலையின்றித் தவிக்கின்றனர். பல பொருளாதார வல்லுநர்கள் வேலையற்ற வளர்ச்சி (Jobless growth) வேலையிழந்த வளர்ச்சி (Jobloss growth) என்று நரேந்திரரின் ஆட்சியின் வேதனைகளைப் பற்றி வெளியிட்டு வருகின்றனர்.

கள்ளப் பணத்தை ஒழிப்பேன். வெளிநாட்டு வங்கிகளில் கள்ளத்தனமாக வைக்கப்பட்டுள்ள பணத்தொகையை எடுத்து வருவேன் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் வங்கிக் கணக்கிலும் ரூபாய் 15 இலட்சம் வரவு வைப்பேன் என்று வாய் கூசாமல் பேசிய மற்றொரு உறுதியளிப்பு என்னவாயிற்று?

இந்தியாவில் பணமதிப்பிழப்பு நடவடிக்கை என்பது புதிதல்ல. 1946இல் பிரித்தானியப் பேரரசு இந்தியாவை ஆண்ட போது ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று முதன்முதலாக அறிவித்து, கள்ளப்பணத்தைக் கட்டுப்படுத்தி விலைவாசி உயர்வையும் தடுத்தது.

1977இல் ஜனதா அரசு அமைந்து பிரதமராக மொரார்ஜி தேசாய் பணியாற்றிய காலத்தில் 1978ஆம் ஆண்டு ரூ.1000 ரூ.5000 ரூ.10000 நோட்டுகள் செல்லாது என்று அறிவித்தார். ஆனால் ஒன்றிய அரசு இந்த அறிவிப்பால் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகிவிடக்கூடாது என்பதில் பெரும் அக்கறை செலுத்தப் பட்டது. இந்திய ரிசர்வ் வங்கி மேற்குறிப்பிட்ட பணத்தாள்களை வைத்திருப்பவர்கள் முறையாகக் கணக்குக் காட்டி ரிசர்வ் வங்கி, வணிக வங்கிகள் வழியாகத் தங்கள் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவித்து அதற்குரியக் காலஅட்ட வணையையும் வெளியிட்டது.

எவ்வித, பதட்டமும் பயமும் இல்லாமல் முறையான வகையில் பணத்தை வைத்திருந்தவர்கள் மும்பை சென்னை கல்கத்தா போன்ற பெரு நகரங்களில் வரிசையில் நின்று தங்களுக்கு உரியப் பணத்தைத் திரும்பப் பெற்றனர். கணக்கில் வராத சில ஆயிரம் கோடி பணம் அரசிற்கு உரிய முறையில் சேர்ந்தது. இந்தப் பணமதிப்பிழப்பு நடவடிக்கை அன்று நடுத்தர சாமானிய மக்களைச் சிறிதளவும் பாதிக்கவில்லை.




ஆனால் 2016ஆம் ஆண்டு ரூ.500 ரூ.1000 பணத்தாள் மதிப்பிழப்பு நடவடிக்கையை ஒன்றிய பாஜக அரசு இரவோடு இரவாக அறிவித்தது. தனது அமைச்சரவையைக் கலந்து ஆலோசிக்காமல், குடியரசுத் தலைவராக இருந்த பிரணாப் முகர்ஜிக்குத் தெரிவிக்காமல், இந்திய மைய வங்கிக்கும் தெரிவிக்காமல் தான்தோன்றித்தனமாக இரவு நேரத்தில் தொலைக்காட்சி வழியாக அறிவிப்பை வெளியிட்டார். இந்த அதிரடி நடவடிக்கை பல இலட்சக்கணக்கான குடும்பங்களின் சேமிப்பைச் சிதைத்தது. எளிய மக்கள் கையிலே ரூ.500 வைத்திருந்தாலும் அந்தப் பணத்தை அன்றாடத் தேவைக்குப் பயன்படுத்த முடியவில்லை. வங்கிகளில் நீண்ட வரிசைகளில் நாள் முழுவதும் நின்றும் தங்களின் உழைப்பால் வந்த பணத்தை மாற்ற முடியவில்லை. பல நூற்றுக்கணக்கான ஏழை எளியோர் வங்கிகளின் வாசல்களிலும் சாலைகளிலும் மடிந்தனர். எந்த நாட்டிலும் நடக்காத ஒரு கொடுமையை நிறைவேற்றியவர் நரேந்திரர். 50 நாட்களில் பணமதிப்பிழப்பு நடவடிக்கையால் ஏற்பட்ட இழப்புகள் சீரமைக்கப்படும் இல்லையென்றால் என்னைத் தூக்கிலிடுங்கள் என்று நரேந்திரர் சூளுரைத்தார். கயிறு இங்கே நரேந்திரர் எங்கே? என்று பலர் சமூக வலைத்தளங்களில் எள்ளல் செய்ததுதான் மிச்சம்.

**இந்த நடவடிக்கையிலும் பெரும் ஊழலைச் சங்கிகள் செய்தனர். சான்றாக குஜராத்தில் அமித்ஷா இயக்குந ராக இருந்த அகமதாபாத் கூட்டுறவு வங்கியில் 5 நாட் களில் 745 கோடி ரூபாய் மாற்றப்பட்டது. அதே போன்று குஜராத்திலுள்ள 11 வங்கிகளில் 3115 கோடி ரூபாய் பணம் மாற்றப்பட்டது. இந்த இரு செய்திக ளும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வழியாகப் பெறப்பட்டன.**

நாட்டிற்கு நல்லதைச் செய்வேன் என்று நரேந்திரர் அளித்த உறுதியளிப்புகள் ஒவ்வொன்றாகச் சிதையத் தொடங்கின. இதற்கு மாறாக பணம் பதுக்கும் நடவடிக்கைகளும் பல குஜராத்திய முதலாளிகளின் கொட்டங்களும் பெருகின. பாஜக ஆட்சியில் பல பெரும் முதலாளிகள் வங்கிகளில் பல்லாயிரம் கோடிகளை மோசடி செய்துவிட்டு வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றனர். இன்று வரை ஒருவரைக் கூட உரியச் சட்ட நடவடிக் கைகளை மேற்கொண்டு இந்தியாவிற்குக் கொண்டுவர முடியவில்லை.

பங்குச் சந்தைதான் இந்தியாவினுடைய மூலதனச் சந்தையாகப் பலரால் போற்றப்படுகிறது. தேசியப் பங்குச் சந்தையில் முதலீடு செய்தால் தனிநபரும் பயன்பெறுவர். தொழில்களும் பெருகும், நாடும் வளரும் என்று நம்பிக்கை அளிக்கப்பட்டது. ஆனால் நரேந்திரர் ஆட்சியில் பங்குச் சந்தை அமைப்பிலேயே ஊழல் வெடிக்கத் தொடங்கியது. சான்றாக பங்குச் சந்தை அமைப்பில் பணியாற்றிய சித்ரா இராமகிருஷ்ணா பல இலட்சம் கோடிக்கு ஊழல் செய்தார் என்று தாமதமாகக் கைது செய்யப்பட்டார்.

2013ஆம் ஆண்டு சித்ரா இராமகிருஷ்ணா தேசியப் பங்குச்சந்தையின் மேலாண்மை இயக்குநர் மற்றும் முதன்மைச் செயல் அலுவலராகப் பதவி ஏற்றதிலிருந்து அவர் வைத்ததே சட்டம் என்ற நிலை உருவானது. தனக்கு ஆன்மிக குரு சிரோன்மணி என்றும் இவர் இமயமலையில் தவம் புரிகிறார் என்றும் அவரின் அறிவுறுத்தலின்படியே செயல்பட்டதாகவும் பல முடிவுகளை எடுத்ததாகவும் தெரிவித்தார். அவர் பயன்படுத்திய கணினி அமைப்புகளுக்கு ரிக் வேதம், சாம வேதம் என்றும் பெயரிட்டு மின்னஞ்சல் வழியாகச் சித்து விளையாட்டுகளை இமயமலை சித்தபுருஷ் யோகியுடன் விளையாடியுள்ளார். போதிய கல்வித் தகுதியும் நிதி நிறுவனங்களில் பணியாற்றிய முன்னனுபவமும் இல்லாத ஆண்டு ஊதியம் சில இலட்ச ரூபாயாகப் பெற்ற ஆனந்த் சுப்ரமணியத்தைக் கோடிக்கணக்கில் ஆண்டு ஊதியம் அளித்துத் தனக்குத் துணை உயர் அலுவலராக நியமித்துக்கொண்டார்.

கணினி வழியாகப் பங்குச்சந்தையின் ஏற்ற இறக்கங்கள் இரகசியங்கள் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறார் என்று சிங்கப்பூரைச் சேர்ந்த பங்குச்சந்தையில் ஈடுபட்ட ஒருவர் குறிப்பிட்டதைத் தொடர்ந்து இரு பத்திரிக்கையாளர்கள் ஆய்வு மேற்கொண்டு ஊழல்களை வெளியிட்டபிறகுதான் செபி மற்றும் ஒன்றிய அரசின் புலனாய்வுத் துறை மெல்ல மெல்ல தங்களின் கவனத்தைத் தேசியப் பங்குச்சந்தையின் மீது திருப்பியது. ஒன்றிய புலனாய்வுத் துறை ஆனந்த் சுப்ரமணியத்திடம் கடுமையான முறையில் விசாரணையை மேற்கொண்ட பிறகுதான் அந்த இமயமலை யோகி ஆனந்த சுப்ரமணியம் தான் என்பது ஊடகங்களில் வெளி வந்தது. இதற்குப் பிறகு பல நாட்கள் கழித்துத்தான் சித்ரா இராமகிருஷ்ணா கைது செய்யப்பட்டார். இதே நாடகத்தைத்தான் இன்றும் நமது நரேந்திரர் ஆடி வருகிறார். கடலுக்கு அடியில் கிருஷ்ணரைத் தேடுகிறார்.

நரேந்திரரின் நண்பர் அதானி செய்த மோசடிகளை ஊழல்களை அமெரிக்காவின் ஹிண்டன்பர்க் அறிக்கை அம்பலப்படுத்தியது. இந்த ஊழல் தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது ஒன்றிய அரசு என்ன செய்திருக்க வேண்டும்? உச்ச நீதிமன்றத்தின் பார்வையில் விசாரணைக்குழு ஒன்று அமைத்து விசாரணை செய்வதற்கு நாங்கள் முழு ஒத்துழைப்பும் தருவோம் என்றல்லவா கூறியிருக்க வேண்டும். இறுதியில் உச்ச நீதிமன்றமே அதானி பங்குச் சந்தை மோசடிகளை செபி அமைப்பே விசாரிக்கும் என்ற ஒரு தீர்ப்பை அளித்தது. சித்ரா இராமகிருஷ்ணா ஊழல் சித்து விளையாடிய அமைப்பு எப்படி அதானி செய்த ஊழல்களை விசாரித்து உண்மையைக் கொண்டு வர முடியும் என்ற கேள்வி இன்றும் பலரால் எழுப்பப்பட்டு வருகிறது.

நரேந்திரர் குஜராத் முதலமைச்சராக இருந்த போது மாநிலங்களின் உரிமைகளை ஒன்றிய அரசு ஒவ்வொன்றாகப் பறித்து வருகிறது என்று நீட்டி முழங்கினார். நரேந்திரர் மாநிலச் சுயாட்சிக்காக இட்ட முழக்கங்கள் இன்றும் சமூக வலைத் தளங்களில் உலா வருகின்றன. ஆனால் நரேரந்திரர் பிரதமர் ஆன பிறகு மாநிலங்களின் உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டு வருகின்றன.

மாநிலங்களின் வரி உரிமைகளைப் பறித்துச் சரக்கு சேவை வரி விதிப்பு முறையை 2017இல் பாஜக அரசு நடைமுறைப் படுத்தியது. இந்த வரி விதிப்பு சிறுகுறு நடுத்தர உற்பத்தி நிறுவனங்களை வீழ்ச்சியடைச் செய்தது. மேலும் ஏழை நடுத்தர மக்களின் மீது தாங்க முடியாத அளவிற்கு வரிச் சுமை ஏற்றப்பட்டது. அவர்களின் சிறிய அளவிலான குடும்பச் சேமிப்பு மீது கூட வரி விதிக்கப்பட்டது. இந்திய மக்கள் அனைவரும் வங்கிக் கணக்குகள் தொடங்க வேண்டும் என்று பிரதமர் பல முறை வேண்டுகோள் விடுத்தார். அரசின் பல நலத்திட்டங்கள் இந்த வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதை நம்பிப் பல இலட்சம் ஏழை மக்கள் வங்கிக் கணக்குகளைத் தொடங்கினர். ஆனால் குறைந்த அளவு வைப்புத் தொகை இந்த ஏழை மக்களின் வங்கிக் கணக்குகளில் இல்லாத காரணத்தால் கடந்த நிதியாண்டில் ஏழை எளியோர்க்குத் தண்டமாக 21000 கோடி ரூபாயை விதித்துப் பொதுத்துறை, தனியார்த் துறை வங்கிகள் இந்த மக்களின் பணத்தைச் சூறையாடியுள்ளன.

**1960களில் நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் குடும்பச் சேமிப்பு 20 விழுக்காடாக இருந்து 2021இல் 17 விழுக்காடாகச் சரிந்தது. 2022இல் நாட்டின் ஒட்டு மொத்த உற்பத்தியில் 5.5 விழுக்காடாக குடும்பச் சேமிப்பு வீழ்ச்சியடைந்துள்ளது. ரூபாய் மதிப்பில் குறிப்பிட வேண்டுமென்றால் 2021இல் குடும்பச் சேமிப்பு 34 இலட்சம் கோடியாக இருந்தது. 2022-23இல் 17 இலட்சம் கோடியாகச் சரிந்துள்ளது. கடந்த 50 ஆண்டு களில் காணாத சரிவாக இது உள்ளது. மேலும் நடுத்தரக் குடும்பத்தினரின் கடன் சுமை பெருமளவில் பெருகியுள்ளது. வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்களில் குடும்பப் பிரிவினர் (household sector) ஜுலை 2022 வரை 36 இலட்சம் கோடிகளைக் கடனாகப் பெற்றுள்ளனர். ஜுலை 2022 முதல் ஜுலை 23 வரை இந்தக் கடன் எண்ணிக்கை 47 இலட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. மேற்குறிப்பிட்ட குடும்பச் சேமிப்பு வீழ்ச்சிக்கும் குடும்பக் கடனுக்கும் உள்ள தொடர்பை ஆய்ந்து பார்த்தால் ஏழை நடுத்தரப் பிரிவினர் பொருளாதார வீழ்ச்சியில் சரிந்து வருகின்றனர் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். அதே நேரத்தில் பொதுத் துறை வங்கிகளிடமிருந்து பெரு முதலாளிகள் கடனாகப் பெற்ற ரூபாய் 10 இலட்சம் கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.**

மன்மோகன் சிங் பிரதமராக இருந்த காலத்தில் ஒன்றிய அரசால் மாநிலங்களின் நிதி பங்களிப்போடு நிறைவேற்றப்படும் பல திட்டங்கள் எவ்வகையில் செயல்படுகின்றன என்பதை மதிப்பீடு செய்து பரிந்துரை செய்ய ஒன்றியத் திட்டக்குழு உறுப்பினரான பி.கே. சதுர்வேதி தலைமையில் ஒரு குழு உருவாக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கையில் ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் இணைந்து செயல்படும் பல திட்டங்களைச் செயல்படுத்தும் போது உள்ள குறைகள் சுட்டிக்காட்டப்பட்டன. 1967ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்ட இவ்வகை ஒன்றிய மாநில அரசுகள் இணைந்து அளிக்கும் திட்டங்கள் பெருமளவில் பெருகி வருவதைக் குறைக்க வேண்டும் என்று பல மாநில முதல்வர்கள் தேசிய வளர்ச்சிக்குழு கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் நரேந்திரர் 2022லிருந்து தேர்தல் கண்ணோட்டத்தோடு ஒன்றிய அரசு நேரடியாக நடைமுறைப்படுத்தும் 73 திட்டங்களை அறிவித்தார். அவற்றில் 10 முதன்மையான திட்டங்களுக்கு 1.5 இலட்சம் கோடி அளவிற்கு ஒன்றிய அரசின் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பது மாநில அரசுகளுக்கு அறிவிப்பதும் இல்லை. தெரிவிப்பதும் இல்லை. இது மாநில அரசுகள் மீது தொடுக்கப்பட்ட பெரும் தாக்குதலாகும்.

ஏற்கெனவே நிதிச்சுமையால் பாதிக்கப்பட்டு வரும் மாநிலங்கள் தங்களின் மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றுவதில் பல இடையூறு களையும் பின்னடைவுகளையும் சந்தித்து வருகின்றன. ஆனால் நேரடியாக ஒன்றிய அரசு நிறைவேற்றும் திட்டங்கள் சரி வரக் கண்காணிப்பில்லாமல் பெரும் நிர்வாகச் சீர்கேடுகளும் ஊழல்களும் இத்திட்டங்களில் காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் மாணவர்களுக்கு ஒன்றிய அரசு அளிக்கும் நிதி உதவிகள் எந்தெந்த மாவட்டங்கள் பள்ளிகள் கல்லூரிகளுக்குச் சென்றன போன்ற தகவல்கள் மாநில அரசிற்குத் தெரிவிக்கப்படுவதில்லை. ஏற்கெனவே சதுர்வேதி குழு மாநில ஒன்றிய அரசுகள் இணைந்து நிறைவேற்றும் திட்டங்களின் அளவையும் குறைக்க வேண்டும் என்ற பரிந்துரையை மீறி ஒன்றிய அரசு மாநில அரசுகளின் திட்டமிடல் கொள்கையையும் நிதி ஒதுக்கீடு கூறுகளையும் சிதைத்து வருகிறது. சான்றாக மன்மோகன் சிங் பிரதமராக இருந்த போது நடைமுறைப் படுத்தப்பட்ட காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கு நிதி உதவி தொடர்ந்து குறைக்கப்பட்டு வருகிறது. எதிர்க்கட்சி ஆளும் மாநிலமான மேற்கு வங்கத்தில் கடந்த இரண்டாண்டுகளாக இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என்பதை அண்மையில் மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி குறிப்பிட்டிருந்தார். தமிழ் நாட்டிலும் இத்திட்டத்திற்கான நிதியுதவி குறைக்கப்பட்டு வருகிறது. கல்விக்காக ஒன்றிய அரசு நேரடியாக அளிக்கும் நிதியுதவி தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்ட மாநிலத்திற்கு மட்டுமே நிதியுதவி செய்யப்படுகிறது.

ஆனால் ஒன்றிய அரசு நடைமுறைப்படுத்தும் திட்டங்களில் எவ்வளவு ஊழல்கள் பெருகி வருகின்றன என்பதை 2023ஆண்டு இந்தியத் தலைமைக் கணக்கு உயர் அலுவலரின் அறிக்கை சுட்டுகின்றது. எடுத்துக்காட்டாக தேசிய நெடுஞ்சாலைகளைக் கட்டமைக்கும் பணிகளில் நடைபெற்ற பெரும் ஊழலை




வெளிப்படுத்தியது. பாரத்மாலா திட்டத்தின் கீழ் துவாரக விரைவு நெடுஞ்சாலை அமைக்கும் பணிக்கான செலவு ஒரு கிலோ மீட்டருக்கு ரூபாய் 18 கோடி என்று கணக்கிடப்பட்டுத் திட்டம் தொடங்கியது. ஆனால் ஒரு கிலோ மீட்டர் சாலை அமைக்கும் பணிக்கு 250 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு கிலோ மீட்டர் சாலையில் மட்டும் 232 கோடி ரூபாய் மக்களின் வரிப் பணம் சூறையாடப்பட்டுள்ளது. ஹிண்டன்பர்க் அறிக்கை அளித்த அதானி ஊழலை விஞ்சியது பாரத்மாலா திட்டத்தில் நடைபெற்ற மாபெரும் ஊழல்.

பிரதமரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் நடைபெற்ற மோசடியும் ஊழலும் இதுவரை இந்தியா கண்டிராதது. 7,50,000 நபர்கள் ஒரேயொரு அலைபேசி எண்ணில் பதிவு செய்யப் பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான இறந்தவர்களை உயிரோடு இருந்து இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின் வழியாக மருத்துவச் சிகிச்சை பெற்றுப் பயன் பெற்றார்கள் என்று போலிக் கணக்குக் காட்டிப் பெரும் பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது. 88,760 நோயாளிகள் சிகிச்சை பெற்றார்கள் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

### வடக்கு வாழ்கிறது; தெற்கு சுரண்டப்படுகிறது

தென் மாநிலங்களில் இருந்து அதிக வரி வருவாயை எடுத்துக்கொண்டு குறைந்த நிதியைத் தென் மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு அளித்து வருகிறது. 2023ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் உள்ள புள்ளிவிவரப்படி வருமான வரி வழியாக வருகின்ற வருமானம் 11.9 விழுக்காட்டிலிருந்து 16.4 விழுக்காடு கடந்த ஆறாண்டுகளில் உயர்ந்து வருகிறது. மகாராஷ்டிரா, தில்லி, கர்நாடகா, தமிழ்நாடு, குஜராத், ஆந்திரம், மேற்கு வங்கம் ஆகிய ஏழு மாநிலங்கள் வருமான வரி வழியாக ஒன்றிய அரசிற்குக் கிடைக்கும் வருவாயில் 5இல் 4 பங்கினை அளிக்கின்றன. மற்ற மாநிலங்கள் ஒரு பங்கினை மட்டுமே அளிக்கின்றன. இதைத் தென் மாநில முதல்வர்கள் கேட்டால் வடக்கு தெற்கு என்று பிரிக்கிறார்கள் என்று நரேந்திரர் பதறுகிறார்.

நரேந்திரர் அரசியல் பாடத்தில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால் 1983ஆம் ஆண்டிலேயே நிதிக்குழுக்களின் பரிந்துரையால் தென் இந்திய மாநிலங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்று கர்நாடக மாநிலத்தின் அன்றைய முதல்வராக இருந்த இராமகிருஷ்ண ஹெக்டே தென்னக முதல்வர்கள் மாநாட்டைக் கூட்டினார். தமிழ்நாட்டு முதல்வர்

எம்.ஜி.ஆர். ஆந்திர முதல்வர் என்.டி.ஆர். பாண்டிச்சேரி முதல்வர் இராமச்சந்திரன் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். 9ஆவது நிதிக்குழுத் தனது பரிந்துரையில் தென் மாநிலங்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றினர். ஆனால் எல்லா நிலைகளிலும் நரேந்திரர் ஆட்சியில் ஒன்றிய அரசு தூய்மை இந்தியா திட்டம், சீர்மிகு நகர் திட்டம், திறன் வளர்ப்பு திட்டம் போன்ற பல திட்டங்களை அறிவித்து அதற்குரிய நிதியை ஒதுக்காமல் முறையாகக் கண்காணிக்காமல் பல இலட்சம் கோடி ரூபாய் திட்டங்கள் பெரும் ஊழல்களிலும் தோல்வியிலும் முடிந்துள்ளன.

கடந்த பத்தாண்டுகளில் பெரும் முதலாளிகளுக்கு வங்கி கடன் முதல் வரிச்சலுகை வரை எல்லா அரசுத் துறைகளிலும் வழங்கியது காரணமாக நரேந்திரர் ஆட்சியில் அதானி அம்பானிகள்தான் பெரும் பணக்காரர்களாக மாறி உலகப் பணக்காரர்கள் வரிசையில் இடம் பெற்று வருகின்றனர். ஏற்றத்தாழ்வுகள் நிலை பற்றிய புள்ளி விவரங்களின்படி இந்தியாவின் ஒரு விழுக்காட்டுப் பணக்காரர்களிடம் நாட்டின் 40 விழுக்காட்டுச் சொத்துகள் குவிந்துள்ளன. 60 விழுக்காட்டு அடித்தட்டு மக்களிடம் 3 விழுக்காடு சொத்துகள் மட்டுமே உள்ளன. அதே நேரத்தில் 50 விழுக்காட்டு அடித்தட்டு மக்களின் சரக்கு சேவை வரி பங்களிப்பு 64 விழுக்காடாகும். 10 விழுக்காட்டுப் பணக்காரர்களின் சரக்கு சேவை வரி பங்களிப்பு 3 விழுக்காடே உள்ளது.

சமூக நீதி பொருளாதார நீதி முற்றிலுமாக நரேந்திரர் ஆட்சியில் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன.

நரேந்திரரின் உறுதியளிப்புகள் ஏழைகளின் வாழ்க்கையில் ஏற்றங்களை அளிக்கவில்லை. ஏமாற்றங்களையே அளித்துள்ளன. நரேந்திரரின் உறுதியளிப்புகள் மோசடியில்தான் முடிவுறுகின்றன (Narendra Modi's promises end in fraud) என்பதைப் புள்ளிவிவரங்கள் சுட்டுகின்றன. ❖

# தோழர் வே.ஆனைமுத்து 3ஆம்ஆண்டு நினைவு நாள்



பெரியாரியலை ஒரு மெய்யியலாக நிலை கொள்ளச் செய்தவர்.

1993முதல் நடைமுறைக்கு வந்த ஒன்றிய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு 27% கிடைத்திட அடிகோலியவர்.

2008முதல் நடைமுறையில் உள்ள ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு 27% இட ஒதுக்கீடு கிடைத்திடத் தூண்டுகோலாக விளங்கியவர்.

தமிழ் நாட்டு அரசுப் பணிகளிலும் கல்வி நிலையங்களின் சேர்க்கையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 1980முதல் 31% இல் இருந்து 50% உயர்த்தி அளிக்கப்பட அடிப்படைக்காரணராக விளங்கியவர் தோழர் வே.ஆனைமுத்து ஆவார்.

**தோழர் வே.ஆனைமுத்து கருத்துகளை நினைவேந்துவோம்!**
**அவர் வழியில் செயல்பட உறுதிகொள்வோம்!**

# ஊழலுக்கும் கருப்புப் பணத்திற்கும் சட்ட ஏற்பளிக்கும் மோடியின் தேர்தல் பத்திரத் திட்டம்




- சா.குப்பன்

15.02.2024 அன்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட், நீதிபதிகள் சஞ்சீவ் கன்னா, பி.ஆர். கவாய், ஜே.பி. பர்திவாலா, மனோஜ் மிச்ரா ஆகிய அய்வர் அடங்கிய அரசமைப்புச் சட்ட ஆயம் வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்பு அளித்துள்ளது. பா.ச.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட '2018ஆம் ஆண்டுத் தேர்தல் பத்திரத் திட்டம்', அரசமைப்புச் சட்டத்தின் கூறு 19(1)(a)விற்குப் புறம்பானது. ஆகையால் அத்திட்டம் முற்றாகச் செல்லாது என 5 நீதிபதிகள் ஆயம் ஒருமித்தத் தீர்ப்பளித்தது.

மேலும் தேர்தல் பத்திரத் திட்டத்தின் தேர்தல் பத்திரங்களை விற்பனைச் செய்திடும் பொறுப்பையும் பத்திரங்களைப் பணமாக்கி அரசியல் கட்சிகளின் கணக்குகளில் சேர்த்திடம் பணியையும் ஏற்றிருந்த ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா (S.B.I.)வுக்கும் தேர்தல் ஆணையத்திற்கும் கீழ்க்காணும் உத்தரவினையும் பிறப்பித்தது.

(அ) தேர்தல் பத்திரம் வாங்கியவர்கள் விவரம், பத்திரத்தின் மதிப்பு, வாங்கிய நாள் அடங்கிய விவரத் தொகுப்பினைத் தனியான ஒன்றாகவும்;

(ஆ) பத்திரத்தைப் பணமாக்கிக் கொண்ட அரசியல் கட்சி, பத்திரத்தின் விவரம் மற்றும் பணமாக்கிய நாள் ஆகிய விவரத் தொகுப்பினைத் தனியான ஒன்றாகவும்;




21 நாள்களுக்குள் தேர்தல் ஆணையத்திற்கு அளித்திட வேண்டும். தேர்தல் ஆணையம் அவ்விவரங்களைத் தேர்தல் ஆணையத்தின் வலைதளத்தில் வெளியிட வேண்டும்.

ஒன்றிய அரசின் 2017-18க்கான வரவு-செலவுத் திட்டத் தினை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த போது, 28.01.2017 அன்று 'தேர்தல் பத்திரத் திட்டம்' என ஒன்று நிதிச் சட்ட முன்வரைவாக அறிமுகப்படுத்தப்பட்டது. 02.01.2018 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

தேர்தல் பத்திரத் திட்டத்தைச் செல்லாதென அறிவிக்கக் கோரி ஜனநாயகச் சீர்திருத்தங்களுக்கான சங்கம் (ADR) உச்சநீதிமன்றத்தில் நீதிப்பேராணை கோரும் வழக்கை (Writ Petition (Civil)) எண்.880/2017அய் தாக்கல் செய்தது. மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சியும் இதே நோக்கத்திற்காக (W.P.) வழக்கு எண்.59/2018 தாக்கல் செய்தது. காங்கிரசுக் கட்சியின் மத்தியப் பிரதேச மகளிர் காங்கிரசுத் தலைவர் ஜெயா தாகூரும் இதேபோல் ஒரு பொது நல வழக்கினை உச்சநீதிமன்றத்தில் தொடுத்தார்.

இந்த வழக்கில் தான் ஏழு ஆண்டுகளுக்குப் பின் மேற்சுட்டியத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

### தேர்தல் பத்திரத் திட்ட நிறைவேற்றம்

இத்திட்டம் கொண்டு வரப்பட்டபோது கூறப்பட்ட நோக்கங்கள் :

1. கருப்புப் பணத்தை ஒழிப்பது.
2. எதிர்காலத்தில் கருப்புப் பண உருவாவதைத் தடுப்பது.
3. அரசியல் கட்சிகளுக்கு ஊர்-பேர் தெரியாத வகையில் பணமாக நிதியளிப்பதை ஒழிப்பது.
4. அரசியல் கட்சிகளுக்கு நிதியளிப்பவர்கள் அடையாளத்தைத் தெரிவிக்க வேண்டியதில்லை என இருந்ததால் அவர்கள் வழங்கும் கருப்புப் பணத்தை அரசியல் கட்சிகள் தங்கள் கணக்கில் காட்டி, வருமான வரிவிலக்குப் பெற்று வந்த முன்பிருந்த முறையினால் கருப்புப் பணம் நிறம் மாறுவதைத் தடுப்பது.
5. நியாயமானத் தேர்தல்கள் நடைபெற்றிட அரசியல் கட்சிகள் நிதி பெறும் முறையில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்துவது.

இத்திட்டத்திற்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது. இத்திட்டம் மாபெரும் ஊழலுக்குச் சட்ட வடிவம் என்பது தவிர வேறு என்ன?

தேர்தல் பத்திரத் திட்டத்தின் பிரிவு 7(4)இல் தேர்தல் பத்திரத்தை விற்பனை செய்வதற்கான ஸ்டேட் வங்கிக் கிளை, பத்திரத்தை வாங்கியவர் மற்றும் பணமாக்கிய கட்சி ஆகிய விவரங்களை கமுக்கமாக வைத்திருக்க வேண்டும். மற்றும் உச்சநீதிமன்றமோ அல்லது குற்றவியல் வழக்குப் பதிந்து, விசாரணை செய்யும் அமைப்போ கோரினால் தவிர வேறு எந்த அதிகார அமைப்புக்கும் தகவல்களைத் தெரிவிக்கக் கூடாது எனக் கூறப்பட்டுள்ளது.

இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட தொடக்க நிலையிலேயே ரிசர்வ் வங்கியும் தேர்தல் ஆணையமும் தங்கள் மறுப்புக் கருத்துகளைத் தெரிவித்தன.

### ரிசர்வ் வங்கியின் கருத்துகள்

தேர்தல் பத்திரத் திட்டம் நிதிச் சட்டமாக நிறைவேற்றப் படுவதற்கு முன்பே ரிசர்வ் வங்கியின் அப்போதைய ஆளுநர் உர்ஜித் பட்டேல் 2017 சனவரியில் பின்வரும் மாறுபட்டக் கருத்துகளைத் தெரிவித்து நிதி அமைச்சகத்திற்கு எழுதினார்.


1. தேர்தல் பத்திரம் வெளியிடுவதற்கான சிறப்புத் தேவை இல்லை.
2. தேர்தல் பத்திரங்கள் வெளியிடுவதாக இருந்தால் அதனை ரிசர்வ் வங்கிதான் வெளியிட வேண்டும். வணிக வங்கிகள் வெளியிடுவது ஒன்றிய அரசின் நம்பகத் தன்மையை பாதிக்கும்.
3. பணத்தாள் போல கையில் வைத்திருப்பவரைச் சார்ந்ததாக (bearer bond) தேர்தல் பத்திரங்களை வெளியிடாமல் மின்னணு ஆவணமாக வெளியிடல் வேண்டும்.
4. 2002ஆம் ஆண்டு பணப்பரிமாற்ற மோசடித் தடுப்புச் சட்டத்தின் கொள்கைகளை பாதிக்கும்.
5. கருப்புப் பணப் புழக்கத்தை அதிகரிக்கும்.

ரிசர்வ் வங்கித் தெரிவித்த மேற்காணும் கருத்துகளை ஒன்றிய அரசு புறந்தள்ளியது.

### தேர்தல் ஆணையத்தின் கருத்துகள்

26.05.2017இல் தேர்தல் ஆணையம் சட்டம்-நீதித் துறை அமைச்சகத்திற்கும் நிதி அமைச்சகத்திற்கும் எழுதிய கடிதத்தில் பின்வரும் கருத்துகளைத் தெரிவித்தது.

1. நன்கொடைகளின் வெளிப்படைத் தன்மையைப் பொறுத்தவரை இது ஒரு பிற்போக்கு நடவடிக்கை ஆகும்.
2. கார்ப்பரேட் நிறுவனங்கள் சட்டத்தில் குறிப்பிட்ட அரசியல் கட்சிகளுக்கு அளிக்கும் நன்கொடை விவரங்களை வெளியிட வேண்டும். நிறுவனங்களின் ஆண்டு ஆதாய - இழப்புக் (Profit & Loss) கணக்கில் நிறுவனம் அரசியல் கட்சிகளுக்கு வழங்கும் நன்கொடை நிதி பற்றி அரசியல் கட்சி வாரியாக அறிவிக்க வேண்டும். ஆனால் தேர்தல் பத்திரத் திட்டத்தில் இது நீக்கப்பட்டுவிட்டது. அதனால் நிதி அளிப்பதில் வெளிப்படைத் தன்மை கேள்விக் குட்படுத்தப்படும்.




3. பெரு நிறுவனங்கள் வரம்பில்லாமல் அரசியல் கட்சிகளுக்கு நிதியளிப்பது கருப்புப் பணப் புழக்கத்தை அதிகரிக்கும். ஆகையால் கார்ப்பரேட் நிறுவனங்கள் நிதியளிப்பதற்கு உச்சவரம்பு நிர்ணயித்திருந்த முந்திய விதியை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டும் எனப் பரிந்துரைத்தது.

தேர்தல் ஆணையத்தின் மேற்காணும் பரிந்துரைகளை ஒன்றிய அரசு புறக்கணித்தது.

### உச்சநீதிமன்ற விசாரணை - முதல் கட்டம்

2017இலும் 2018இலும் தேர்தல் பத்திரத் திட்டம் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்பதால் செல்லாது என அறிவித்திடுமாறு உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டன.

12.04.2019 அன்று உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய், நீதிபதிகள் தீபக் மிச்ரா, சஞ்சீவ் கன்னா அடங்கிய அமர்வு, நன்கொடையாளர்கள், நன்கொடைகள் மற்றும் கணக்கு எண்கள் விவரத்தை முத்திரையிட்ட உறையில் அளித்திடுமாறு உத்தரவிட்டது. 13.04.2019 அன்று உச்சநீதிமன்ற அமர்வு “இந்த வழக்கு முக்கியத்துவமானதுதான்; ஆனால் தடை உத்தரவு பிறப்பிக்க முடியாது” என்று கூறிவிட்டது.

### உச்ச நீதிமன்றத்தின் விசாரணை - 2ஆம் கட்டம்

வழக்குத் தொடுத்தவர்கள் சார்பில் 2019 நவம்பரிலும் 2020 அக்டோபரிலும் வழக்கை விசாரித்திடுமாறு கோரினர். மீண்டும் 2021 தொடக்கத்தில் வழக்குத் தொடுத்த ஜனநாயகச் சீர்திருத்தங்களுக்கான சங்கம் (ADR) புதிதாகத் தேர்தல் பத்திரங்கள் விற்பனைக்கு தடை விதித்திடுமாறு கோரியது. அப்போதையத் தலைமை நீதிபதி எஸ்.ஏ.போப்டே, நீதிபதிகள் ஏ.எஸ். கோபன்னா, வி. இராமசுப்பிரமணியன் அடங்கிய அமர்வு 26.03.2021 அன்று தடைவிதிக்க மறுத்துவிட்டது.

மோடி தலைமையிலான ஒன்றிய அரசின் சட்டங்கள், திட்டங்கள் குறித்த வழக்குகளில் உச்ச நீதிமன்றத்திற்கு உள்ள ஊசலாட்டமான மனநிலையையே இது காட்டுகிறது.

### உச்ச நீதிமன்றத்தின் இறுதி விசாரணை

2017 மற்றும் 2018இல் தேர்தல் பத்திரத் திட்டம் செல்லாது என அறிவிக்குமாறு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்த ஜனநாயகச் சீர்திருத்தங்களுக்கான சங்கம், மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சி மற்றும் காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த ஜெயா தாகூர் ஆகியவர்கள் சார்பில் 2024இல் நாடாளுமன்ற மக்களவைக்குப் பொதுத் தேர்தல் நடைபெற உள்ளதால், அதற்கு முன்னதாக வழக்கு விசாரணையை நடத்துமாறு 16.10.2023 அன்று உச்சநீதிமன்றத்தில் கோரப்பட்டது.

தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட், நீதிபதிகள் சஞ்சீவ் கன்னா, பி.ஆர். கவாய், ஜே.பி. பர்திவாலா, மனோஜ் மிச்ரா ஆகியோர் அடங்கிய அரசமைப்புச் சட்ட ஆயம் 31.10.2023, 01.11.2023, 02.11.2023 ஆகிய மூன்று நாள்கள் தொடர்ந்து விசாரணை நடத்தியது. தீர்ப்புரைப்பது தள்ளிவைக்கப்பட்டது.

15.02.2024 அன்று அய்ந்து நீதிபதிகள் ஆயம் கருத்தொருமித்தத் தீர்ப்புரையை அறிவித்தது.

### தீர்ப்புரையின் சாரம்

ஒன்றிய அரசின் 2018ஆம் ஆண்டு தேர்தல் பத்திரத் திட்டம் அரசமைப்புச் சட்டத்தின் கூறு 19(1)(அ)வுக்கு எதிரானது என்பதாலும் வாக்காளர்களின் தகவல் அறியும் உரிமையை மீறுவதாக உள்ளதாலும் அத்திட்டம் செல்லாது என அறிவிக் கப்பட்டது. ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா தேர்தல் பத்திர விற்பனையை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது.

12.04.2019 முதல் விற்பனை செய்யப்பட்ட தேர்தல் பத்திரங்கள் விவரங்களையும் பணம் பெற்ற அரசியல் கட்சிகளின் விவரங்களையும் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா 06.03.2024க்குள் தேர்தல் ஆணையத்திற்கு அளித்திடல் வேண்டும்; தேர்தல் ஆணையம் ஸ்டேட் வங்கி அளிக்கும் விவரங்களை 13.03.2024க்குள் தேர்தல் ஆணையத்தின் வலைதளத்தில் வெளியிடல் வேண்டும் என உச்சநீதிமன்றம் 15.02.2024 அன்று உத்தரவிட்டது.

### நீதிமன்ற அவமதிப்பு வழக்கு, விசாரணை, தீர்ப்பு

உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்து 18 நாள்கள் கடந்த பின் 05.03.2024 அன்று ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா தீர்ப்பில் அறிவுறுத்தியத் தகவல்களை அளிப்பதற்கு 30.06.2024 வரை 4 மாத காலக்கெடு தேவை என உச்சநீதிமன்றத்தில் முறையிட்டது. அந்த முறையீட்டை உச்சநீதிமன்றம் 11.03.2024 அன்று விசாரிப்பதாக அறிவித்தது.

உச்சநீதிமன்றம் 15.02.2024 அன்று அறிவித்தத் தீர்ப்புரையில் கூறியிருந்தவாறு ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா 06.03.2024 அன்றுக்குள் விவரங்களை அளிக்கத் தவறிவிட்டது. எனவே, இவ்வழக்கைத் தொடுத்த ஜனநாயகச் சீர்திருத்தங்களுக்கான சங்கம் சார்பில் வழக்குரைஞர் பிரசாந்த் பூஷன் 07.03.2024 அன்று நீதிமன்ற அவமதிப்பு வழக்கிற்கான விண்ணப்பத்தினை (எண்.138/2024) தாக்கல் செய்தார். மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சியும் நீதி மன்ற அவமதிப்பு வழக்கு (எண்.140/2024) தாக்கல் செய்தது.

மேற்குறிப்பிட்ட வழக்குகளை ஏற்கெனவே தீர்ப்பளித்த அய்ந்து நீதிபதிகள் ஆயம் 11.03.2024 அன்று விசாரித்தது. நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தொடர்ந்தவர்கள் சார்பில் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவின் தலைமை, தீய எண்ணத்துடன் தீர்ப்பை ஏற்க மறுக்கும் தன்மையிலும் பொறுப்பற்ற வகை யிலும் கூறும் காரணங்கள் ஏற்கத் தகுந்தவை அல்ல என வாதிடப்பட்டது. நீதிபதிகளும் ஸ்டேட் பேங்க் சார்பில் எடுத்து ரைத்த காரணங்கள் ஏற்கத்தக்கவை அல்ல என வங்கியின் முறையீட்டைத் தள்ளுபடி செய்தனர்.

15.02.2024 முதல் 11.03.2024 வரை 26 நாள்களாக வங்கித் தலைமை என்ன செய்து கொண்டிருந்தது என்றும் வினவப்பட்டது. ஸ்டேட் வங்கிக்கு 22,100 கிளைகள் இருந்தாலும் தேர்தல் பத்திர விற்பனையில் ஈடுபட்ட கிளைகள் 19 மட்டுமே. அவற்றுள் 14 கிளைகள் மட்டுமே பணமாக்கும் பணியில் ஈடுபட்டவை ஆகும். 25 அரசியல் கட்சிகளே தேர்தல் பத்திரத்திற்கு என கணக்குகள் தொடங்கி உள்ளன. தேர்தல் பத்திரம் தொடர்பான மின்னணு முறைத் தகவல் தொழில்நுட்ப அமைப்பு நிறுவிட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா ரூ.1.5 கோடியை செலவிட்டுள்ளது. இத்தகவல்கள் விசாரணையின் போது வெளிப்பட்டவை ஆகும்.

13.04.2019 முதல் தேர்தல் பத்திரங்கள் விற்பனை மற்றும் பணமாக்கப்பட்டத் தகவல்களை - பத்திரங்கள், தொகை, வாங்கிய நிறுவனங்களின் பட்டியல் பணமாக்கிக் கொண்ட அரசியல் கட்சிகளின் பெயர் ஆகியவற்றை ஸ்டேட் வங்கி 12.03.2024 அன்று வேலை நேரம் முடிவதற்குள் தேர்தல் ஆணையத்திற்கு அளித்திட வேண்டும். தேர்தல் ஆணையம் பெற்ற தகவல்கள் அனைத்தையும் தேர்தல் ஆணையத்தின் வலை தளத்தில் 15.03.2024 மாலை 5 மணிக்குள் வெளியிட வேண்டும் என உச்சநீதிமன்ற அய்ந்து நீதிபதிகள் ஆயம் உத்தரவிட்டு நீதிமன்ற அவமதிப்பு வழக்கை முடித்து வைத்தது.

### தேர்தல் பத்திர விவர வெளியீட்டில் குறைபாடும் நீதிமன்றத்தின் உத்தரவுகளும்

உச்ச நீதிமன்றத்தின் ஆணையின்படி 14.03.2024 அன்று தேர்தல் ஆணையம் வெளியிட்டத் தகவல்கள் முழுமையாக இல்லை.

(அ) 01.03.2018 முதல் 11.04.2019 வரையில் தேர்தல் பத்திரங்களை வாங்கியவர்கள் மற்றும் பணமாக்கிய அரசியல் கட்சிகள் விவரம் வெளியிடப்படவில்லை. 12.04.2019க்குப் பின் உள்ள தகவல்கள் மட்டுமே வெளியிடப்பட்டன.

(ஆ) தேர்தல் பத்திரங்களில் இடம்பெற்ற தனித்தன்மையான எழுத்து எண்கள் விவரத்தை ஸ்டேட் வங்கி தேர்தல் ஆணையத்திற்குத் தெரிவிக்காததன் காரணமாக வெளியிடப்படவில்லை.

எனவே உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஆயம் 15.03.2024 அன்று தகவல்கள் முழுமையாக வெளியிடாதது பற்றி வினவியது. இதற்கு 01.03.2018க்கும் 11.04.2019க்கும் இடையிலான தகவல்கள் அனைத்தின் மூல ஆவணங்கள் உச்சநீதிமன்றத்தின் 12.04.2019 இடைக்காலத் தீர்ப்பின்படி முத்திரை இடப்பட்ட 106 உறைகள் மற்றும் 523 உறைகள் அடங்கியப் பெட்டிகள் உச்சநீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்டு விட்டன. எனவே இத்தகவல்களை ஸ்டேட் வங்கி தேர்தல் ஆணையத்திற்கு அளித்திட இயலவில்லை எனக் கூறப்பட்டது.

இத்தகவல்களின் படிகள் ஸ்டேட் வங்கியிடம் இருக்கும் என நீதிமன்றம் கருதியதால் அத்தகவல்களும் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. நீதி மன்றத்திடம் உள்ள குறிப்பிட்ட அனைத்து ஆவணங்களையும் மேலும் காலத்தாழ்வைத் தவிர்க்க நீதிமன்ற நிர்வாகமே 16.03.2024 சனிக்கிழமை அன்றே ஸ்கேன் செய்து எண்மியப் படியும் (digitised copy) சேர்த்து அளிக்குமாறு உத்தரவிட்டது.

17.03.2024 அன்று தேர்தல் ஆணையத்தின் வலை தளத்தில் வெளியிடப்பட்ட தகவல்களில் 12.04.2019க்கு முந்தியத் தேர்தல் பத்திரங்கள் பற்றியத் தகவல்கள் இடம் பெற்றிருந்தனவே தவிர, பத்திரங்களில் உள்ள தனித்தன்மை எழுத்துடன் கூடிய எண்கள் விவரம் இடம்பெறவில்லை.


எனவே 18.03.2024 அன்று இவ்வழக்கைத் தொடர்ந்து விசாரணை செய்த நீதிபதிகள் ஆயம் நீதிமன்றத்திற்கு நேர்மையாகவும் நியாயமாகவும் நடந்துகொள்ளுமாறு ஸ்டேட் வங்கித் தலைமையை அறிவுறுத்தியதுடன் கீழ்க்காணும் உத்தரவினைப் பிறப்பித்தது.

01.03.2018 முதல் 14.2.2024 முடிய வாங்கப்பட்ட, பணமாக்கிய தேர்தல் பத்திரங்களில் இடம்பெற்றுள்ள தனித்தன்மை எழுத்து எண் உள்ளிட்ட அனைத்து விவரங் களுடன் தகவல்களை முழுமையாக ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா தேர்தல் ஆணையத்திற்கு அளித்துவிட்டு, விவரங் களை முழுமையாக அளித்துவிட்டதற்கான உறுதிமொழியை ஸ்டேட் வங்கியின் தலைவர் தினேஷ்குமார் காரா 21.08.2024 அன்று உச்சநீதிமன்றத்திடம் அளிக்குமாறு உத்தரவிட்டது.

ஸ்டேட் வங்கி அளித்த முழுத் தகவல்களுடன் முழுமை யானப் பட்டியல் தேர்தல் ஆணையத்தின் வலைதளத்தில் 21.03.2024 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்றம் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா நிர்வாகத் தலைமையிடம் நீதிமன்றத்திடம் நேர்மையாகவும் நியாய மாகவும் (candid and fair to the court) நடந்துகொள்ளுமாறு சொல்லும் அளவிற்குத் தீயநோக்குடன் நடந்துகொள்ள என்ன காரணம்?

ஓரிரு நாள்களில் அளிக்கக் கூடியத் தகவல்களை அளித்திட 136 நாள்கள் அதாவது பொதுத் தேர்தல் முடியும் வரை காலக்கெடு கேட்டது யாரைக் காப்பாற்றிட?




நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் உச்சநீதிமன்றம் இருமுறை அறிவுறுத்தியும் கூட 15.02.2024 தீர்ப்பு நாளில் இருந்து 20.03.2024 வரை 33 நாள்கள் காலம் கடத்தியே ஸ்டேட் வங்கி தேர்தல் ஆணையத்திற்கு முழுத் தகவல்களை அளித்தது எதனால்? போன்ற வினாக்கள் மக்கள் மனதில் எழும் அல்லவா?

மோடி ஆட்சி கொடுத்த அழுத்தமே இதற்கும் காரணம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்றதாகும்.

**தேர்தல் பத்திரங்கள் பற்றி வெளியானத் தகவல்களில் இருந்து அறியத் தக்கவற்றில் முக்கியமானவை :**

2018ஆம் ஆண்டு தேர்தல் பத்திரத் திட்டம் செல்லாது எனத் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி வெளி யிடப்பட்டுள்ளத் தகவல்கள் மூலம் முக்கியமாக அறியத்தக்கவை.

**ஆளும் பா.ச.க.விற்கு தேர்தல் பத்திரம் மூலமாக நன்கொடை அளித்து, பின்னர் அரசிடமிருந்து ஒப்பந்தம் அல்லது சலுகைப் பெற்று இலாபமடைதல் ஒருவகை. ஒப்பந்தம் அல்லது சலுகை பெற்ற பின்னர் தேர்தல் பத்திரம் வாங்கி நன்கொடை அளிப்பது மற்றொரு வகையாகும்.**

**சட்ட விரோதப் பணப் பரிமாற்றத் தடுப்புச் செய லாக்க இயக்குநரகம் (E.D.), நடுவண் புலனாய்வுச் செயலகம் (CBI), வருமான வரித்துறை ஆகிய இவற்றை அனுப்பி நிறுவனங்களைத் திடீர் சோதனை நடத்துவதன் மூலம் மிரட்டுதல்; அதன்பின் அந்த நிறுவனங்கள் தேர்தல் பத்திரம் மூலம் நிதி அளித்திடல் இன்னொரு வகையாகும். அதன்பின் திடீர் சோதனை நடத்தியது தொடர்பானத் தொடர் நடவடிக்கையோ வழக்கோ காணாமல் போகும்!**

**மற்றொரு வகை, போலி நிறுவனங்கள் தொடங் கப்படுவது; அந்த நிறுவனத்திற்கு இலாபமே இருக்காது. ஆனால் தேர்தல் பத்திரம் மூலம் ஆளும் பா.ச.க. விற்கு நிதியளிக்கப்படும்.**

மேற்காண்பவைப் பற்றி மிகச் சுருக்கமாகப் பார்ப்போம்.

**நிதி அளித்து ஒப்பந்தம் பெறல் - ஒரு சான்று**

ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த பா.ச.க. மாநிலங்கள் அவை உறுப்பினர் சி.எம். இரமேஷ் என்பவர். இவருக்குச் சொந்தமான நிறுவனம் ரித்விக் புராஜக்ட்ஸ் பிரைவேட் லிமிடட் (RPPL) என்பது.

இவர் திரிபுரா, மேகாலயா, நாகலாந்து ஆகிய மாநிலச் சட்டமன்றங்களுக்கு 2023 பிப்பிரவரியில் தேர்தல் நடைபெற ஒரு மாதத்திற்கு முன் ரூ.5 கோடிக்குத் தேர்தல் பத்திரம் மூலம் நிதி அளித்தார். அதுவரை நிலுவையில் இருந்த இமாசலப் பிரதேசத்தில் 302 மெகாவாட் மின் உற்பத்திக்கான சன்னி நீர்மின் திட்டத்திற்கு ஒன்றிய அரசின் பொருளாதாரப் பணிகளுக்கான அமைச்சர்கள் குழு கூடி 04.01.2023இல் ஒப்புதல் அளித்தது.

சன்னி நீர்மின் திட்டத்திற்கு பொறியியல், கொள்முதல், கட்டுமானப் பணிகளுக்கான ரூ.1048 கோடி ஒப்பந்தம் சி.எம். இரமேஷின் ரித்விக் புராஜக்ட்ஸ் நிறுவனத்திற்கு 14.01.2023 அன்று வழங்கப்பட்டது. பட்டியலிடப்பட்ட ஒப்பந்தக்காரர்களுள் இடம்பெற்றிராத நிறுவனம் ரித்விக் புராஜக்ட்ஸ் பி.லிட் ஆகும். இதற்குக் கைம்மாறாக இரமேஷின் (RPPL) நிறுவனம் 11.04.2023 அன்று மேலும் ரூ.40 கோடிக்கான தேர்தல் பத்திரம் வாங்கியது (The Hindu 17.03.2024).

பா.ச.க. மோடியின் ஒன்றிய அரசிடமிருந்தும் பா.ச.க. ஆளும் மாநில அரசுகளிடமிருந்தும் ஒப்பந்தங்களோ, திட்டப் பணிகளோ பெறுவதற்கு முன்பாக ரூ.551 கோடி நிதி அளித்து 3 மாதங்களில் ரூ.1.32 இலட்சம் மதிப்பிலான ஒப்பந்தங்கள் பெற்றுள்ளதாக காங்கிரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயராம் ரமேஷ் கூறியுள்ளார். இதை முன்தண்டல் (Prepaid) எனக் கிண்டல் செய்துள்ளார்.

ஒன்றிய அரசின் பா.ச.க. ஆளும் மாநில அரசுகளிடமிருந்து ரூ.62 ஆயிரம் மதிப்புள்ள ஒப்பந்தங்கள் அல்லது திட்டப் பணிகள் பெற்ற 3 மாதங்களில் ரூ.580 கோடி தேர்தல் பத்திரங்கள் வழியாக பா.ச.க. நிதி பெற்றுள்ளது என்றும் ஜெயராம் ரமேஷ் கூறியுள்ளார். இதனை பின்தண்டல் (Post paid) எனப் பகடி செய்துள்ளார் (The Hindu, 24.03.2024).

**நிதியளித்து சுரங்கத் தொழிலில் சலுகைகள் பெற்றிடல் - ஒரு சான்று**

பெருமுதலாளி அனில் அகர்வாலின் வேதாந்தா நிறுவனம் ரூ.226 கோடி தேர்தல் பத்திரம் மூலம் பா.ச.க.வுக்கு நிதி வழங்கியுள்ளது. மற்ற சில கட்சிகளும் பெற்றுள்ளன. வேதாந்தா அளித்த மொத்த நன்கொடை ரூ.400.65 கோடி ஆகும்.

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகம், சுற்றுச்சூழல் பாதிப்புப் பற்றி பொது மக்கள் கருத்து கேட்காமலே சுரங்கத் தொழிலில் உள்ள நிறுவனங்கள் தங்கள் உற்பத்தியை 50 விழுக்காடு அதிகரித்துக் கொள்ளலாம் என விதியைத் தளர்த்தியது.

இராசத்தான் மாநிலம் பார்மர் மாவட்டத்தில் இயங்கிவரும் வேதாந்தாவின் ஆயில் & கேஸ் நிறுவனம் எண்ணெய், எரிவாயு எடுத்திட ஒன்றிய பா.ச.க. அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்திடம் மேலும் 10 ஆண்டுகளுக்கு அதாவது 2030 வரை அனுமதியை நீட்டித்துப் பெற்றுள்ளது.

ஒடிசாவில் உள்ள அலுமினியம் உருக்காலை, கோவாவில் உள்ள இரும்புத் தாதுச் சுரங்கம் என பலவகையில் நன்மைகள் பெற்றுள்ளது.

எந்த நிறுவனமும் பா.ச.க. மோடியின் ஒன்றிய அரசிடமிருந்து ஆதாயம், சலுகை பெறாமல் தேர்தல் பத்திரம் மூலம் பா.ச.க.விற்கு பணத்தை அளித்திடவில்லை என்பது கண்கூடு. ஆளும் பா.ச.க. தங்களுக்கு நன்கொடை அளித்த நிறுவனங்களுக்குச் சார்பாக அரசு கொள்கை முடிவெடுத்து சலுகைகள் அளிக்கின்றது என்பதற்கு வேதாந்தா ஒரு சான்று.

**திடீர் சோதனைகளும் தேர்தல் பத்திர நிதி அளிப்பும்**

| | நிறுவனங்கள் | சோதனை நாள் | தேர்தல் பத்திரம் வாங்கிய நாள் | பா.ச.க. பெற்ற தொகை |
|---|---|---|---|---|
| 1. | டி.எல்.எப். | 25.1.19 | 19.10.19 | தகவல் இல்லை |
| 2. | தேவிஸ் லேப் | 19.2.19 | 5.7.23 | ரூ.30 கோடி |
| 3. | ஹெட்ரோ டிரக்ஸ் | 9.10.21 | 7.11.22 | ரூ.10 கோடி |
| 4. | ஹால்டியா எஞ்சினியரிங் | 20.3.20 | 4.10.21 | தகவல் இல்லை |
| 5. | பியூச்சர் கேமிங் | 2.4.22 | 7.4.22 | தகவல் இல்லை |
| 6. | மைக்ரோ லேப் | 4.7.22 | 10.10.22 | ரூ.6 கோடி |
| 7. | கல்பதரு புராஜக்ட் | 4.8.23 | 10.10.23 | ரூ.25.50 கோடி |
| 8. | ஷிர்டி சாய் எலக்ரிகல் | 19.12.23 | 11.1.24 | ரூ.40 கோடி |
| 9. | அரபிந்தோ பார்மா | 10.11.23 | 5.11.23 | ரூ.34.50 கோடி |
| 10. | எம்.எஸ்.என். | - | - | ரூ.16 கோடி |
| 11. | மேன்கைண்ட் பார்மா | - | - | ரூ.24 கோடி |
| 12. | மைஹோம் இன்பரா | - | - | ரூ.5 கோடி |

**தங்கள் இலாபத்தைவிட அதிகமாக நிதி அளித்த நிறுவனங்கள்**

| | நிறுவனங்கள் | தேர்தல் பத்திர நிதி ரூ.கோடியில் | நிகர இலாபம் 2019-23 ரூ.கோடியில் | 4 ஆண்டு இலாபத்தில் விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | பியூச்சர் கேமிங் & ஓட்டல் சர்வீசு | 1,368 | 215 | 635% |
| 2. | குவிக் சப்ளை செயின் | 410 | 110 | 374% |
| 3. | அய்.எப்.பி. அக்ரோ | 92 | 175 | 53% |
| 4. | ஹால்டியா எனர்ஜி | 377 | 1013 | 37% |
| 5. | தாரிவால் இன்பரா | 115 | 476 | 24% |
| 6. | மெகா எஞ்சினியரிங் (MEIL) | 966 | 6,392 | 15% |

மேற்காட்டியதில் பா.ச.க. பெற்ற நன்கொடை

குவிக் சப்ளை செயினிடமிருந்து ரூ.375 கோடி 91.5%

மெகா எஞ்சினியரிங்கிடமிருந்து ரூ.584 கோடி 60%

தேர்தல் பத்திரத் திட்டம் 2018இல் நடைமுறைக்கு வருவதற்கு முன் நிறுவனங்கள் தங்களின் 3 ஆண்டு இலாபத்தில் 7.5% மட்டுமே அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்கலாம் என உச்சவரம்பு இருந்தது. பா.ச.க. ஆட்சி 2018இல் நிறுவனங்கள் சட்டம் (Companies Act) பிரிவுகள் 154 மற்றும் 182 ஆகிய இரு பிரிவுகளையும் நீக்கிவிட்டது.

**அரசியல் கட்சிகள் தேர்தல் பத்திரம் மூலம் பெற்ற நிதி**

| | | |
|---|---|---|
| பா.ச.க. | ரூ.6986.5 | கோடி |
| திரிணாமுல் காங்கிரஸ் | ரூ.1592 | கோடி |
| காங்கிரஸ் கட்சி | ரூ.1334 | கோடி |
| பாரத் இராஷ்டிரிய சமிதி | ரூ.1322 | கோடி |
| பிஜு ஜனதா தளம் | ரூ.944.5 | கோடி |
| தி.மு.க. | ரூ.656.5 | கோடி |
| ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் | ரூ.442.8 | கோடி |
| தெலுங்கு தேசம் | ரூ.181.35 | கோடி |
| சமாஜ்வாதி | ரூ.14.05 | கோடி |

தேர்தல் பத்திரங்களின் வழியாக அல்லாமல் 2013-23க்கு இடையும் நிறுவனங்கள் அரசியல் கட்சிகளுக்கு ரூ.7,726 கோடிகள் நிதி அளித்துள்ளன. இதில் 64.7% சுமார் ரூ.5000 கோடியை பா.ச.க. பெற்றுள்ளது. (Business Line 21.03.2024)

**கருப்புப் பணம் எப்படி உருவாகின்றது?**

சட்டப்படி அதிக இலாபம் அடைய வழியில்லாத போது சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் அதிக இலாபம் அடைவதால் வரும் வருமானமே கருப்புப் பணம். இந்த முறைகேடு, முறை சார்ந்ததாக ஆக்கப்பட்டுவிட்டது.

தேர்தல் பத்திரம் வழியாக அரசியல் கட்சிகளுக்கு நிதி அளித்தவர்கள் யார்? இது ஆட்சியதிகாரத்தில் உள்ளவர்களுக்கு கையூட்டு அன்றி வேறுஎன்ன?

வரம்பில்லா இலாபம் அடைவதற்குத் தொழிலதிபர்கள் நிதியை வாரி வழங்குகின்றனர்.

**கருப்புப் பண உருவாக்கத்திற்குக் காரணம் யாது?**


கொள்கை வகுக்கும் இடத்தில் அமர்ந்திருக்கும் உயர் வகுப்பு அறிவாளிகள் (?) அதற்கு ஏற்பவே கொள்கைகளை வகுக்கின்றனர். ஆட்சியாளர்கள் வகுக்கும் கொள்கைகளும் கொள்கைகளைச் செயற்படுத்தும் அதிகார அமைப்புமே கருப்புபண உருவாக்கத்திற்குக் காரணம். செல்வாக்குப் படைத்த பெருமுதலாளிகள் நலனே நாட்டு நலனாக முன்னிறுத்தப்படுகின்றது.

இந்த கருப்புப் பணம் ஜனநாயகத்தை அரித்து பொருளற்றதாக்கிவிட்டது. மேற்குறிப்பிட்டவர்களே ஜனநாயகத்தை நலிவடையச் செய்துவிட்டனர். இந்தத் தேர்தல் பத்திரத் திட்டம் ஊழலின் ஒரு பகுதியை சட்டப்பூர்வமாக்கியது. இத்திட்டத்தை ஒழித்துவிட்டதாலேயே தேர்தல்கள் நியாயமாக நடைபெறும் என்று எதிர்பார்ப்பது பகற்கனவே.

இந்தப் போக்கை எதிர்த்து நின்று ஜனநாயக வழிமுறைகளைப் பாதுகாப்பதற்கு மாறாகப் பணிந்துபோகும் நிலப்பிரபுத்துவ மனப்பான்மை வளர்க்கப்படும் நிலையை மாற்றுவோம்!

பார்ப்பனிய பிற்போக்குப் பாசிச பாசக-வை ஆட்சியதிகாரத்திலிருந்துத் தூக்கி எறிவோம்! ❖

## மார்க்சிய-தமிழ்த் தேசிய தோழர் இராசேந்திர சோழன் மறைவு



இராசேந்திர சோழன் ஆசிரியர் பணியில் இருந்த காலம் முதலே மார்க்சிய இயக்கங்களில் இயங்கி வந்தார். பெ.மணியரசன் அவர்களுடன் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியில் பயணித்தார். பின்பு கருத்து முரண்பாடு காரணமாக வெளியேறி மண்மொழி இதழை நடத்தினார். தமிழ்ப் படைப்பாளிகள் சங்கம், தமிழ் உரிமைக் கூட்டமைப்பு உள்ளிட்ட இயக்கங்களில் களப்பணி ஆற்றியும் எழுதியும் பேசியும் தமிழ்மொழி இன விடுதலைக்குப் பாடுபட்டு வந்தார். சில ஆண்டுகள் உடல்நலமின்றி இருந்தார். அவருடைய மகன் நீதிபதி பார்த்திபன் வீட்டில் 1.3.2024 வெள்ளிக்கிழமை அன்று மறைவுற்றார். அன்று மாலை அவருடைய உடல் மருத்துவமனைக்குக் கொடையாக அளிக்கப்பட்டது. மா.பெ.பொ.க. சார்பில் பொதுச் செயலாளர் தி. துரை சித்தார்த்தன் அவருடைய தமக்கை நீதிபதி மலர் வாலண்டினா இருவரும் அன்றிரவு அவர் இல்லம் சென்று அவருடைய மகனுக்கு ஆறுதல் கூறினர்.

# உழவர் வாழ்வுரிமையைக் காக்க வேளாண் விளைபொருள்கள் விலைக்குச் சட்ட ஏற்பு வழங்கு!



க. முகிலன்

1765இல் கிழக்கிந்திய வணிகக் குழுமம் வங்காளத்தில் வரி வசூலிக்கும் உரிமையைத் தனதாக்கிக் கொண்டது முதல் இந்தியாவின் பொருளாதாரம் பன்னாட்டு மூலதனத் துடன் இணைக்கப்பட்டதாகிவிட்டது. இரண்டாம் உலகப் போருக்குப் பின், மூன்றாம் உலக நாடுகளின் மீதான அய்ரோப்பிய நாடுகளின் ஆட்சியதிகாரம் முடிவுற்றது. ஆயினும் வணிகம், நிதி மூலதனம் ஆகியவற்றின் மீதான ஆதிக்கம் நீடித்தது. இதுவே மறுகாலனிய ஆதிக்கம் எனப் படுகிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் அமெரிக்காவின் தலைமையில் முதலாளித்துவ நாடுகள் ஒரு முகாமாகவும், சோவியத் நாட்டின் (U.S.S.R.-சோசலிச சோவியத் குடியரசு களின் ஒன்றியம்) தலைமையில் சோசலிச நாடுகள் எதிர் முகாமாகவும், வளர்ச்சியில் பின்தங்கிய-காலனிய ஆட்சியி லிருந்து விடுதலை பெற்ற நாடுகள் மூன்றாம் உலக நாடுகள் எனவும் இருந்தன.

1990இல் சோவியத் ஒன்றியம் 15 நாடுகளாகச் சிதறுண்டது. சோசலிச ஆட்சி முறையும் வீழ்ந்தது. கம்யூனிஸ்ட் நாடாக அறியப்பட்ட சீனாவும் முதலாளிய உற்பத்தி முறையை நோக்கி நகர்ந்தது. இந்தப் பின்னணியில், முதலாளித்துவ நாடுகளின் முன்னெடுப்பில், உலக அளவில் தடையற்ற வணிகம் அனைத்து நாடுகளின் வளர்ச்சிக்கு வழிகோலும் என்கிற முழக்கத்தை முன்னிறுத்தி 'காட்' (GATT) ஒப்பந்தம் - நீண்ட காலம் (1986-94) பேச்சு வார்த்தைக்குப் பின்-1994இல் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தைச் செயல்படுத்த உலக வணிக அமைப்பு (WTO) உருவாக்கப்பட்டது. இதன் அடிப்படைக் கோட்பாடு தாராளமயம், தனியார்மயம், உலகமயம் என்பதாகும். இத்திட்டத்தின் உருவாக்கத்தில் பன்னாட்டு நிறுவனங்கள் முதன்மையான பங்காற்றின.

1991இல் இந்தியாவின் தலைமை அமைச்சராக பி.வி. நரசிம்மராவும் நிதி அமைச்சராக மன்மோகன் சிங்கும் பொறுப்பேற்றது முதல் ஒன்றிய அரசு தாராளமயம், தனியார் மயம், உலகமயம் கொள்கையைத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது. மாநில அரசுகளும் இதையே பின்பற்றுகின்றன. இதனால் இந்தியாவில் அந்நிய முதலீட்டுக்கான தடைகள் நீக்கப்பட்டதுடன் பன்னாட்டு நிறுவனங்களுக்குப் பலவகை யான சலுகைகள் வழங்கப்பட்டன. சேவைத் துறைக்கும் தொழில் துறைக்கும் அரசுகள் முதன்மை அளித்தன. மகிழுந்து, இருசக்கர வாகனங்கள், சரக்கு ஊர்திகள், குளிர் சாதனப் பெட்டிகள், கணினி, கைப்பேசி முதலானவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் பெருகின. தகவல் தொழில் நுட்பப் பூங்காக்கள் உருவாயின. இதன் விளைவாக வேளாண் தொழிலும் உழவர் நலனும் அரசுகளால் புறக்கணிக்கப்பட்டன.

இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், டீசல், கூலி முதலானவை தொடர்ந்து உயர்ந்து கொண்டே வந்தன. இதனால் பயிர்ச்சாகுபடியின் உற்பத்திச் செலவு அதிகமாயிற்று. ஆனால் உழவர்களின் விளைச்சலுக்குப் போதிய இலாபம் கிடைக்கும் வகையில் கொள்முதல் விலை உயரவில்லை. ஒரு குறிப்பிட்ட பயிரின் எடுத்துக்காட்டாக நெல் விளைச்சல் அதிகமாக இருக்கும் போது சந்தையில் கொள்முதல் விலை மிகவும் குறைந்துவிடுகிறது. பயிரிடு வதற்குச் செலவிட்ட தொகையைக் கூட பெற முடியாத நிலை ஏற்படுகிறது. வறட்சி, பெருமழை, வெள்ளம், பூச்சிகள் தாக்குதல் போன்ற காலங்களிலும் இத்தகைய அவல நிலை ஏற்படுகிறது. உழவர்களின் இழப்புகளை ஈடுகட்டவும், போதிய வருவாய் பெறவும் உரிய ஏற்பாட்டை அரசுகள் செய்யவில்லை. அதனால் நாள்தோறும் இந்தியாவில் நூற்றுக்கணக்கில் உழவர்கள் கடன் சுமையைத் தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொள்கின்றனர். கடந்த முப்பது ஆண்டுகளில் 1,50,000 உழவர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.

இருக்கின்ற தொழில்களிலேயே வேளாண்மை மட்டுமே உறுதியான விளைச்சலோ, உறுதியான விலையோ கிடைக்காத ஒன்றாக இருக்கிறது. பிற உற்பத்திப் பொருள்களுக்கு அதிகபட்ச விற்பனை விலை (Maximum Retail Price - MRP) என்பதை நுகர்வோர் நலன் கருதி நிர்ணயிக்கும் அரசு, விளைபொருள் களுக்கு உழவர்களுக்குப் போதிய வருவாய் தரக்கூடிய






வகையில் விலை நிர்ணயிப்பதில்லை. வேளாண்மையைச் சார்ந்து வாழும் உழவர்கள், வேளாண் தொழிலாளர்கள் எண்ணிக்கை மக்கள் தொகையில் 60 விழுக்காடாகும். இழப்புகளுக்கும் இன்னல்களுக்கும் தொடர்ந்து உள்ளாகி வரும் உழவர்கள் தங்கள் விளைபொருள்களுக்கு, தங்கள் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் வகையில் விலை நிர்ணயம் செய்து செயல்படுத்த வேண்டும் என்று கடந்த முப்பது ஆண்டுகளாகக் கோரி வருகின்றனர். பல போராட்டங்களையும் நடத்துகின்றனர்.

பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான நாடுகளின் கூட்டமைப்பு (OECD), "2000 முதலே இந்திய உழவர்கள் இழப்பைச் சந்தித்து வருகின்றனர்; பெரிய பொருளாதாரம் கொண்ட 54 நாடுகளில் ஆய்வு செய்ததில் உழவர்களின் இழப்பை ஈடுசெய்ய வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்காத ஒரே நாடு இந்தியா தான்" என்று கூறியுள்ளது. பெருமுதலாளிகள் அரசின் கொள்கைகளை வகுப்பதில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றனர். அரசியல் கட்சிகளுக்குக் கோடிக் கணக்கில் நன்கொடை தருகின்றனர். அதற்குக் கைம்மாறாக தங்கள் தொழிலையும், இலாபத்தையும் பெருக்கிக் கொள்கின்றனர். ஆனால் உழவர்கள் இதுபோல் அரசில் செல்வாக்குச் செலுத்த இயலாது என்பதால் உழவர்களின் கோரிக்கைகளை அரசு செவிமடுப்பதில்லை. ஏழைச் சொல் அம்பலமேறுவதில்லை அல்லவா!

2018-2019இல் ஒன்றிய அரசின் புள்ளிவிவரப்படி, ஒரு வேளாண் குடும்பத்தின் சராசரி மாத வருவாய் ரூ.10,218/- ஆகும். இது தேசிய சராசரியைவிட ரூ.310 குறைவாகும். உழவர்களில் 85 விழுக்காட்டினராக உள்ள சிறு குறு உழவர்களின் மாத வருவாய் இன்னும் தாழ்ந்த நிலையில் இருக்கும். எனவே இந்திய மக்கள் தொகையில் பெரும்பான்மையினராக உள்ள உழவர்கள், வேளாண் தொழிலாளர்கள் வறுமையிலும், கடன் தொல்லையிலும் உழல்கின்றனர் என்பதையே இது காட்டுகிறது.

கடந்த முப்பது ஆண்டுகளாக உழவர்களின் முதன்மையான கோரிக்கை குறைந்தபட்ச ஆதரவு விலையில் (Minimum Support Price - MSP - எம்.எஸ்.பி.) தங்கள் விளைபொருள்களைக் கொள்முதல் செய்ய வேண்டும் என்பதே ஆகும். குறைந்தபட்ச ஆதரவு விலையை (எம்.எஸ்.பி.) வேளாண் விளைபொருள்களுக்கு அரசு நிர்ணயிப்பது என்கிற நடைமுறை கடந்த அறுபது ஆண்டுகளாக இருந்து வருகிறது. ஆனால் இந்த எம்.எஸ்.பி. போததாகவும், உறுதியுடன் செயல்படுத்தப்படாததாகவும் இருக்கின்றது.

1950களின் இறுதியிலும் 1965, 66ஆம் ஆண்டுகளிலும் வறட்சி காரணமாக விளைச்சல் வீழ்ச்சியடைந்தது. கடுமையான உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. அதனால் அமெரிக்காவிலிருந்து பெருமளவில் கோதுமை இறக்குமதி செய்யப்பட்டது. 1960களில் நடுப்பகுதியில் குறுகிய காலத்தில் அதிக விளைச்சல் தரும் கோதுமை, நெல் வகைகள் பயிரிடப்பட்டன. இதை ஊக்குவிக்க 1965இல் இந்திய உணவுக் கழகம் (Food Corporation of India - FCI) ஏற்படுத்தப்பட்டது. இந்த உணவுக் கழகம் உழவர்களிடமிருந்து கோதுமை, நெல் ஆகியவற்றை அரசு நிர்ணயிக்கும் விலையில் கொள்முதல் செய்து சேமித்தது. உழவர்களிடம் கொள்முதல் செய்வதற்காக நேரடிக் கொள் முதல் நிலையங்களும் வேளாண் விளைபொருள் விற்பனைக் கூடங்களும் ஏற்படுத்தப்பட்டன. இதன் உடன்விளைவாக தனியார் வியாபாரிகளும் முகவர்களும் உழவர்களிடம் கொள்முதல் செய்யும் விலையும் ஓரளவுக்கு உயர்ந்தது.

இந்திய உணவுக் கழகம் ஏற்படுத்தப்பட்ட பின், மாநிலங்களில் பொது வழங்கல் முறை (Public Distribution System) வலுப்பெற்று விரிவடைந்தது. மாநிலங்களில் நியாய விலைக் கடைகள் மூலம் குறைந்த விலையில் வழங்குவதற்குத் தேவையான அரிசி, கோதுமையை இந்திய உணவுக் கழகத்தின் சேமிப்பிலிருந்து அனுப்பப்படுகிறது. விளைச்சல் பற்றாக்குறைக் காலங்களில் விலை உயர்வையும் பதுக்கலையும் தடுக்க உணவுக் கழகத்தின் இருப்பிலிருந்து சந்தையில் தானியங்கள் தனியார் வியாபாரிகளுக்கு விற்கப்படுகின்றன. பொது வழங்கல் முறையில் மக்களுக்கு உணவுப் பொருள்களை வழங்குவதில் இந்தியாவில் தமிழ்நாடும் கேரளமும் சிறந்த முன்னோடி மாநிலங்களாகத் திகழ்கின்றன. வடஇந்திய மாநிலங்கள் இதில் மிகவும் பின்தங்கியுள்ளன.

பொது வழங்கல் முறையில் மானிய விலையில் உணவுப் பொருள்களை வழங்குவதால் ஏற்படும் செலவைக் கட்டுப்படுத்த உழவர்களின் விளைபொருள்களுக்கு உரிய குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயித்து, அதன் அடிப்படையில் கொள்முதல் செய்யாமல் ஒன்றிய அரசு உழவர்களை வஞ்சித்து வருகிறது.

மானிய விலையில் அரிசி, கோதுமை வழங்கப்படும் நிலையிலும் இந்தியா உலகப் பட்டினிக் குறியீட்டில் 125 நாடுகளில் 2023ஆம் ஆண்டில் 111ஆவது இடத்தில் இருக்கிறது. 2022இல் 107ஆவது இடத்திலிருந்து மேலும் சறுக்கியுள்ளது. இந்தியாவில் ஓராண்டில் தனிநபர் தானிய நுகர்வு 171 கிலோ, ஆப்பிரிக்காவில் 190 கிலோ, சீனாவில் 360 கிலோ. தலைமை அமைச்சர் நரேந்திர மோடியோ கடந்த பத்து ஆண்டுக்கால பா.ச.க. ஆட்சியில் 25 கோடி மக்களை வறுமையிலிருந்து மீட்டு விட்டோம் என்று மேடை தோறும் முழங்கிக் கொண்டிருக்கிறார்.

**நவீன தாராளமயக் கொள்கை 1991இல் இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு ஏழை-பணக்காரன் வருவாய் இடைவெளி விரிவடைந்து கொண்டே இருக்கிறது. கடந்த பத்து ஆண்டுக்காலத்தில் மோடி ஆட்சியில் இது புதிய உச்சத்தை எட்டியுள்ளது. 2022இல் இந்தியாவில் மேல்தட்டில் உள்ள 10 விழுக்காட்டினர் நாட்டின் மொத்த வருவாயில் 57.7 விழுக்காடு பெற்றுள்ளனர். அடித்தட்டில் உள்ள 50 விழுக்காட்டினர் 15 விழுக்காடு வருவாய் மட்டுமே பெற்றுள்ளனர். இடையில் உள்ள 40 விழுக்காட்டினர் 27.3 விழுக்காடு வருவாய் பெற்றுள்ளனர். மேலும் உச்சியில் உள்ள 1 விழுக்காட்டு பெரும் கோடீசுவரர்கள் 2022-2023இல் நாட்டின் வருவாயில் பெற்ற பங்கு அமெரிக்கா, சீனா, பிரிட்டன், பிரான்சு, பிரேசில் ஆகிய நாடுகளின் முதல் நிலை முதலாளிகள் பெற்றதைவிட அதிகம் (The Hindu 21.3.2024). எனவே, மோடி முழங்குகின்ற வளர்ச்சிப் பெருமிதம் மேல்தட்டில் உள்ள பத்து விழுக்காட்டுப் பெருஞ்செல்வர்களுக்கானது என்பதை இப்புள்ளிவிபரம் தெளிவுபடுத்துகிறது. அதேசமயம் அடித்தட்டில் உள்ள 50 விழுக்காட்டினர் வறுமையில் வாடுகின்றனர் என்பதையும் புலப்படுத்துகிறது.**

உறுதியான வருவாய் அளிக்கக்கூடிய வகையில் குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று தொடர்ந்து உழவர்கள் போராடி வந்ததன் விளைவாக, இந்தியாவில் பசுமைப் புரட்சியின் நாயகன் என்று போற்றப்பட்ட எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையில் எட்டு பேர் கொண்ட உழவர்களுக்கான தேசிய ஆணையம் 2004 நவம்பரில் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் 2006 அக்டோபரில் தன் அறிக்கையை ஒன்றிய அரசிடம் அளித்தது. எம்.எஸ்.சுவாமிநாதன் அண்மையில் மறைவுற்றதையொட்டி அவருக்குப் பாரத் ரத்னா பட்டம் வழங்கப்பட்டது. ஆனால் அவர் பரிந்துரைத்த கொள்முதல் விலை நிர்ணய முறையை ஏற்றுச் செயல்படுத்த மோடி ஆட்சி முன்வர வில்லை.

தொடக்கத்தில் ஒன்றிய அரசு கோதுமை, நெல் பயிர்களுக்கு மட்டுமே குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP-எம்.எஸ்.பி.) நிர்ணயித்துக் கொள்முதல் செய்தது. தற்போது காரிப், ராபி பருவங்களில் விதைப்புத் தொடங்குவதற்கு முன்பே ஆண்டுதோறும் 23 பயிர்களுக்கு எம்.எஸ்.பி.யை அறிவிக்கிறது. இவற்றுள் 21 பயிர்கள் உணவுப் பயிர்களாகும். இந்திய உணவுக் கழகம் தனக்குத் தேவையான அளவிற்கு மட்டுமே ஆண்டுதோறும் எம்.எஸ்.பி. விலையில் கோதுமையையும் நெல்லையும் கொள்முதல் செய்கிறது. மொத்தத்தில் 7 விழுக்காடு உழவர்கள் மட்டுமே எம்.எஸ்.பி. விலையில் விற்கின்றனர்.

இந்திய உணவுக்கழகம் கொள்முதல் செய்யும் கோதுமையில் 90 விழுக்காடும், நெல்லில் 75 விழுக்காடும் பஞ்சாப், அரியானா, மேற்கு உத்தரப்பிரதேசம், ஆந்திரம் ஆகிய பகுதிகளில் கொள்முதல் செய்கிறது. மீதியைப் பிற மாநிலங்களில் கொள்முதல் செய்கிறது. 2023ஆம் ஆண்டில் பஞ்சாபில் 22 விழுக்காடு நெல்லும், 31 விழுக்காடு கோதுமையும் கொள்முதல் செய்தது. இந்தியா முழுவதும் உள்ள வேளாண் விளைபொருள் விற்பனைக் கூடங்களில் தனியார் வணிகர்கள் நேரடியான அல்லது மறைமுக ஏல முறையில் உழவர்களின் விளைபொருள்களைக் கொள்முதல் செய்கின்றனர். இதுதவிர, தனியார் மண்டிகளிலும், வியாபாரிகளிடமும் உழவர்கள் தங்கள் விளைபொருள்களை நேரடியாக விற்கின்றனர். இம்முறைகளால் எம்.எஸ்.பி. விலையில் 70 விழுக்காடு அளவுக்குக்கூட உழவர்களுக்குக் கிடைப்பதில்லை. இந்நிலையை மாற்றுவதற்கு எம்.எஸ். சுவாமிநாதன் குழு உற்பத்திச் செலவில் 50 விழுக்காடு அளவுக்கு உழவர்களுக்கு இலாபம் கிடைக்குமாறு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கூறியது.

ஒன்றிய அரசின் வேளாண் துறையின்கீழ் உள்ள வேளாண் பொருள்களின் உற்பத்திச் செலவு மற்றும் விலை நிர்ணய ஆணையம் (Commission for Agricultural Costs and Prices-CACP) ஆண்டுதோறும் எம்.எஸ்.பி.யை நிர்ணயிக்கிறது. தற்போது இந்த ஆணையம் $A_2$ + FL என்ற முறையில் விலையை நிர்ணயிக்கிறது. $A_2$ என்பது ஒரு ஏக்கரில் ஒரு குறிப்பிட்ட பயிருக்கான செலவு என்பதாகும். இது விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்து, ஆட்களுக்கான கூலி, இயந்திரங்களுக்கான வாடகை, நீர்ப்பாசனம், எரிபொருள், மின்சாரம் ஆகியவற்றுக்காகச் செலவிட்ட பணத்தின் கூட்டுத் தொகையாகும். இத்துடன் குடும்ப உறுப்பினர்களின் உழைப்புக்கான (Family Labour) கூலி சேர்க்கப்படுகிறது. $A_2$ + FL என்பதுடன் நிலம் மற்றும் மூலதனச் சொத்துக்களுக்கான வட்டி, இயந்திரங்களுக்கான தேய்மானச் செலவு, கடனுக்கான வட்டி, போக்குவரத்துச் செலவு, சந்தைப்படுத்தல் செலவு ஆகியவற்றைச் சேர்க்கும் போது இதன் மொத்தச் செலவுத் தொகை $C_2$ எனப்படுகிறது. இத்துடன் 50 விழுக்காடு இலாபத் தொகையைச் சேர்த்து $C_2$ + 50% என்று விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று 2006இல் எம்.எஸ். சுவாமிநாதன் குழு பரிந்துரைத்தது. ஆனால் இதுவரை ஒன்றியத்தில் ஆட்சி செய்த எந்தக் கட்சியும் இதை நடைமுறைப்படுத்த வில்லை.

$A_2$ + FL முறைக்கும் $C_2$ + 50% முறைக்கும் இடையிலான வேறுபாடு எம்.எஸ்.பி. அறிவித்துள்ள 15 பயிர்களுக்கான விவரம் கிழே தரப்பட்டுள்ளது. இதன் மூலம் உழவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைத் தொகையின் இழப்பையும் அறியலாம்.

| பயிர் | அறிவிக்கப்பட்ட M.S.P. ரூ. ஒரு குவிண்டாலுக்கு | மொத்த விற்பனைத் தொகை M.S.P. மதிப்பை விடக் குறைவாக இருப்பது ரூ. கோடியில் | $C_2$ + 50% அடிப்படையில் ஒரு குவிண்டால் விலை ரூ. | $C_2$ + 50% அடிப்படையில் மதிப்பீட்டுத் தொகைக்கும் M.S.P. தொகைக்குமான பற்றாக்குறை ரூ.கோடியில் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| நெல் | 2,040 | 5,439.8 | 2,708 | 62,563,9 |
| கம்பு | 2,350 | 2,004.0 | 2,526 | 3,089.5 |
| கேழ்வரகு | 3,578 | 899.6 | 4,797 | 1,890.2 |
| உளுந்து | 6,600 | 2,193.8 | 8,462 | 6.795.1 |
| பச்சைப்பயிறு | 7,755 | 3,791.5 | 9,729 | 10,135.5 |
| நிலக்கடலை | 5,850 | 1,130.7 | 7,412 | 11,832.0 |
| சூரியகாந்தி | 6,400 | 186.9 | 8,088 | 659,5 |
| எள் | 5,050 | 5,053.2 | 5,160 | 41,253.5 |
| கொண்டைகடலை | 5,335 | 5,433.0 | 6,512 | 19,717.4 |
| துவரை | 6,600 | 199.0 | 8,402 | 4,867.5 |
| சோளம் | 2,990 | 137.7 | 4,014 | 1,746.6 |
| மக்காசசோளம் | 1,962 | 0,0 | 2,570 | 14,501,3 |
| கோதுமை | 2,125 | 0,0 | 2,363 | 13,793.3 |
| சோயாபீன்ஸ் | 4,300 | 0,0 | 5,586 | 7,111,8 |
| பருத்தி | 6,080 | 0,0 | 8,096 | 755,0 |
| (ஆதாரம் : பிரண்ட் லைன், மார்ச் 22, 2024) | | | | 2,00,710.0 |

அட்டவணையில் மேலே குறிக்கப்பட்டுள்ள 15 பயிர்கள் மொத்த சாகுபடி பரப்பில் 90 விழுக்காடு பரப்பில் பயிரிடப் படுகின்றன. பட்டியலில் கலம் 2க்கும் கலம் 4க்கும் இடையில் ஒரு குவிண்டாலுக்கு $A_2$ + FLக்கும் $C_2$ + 50க்கும் விலையில் உள்ள உயர்வை அறியலாம். கலம் 3 தற்போதுள்ள எம்.எஸ்.பி. விலையில் உழவர்களுக்குக் கிடைக்காமல் போன தொகையைக் காட்டுகிறது. கலம் 5, $C_2$ + 50% விலையில் கொள்முதல் செய்யப்பட்டால் உழவர்களுக்குக் கூடுதலாகக் கிடைக்கும் தொகையைக் காட்டுகிறது. மேலே குறிப்பிட்ட 15 பயிர்களை $C_2$ + 50% முறையில் கொள்முதல் செய்தால் அரசுக்கு இரண்டு இலட்சம் கோடி கூடுதலாகச் செலவாகும்.

பாரதிய சனதா கட்சி 2014 நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில், மொத்த உற்பத்திச் செலவில் உழவர்களுக்கு 50 விழுக்காடு இலாபம் கிடைக்கும் வகையில் எம்.எஸ்.பி. நிர்ணயிக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தது. நரேந்திர மோடி தலைமை அமைச்சரான பின், இந்த வாக்குறுதியைச் செயல்படுத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் பொது நல வழக்குத் தொடுக்கப்பட்டது. 2015 பிப்ரவரி 25 அன்று உச்சநீதிமன்றத்தில் மோடி அரசு “மொத்த உற்பத்திச் செலவில் 50 விழுக்காடு இலாபம் கிடைக்கும் வகையில் எம்.எஸ்.பி.யை நிர்ணயிக்க முடியாது. ஏனெனில் அது வேளாண் சந்தையைச் சீர்குலைக்கும்” என்று கூறித் தேர்தல் வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டது. வாக்குறுதிகளைக் கைவிடுவதும், மாற்றி மாற்றி பொய்யுரைப்பதும் பா.ச.க.வுக்குக் கைவந்த கலையாகும். ஆண்டிற்கு இரண்டு கோடி பேருக்குப் புதிய வேலை வாய்ப்பு; ஒரு அமெரிக்க டாலரின் மதிப்பு ரூ.40 ஆகக் குறைக்கப்படும்; (1947இல் 1 டாலர் மதிப்பு ரூ.3. இப்போது ரூ.83) வெளிநாட்டில் உள்ள கள்ளப்பணத்தை மீட்டு வந்து ஒவ்வொரு இந்தியரின் வங்கிக் கணக்கிலும் ரூ.15 இலட்சம் செலுத்தப்படும் போன்ற தேர்தல் வாக்குறுதிகள் நீர் மேல் எழுத்தாகிவிட்டன.

ஆயினும் வெட்கங்கெட்ட மோடி அரசு 2018ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், “2022ஆம் ஆண்டு இந்தியா சுதந்தரம் பெற்ற 75ஆவது ஆண்டைக் கொண்டாட வுள்ளது. அதற்குள் உழவர்களின் வருவாய் இரண்டு மடங்காக உயர்த்தப்படும்” என்று அறிவித்தது. இதைச் செயல்படுத்த வலியுறுத்தி மகாராட்டிர மாநிலத்தைச் சேர்ந்த உழவர்கள் பல இலட்சம் பேர் திரண்டு வந்து இந்தியாவே வியக்கும் வகையில் மாபெரும் பேரணியை மும்பையில் நடத்தினர். ஆனால் மோடி அரசின் இந்த அறிவிப்பும் 2019 நாடாளு மன்றத் தேர்தலுக்கான ஏமாற்று உத்தியாகவே அமைந்தது.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் மோடி அரசு 2020 சூன் 5 அன்று உழவர்களின் வாழ்வையும், இந்திய வேளாண் தொழிலையும் முற்றிலுமாகச் சீரழிக்கும் வகையில் மூன்று வேளாண் அவசரச் சட்டங்களைக் கொண்டு வந்தது. இவை 2020 செப்டம்பர் 14 அன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

**அம்மூன்று சட்டங்கள் :**

1. **1955ஆம் ஆண்டின் அத்தியாவசியப் பொருள்கள் திருத்தச் சட்டம் 2020 :**

இச்சட்டப்படி எந்தக் கட்டுப்பாடும் அத்தியாவசியப் பொருள்கள் மீது இல்லாமையால் கார்ப்பரேட் நிறுவனங்கள் வேளாண் விளை பொருள்களை வரம்பின்றிக் கொள்முதல் செய்யலாம்; சேமிக்கலாம்; நாட்டின் எந்தப் பகுதிக்கும் கொண்டு செல்லலாம். இதுவரை உழவர்களுக்கும் நுகர் வோருக்கும் இருந்துவந்த குறைந்தபட்ச பாதுகாப்பும் நீக்கப் படுகிறது. இச்சட்டம் பொருள்களைப் பதுக்கவும், கள்ளச் சந்தையில் விற்கவும், செயற்கையான உணவுப் பற்றாக் குறையை உருவாக்கி, வரம்பில்லாமல் விலையை உயர்த்தி கொள்ளை இலாபம் ஈட்டவும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு முழு உரிமை அளிக்கிறது.

2. **வேளாண் விளைபொருள் வணிகம் (வணிக மேம்பாடு மற்றும் எளிமைப்படுத்தல்) சட்டம் 2020 :**

உழவர்கள் இந்தியாவில் எங்கு விலை அதிகமாக இருக்கிறதோ அங்கு தம் விளைபொருள்களை விற்றுக் கொள்ளலாம் என்று இச்சட்டம் கூறுகிறது. இது வெறும் கண்துடைப்பு ஆகும். உண்மையில் இணையவழி வணிகம் மூலம் கார்ப்பரேட்டுகள் விலை குறைவாக உள்ள இடங்களில் விளைபொருள்களை வாங்கி, சேமித்து அதிக விலை கிடைக்கும் இடங்களில் ஆன்லைன் மூலம் விற்பதற்கே இச்சட்டம் துணைபுரியும்.

3. **வேளாண் விலை உறுதியளிப்பு மற்றும் வேளாண் சேவைகள் (அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2020**

இச்சட்டம் கார்ப்பரேட் நிறுவனங்கள் உழவர்களுடன் ஒப்பந்தம் செய்து பயிரிடுவது பற்றியதாகும். இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பே பஞ்சாப் உள்ளிட்ட பல பகுதிகளில் செயல்படுத்தப்பட்ட ஒப்பந்த வேளாண்மை உழவர்களுக்கு இழப்பாகவே முடிந்திருக்கிறது. ஒப்பந்தப்படி விலை தரப்பட வில்லை. தரநிர்ணயம் என்ற பெயரில் விளைபொருள் முற்றிலுமாகவோ, ஒரு பகுதியோ வாங்க மறுக்கப்பட்டது. ஒப்பந்த வேளாண்மை என்பது தானியங்களைப் பயிரிடுவதற்கு மாற்றாக அய்ரோப்பிய நாடுகள், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களைப் பயிரிடுவதேயாகும். குளிர் மிகுந்த அந்நாடுகளில் ஒரு பருவப் பயிர்தான் உண்டு. மேலும் சில வகைப் பயிர்களை மட்டுமே பயிரிட முடியும். அந்நாடுகளின் சந்தைத் தேவைகளை நிறைவு செய்வதற்கானதாக இந்திய வேளாண்மையைக் கார்ப்ப ரேட்டுகள் மூலம் மாற்றுவதே இச்சட்டத்தின் நோக்கமாகும்.

இம்மூன்று சட்டங்களும் வேளாண்மை, உழவர்கள், வேளாண் தொழிலாளர்கள், நுகர்வோர், மாநில உரிமைகள், கூட்டாட்சி முறைமை ஆகிய அனைத்தையும் ஒட்டுமொத்தமாகப் பாதிப்பதாகும்.

கேடான இம்மூன்று வேளாண் சட்டங்களை எதிர்க்க தில்லியில் இந்தியாவிலிருந்து 500 உழவர் சங்கங்களின் பிரதிநிதிகள் கூடி சம்யுக்த கிசான் மோர்ச்சா (SKM) என்கிற கூட்டமைப்பு உருவாக்கினர். இச்சட்டங்களைத் திரும்பப் பெறுதல், எம்.எஸ்.பி. (M.S.P.)க்கு சட்ட ஏற்பு அளித்தல், கொள் முதலை உறுதிசெய்தல், உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து தலைநகர் தில்லியில் மாபெரும் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. 2020 செப்டம்பரில் மூன்று வேளாண் சட்டங்களின் நகல்கள் இந்தியா முழுவதும் எரிக்கப்பட்டன.

2020 அக்டோபரில் பல்லாயிரக்கணக்கில் உழவர்கள் டிராக்டர்களுடன் தில்லியில் போராட்டத்தைத் தொடங்கினர். அதிக அளவில் கொள்முதல் செய்யப்படும் பஞ்சாப், அரியானா, மேற்கு உ.பி., உழவர்கள் இப்போராட்டத்தில் முன்னணிப் படையினராக இருந்தனர். ஒன்றிய அரசு உழவர்களின் போராட்டத்தை ஒடுக்கப் பலவழிகளில் முயன்றது. தில்லி நகருக்குள் நுழைய அனுமதிக்காததால் தில்லியைச் சுற்றி அய்ந்து இடங்களில் பல்லாயிரக்கணக்கில் உழவர்கள் முகாமிட்டு, கடும் குளிரையும், வெய்யிலையும் மழையையும் பொருட்படுத்தாமல் 384 நாட்கள் போராடினர். இதில் பெண்களும் பெருமளவில் பங்கேற்றனர். 700க்கும் மேற்பட்டவர்கள் மாண்டனர். உலக அளவில் இப்போராட் டத்திற்கு ஆதரவும், மோடி அரசுக்கு எதிர்ப்பும் எழுந்தது. இறுதியில் மோடி அரசு 2021 நவம்பரில் இம்மூன்று வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெறுவதாக அறிவித்தது. ஆனால் எம்.எஸ்.சுவாமிநாதன் பரிந்துரையைச் செயல் படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

2024 பிப்பிரவரி 13 அன்று சம்யுக்த கிசான் மோர்ச்சா விலிருந்து பிரிந்த உழவர் அமைப்பும், மற்றொரு அமைப்பும் இணைந்து தில்லியில் மீண்டும் போராட்டத்தை நடத்த ஆறு மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களுடன் ஆயிரக்கணக்கான டிராக்டர்களுடன் தில்லியை நோக்கிப் புறப்பட்டனர். ஆனால் பஞ்சாப்-அரியானா எல்லையில் எதிரி நாட்டுப் படையினர் மீது கொடுந்தாக்குதல் நடத்துவது போல் இவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர். அங்கேயே முகாமிட்டு உழவர்கள் தங்கள் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். ஊடகங்கள் இப்போராட்டம் குறித்த செய்தியை அரசுக்கு அஞ்சி முற்றிலுமாக இருட்டடிப்பு செய்து வருகின்றன. பொதுவாகவே செய்தி ஏடுகளும், பிற ஊடகங்களும் உழவர்களின் சிக்கல்கள், துன்பங்கள் பற்றி செய்தி வெளியிடுவதில்லை.

மக்கள் தொகையில் அமெரிக்காவில் 2 விழுக்காட்டினரும் அய்ரோப்பிய நாடுகளில் 5 முதல் 10 விழுக்காட்டினரும் வேளாண்மையைச் சார்ந்து உள்ளனர். காட் ஒப்பந்தத்தின் ஒரு கூறாக வேளாண்மை சார்ந்த ஒப்பந்தம் (AoA) உரு

வாக்கப்பட்டது. அதன்படி அமெரிக்கா, அய்ரோப்பிய நாடுகள் உழவர்களுக்கு விளைபொருளில் 50 விழுக்காட்டுக்குமேல் நேரடியாக வழங்கும் மானியம் வணிகக் குலைவு அல்லா தவை (Non-trade distorting) என்றும், இந்தியா உள்ளிட்ட நாடுகள் வழங்கும் மானியம் வணிகக் குலைவு (trade distorting) ஏற்படுத்துபவை என்றும் வரையறுக்கப்பட்டது. அமெரிக்கா, அய்ரோப்பிய நாடுகள் 160 பில்லியன் டாலர் (ரூ.12.28 இலட்சம் கோடி) ஆண்டுதோறும் மானியம் அளிக்கின்றன. இந்தியாவில் 10 விழுக்காட்டுக்கும் குறைவாகவே மானியம் தரப்படுகிறது. அமெரிக்க, அய்ரோப்பிய நாடுகள் அளிக்கும் மானியத்தை நிறுத்தினால், அந்நாடுகளில் வேளாண்மைத் தொழிலே நடக்காது.

ஆனால் இந்தியாவில் ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 2 இலட்சம் கோடிக்குப் பெருமுதலாளிகளுக்குக் கடன் தள்ளுபடி செய்யப்படுகிறது. இக்கட்டுரையில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி $C^2$ + 50% முறையில் 15 பயிர்களுக்குக் கொள்முதல் செய்தால் இரண்டு இலட்சம் கோடிதான் கூடுதலாகச் செலவாகும். ஆனால் முதலாளிய ஊடகங்கள் இருபது இலட்சம் கோடி செலவாகும் என்று பொய்யான பரப்புரை செய்கின்றன. கொள்முதல் செலவில் 75-80 விழுக்காட்டுத் தொகை விற்பனை மூலம் திரும்பப் பெறப்படுகிறது. மொத்த விளைபொருளையும் அரசு கொள்முதல் செய்ய வேண்டும் என்று உழவர்கள் கோரவில்லை. 10-15 விழுக்காடு கொள்முதல் செய்தாலே சந்தையிலும் கிட்டத்தட்ட அதே விலை நிலவும். எனவே $C_2$ + 50% முறையிலான எம்.எஸ்.பி.க்கு ஒன்றிய அரசு சட்ட ஏற்பு அளிக்க வேண்டும். இதனால் உழவர்களின் வருவாயும் வாழ்வும் மேம்படுவதுடன், ஊரகப் பகுதியில் நுகர்வும் அதிகரித்து, உற்பத்தியும் வேலைவாய்ப்பும் பெருகும். இளைஞர்கள் வேளாண் தொழிலை விரும்பி ஏற்கும் நிலை ஏற்படும்.

"உழவார் உலகத் தார்க்குஆணி அஃதுஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து." (குறள் 1032)

❖

# மத நம்பிக்கை

காதி மற்றும் மத நம்பிக்கைகள் வடிவத்திலான பழைய விரோதிகளுடன், பல்வேறு மாறுபட்ட அரசியல் கொள்கைகளையுடைய அரசியல் கட்சிகளும் சேர்ந்து கொள்ளப்போகின்றன என்பதை எண்ணும்போது என் கவலை மேலம் அதிகமாகிறது. இந்தியர்கள், தங்கள் மத நம்பிக்கைகளுக்கு மேலாக நாட்டைக் கருதப்போகிறார்களா அல்லது நாட்டைவிட மத நம்பிக்கைக்கே முக்கியத்துவம் கொடுக்கப் போகிறார்களா? இது எனக்குத் தெரியாது. கட்சிகள், நாட்டைவிட தங்கள் மதக் கோட்பாடுகளுக்கே முக்கியத்துவம் கொடுத்தால், நமது சுதந்திரத்துக்கு இரண்டாவது தடவையாக ஆபத்து என்பதுடன் என்றென்றைக்குமாக நமது சுதந்திரத்தை இழப்பது என்பது நிச்சயம். இந்த விளைவுக்கு எதிராக நாம் விழிப்புடன் இருக்கவேண்டும். நமது கடைசித் துளி இரத்தம் இருக்கும் வரை நமது சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.

**- மேதை அம்பேத்கர்**



# பாவேந்தன் பாட்டு

பாட்டன்நம் வள்ளுவனார் முதலாகப்
பலபுலவர் நமக்கே உண்டு
ஏட்டளவில் பீடுபெறும் இலக்கியங்கள்
ஏராளம் அதிலே உண்டு
தீட்டிவைத்த கூர்வாள்போல் தினவெடுத்த
தோள்களிலே வீரம் தன்னைக்
காட்டவல்ல செம்மாப்பு களமறவன்
பாவேந்தன் படைப்புக் குண்டு.

திசைமறந்த தமிழரெலாம் செல்திசையை
அறியாமல் திகைத்து நின்றார்
அசைவற்றுப் பார்ப்பனர்முன் பல்லாண்டாய்ப்
பலவகையில் அடிபடு கின்றார்
விசையொழிந்த தமிழர்க்கு விசைப்பாட்டே
பாவேந்தன் வீரப் பாட்டு
அசைக்கவொணா மொழிமானம் இனமானம்
அளித்திட்ட மானப் பாட்டு.


படித்தாலே நெஞ்சினிலே பரபரவென
உணர்வூறி எழுச்சி பாயும்
வெடித்தெழுந்த தீக்கிடங்காய் உள்ளத்தில்
தமிழ்நெருப்பு வேகம் கொள்ளும்
அடித்தபெரும் சாட்டையதன் ஆவேச
வீச்சாகச் சொல்தெ றிக்கும்
வடித்தநறுந் தமிழ்வீரம் அவன்பாட்டில்
வழிதேனாய் ஒழுகி நிற்கும்.

அவன்பாடல் அழிக்கின்ற ஆரியமாம்
இனப்பகையை அடித்தே ஓட்டும்
அவன்பாடல் தமிழர்க்கோ அரும்மருந்தாய்
துணையிருந்தே ஆக்கம் சேர்க்கும்
அவன்பாடல் அண்டுகின்ற சாதிமதப்
பொய்மைகளை அடித்தே கொல்லும்
அவன்பாடல் ஆற்றல்சேர் போர்ப்பாட்டாய்த்
தமிழர்தமை காத்தே வெல்லும்.



**5.05.2019இல் தமிழேந்தி மறைவுக்கு முன் 2019 ஏப்பிரல் சிந்தனையாளன் ஏட்டில் வந்த கடைசி பாடல்**

# சனாதனம் குறித்த உயர்நீதிமன்றத்தின் முறையற்ற தீர்ப்பு!



- வாலாசா வல்லவன்

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் - கலைஞர்கள் சங்கம் 2.9.2023 அன்று சென்னையில் 'சனாதன ஒழிப்பு மாநாடு' நடத்தியது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்நாட்டு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதும், தமிழ் நாட்டு அரசின் இந்து அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு அவர்கள் கலந்து கொண்டதும் 06.09.2023 அன்று தி.க.நடத்திய விசுவகர்மா திட்டத்தின் கண்டன நிகழ்ச்சியில் பேசிய தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா சனாதனம் குறித்து வெளியிட்ட கருத்துகளும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 226ஆவது பிரிவின்படி அவர்கள் அமைச்சராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பின ராகவும் பதவி வகிக்க தகுதியற்றவர்கள்; அவர்களைத் தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று இந்து முன்னணியைச் சேர்ந்த பொறுப்பாளர்கள் கிஸ்ரோர்குமார், வி.வி. செயக்குமார், டி. மனோகர் ஆகிய மூவர் தனித்தனியே சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அனிதா சுமந்த் அவர்கள் இவ்வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டார். மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர்கள் டி.வி.இராமானுசம், ஜி.இராச கோபாலன், ஜி.கார்த்திகேயன் ஆகியோரும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மூத்த வழக்குரைஞர் பி. வில்சன், என்.ஜோதி, ஆர்.விடுதலை, ஆர்.சண்முகசுந்தரம் ஆகியோரும் வழக்காடினர்.

சனாதன ஒழிப்பு மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் "'சனாதன ஒழிப்பு மாநாடு' என்ற தலைப்பு மிகவும் பொருத்தமானது. சனாதனம் என்பது நால்வருணப் பாகுபாட்டை உருவாக்கி அதை இந்தச் சமூகத்தில் நிலைநிறுத்தி மனித சமத்துவத்திற்கு எதிராக உள்ளது. சமூகத்தில் மேல்-கீழ் ஏற்றத்தாழ்வை மேல்சாதி-கீழ்சாதியை நிலைநிறுத்தி வருகின்றது. குழந்தைத் திருமணம், விதவைத் திருமணம் மறுப்பு, உடன்கட்டை ஏறுதல் போன்ற கொடிய பழக்கவழக்கங்களை இந்த நாட்டில் நிலைநிறுத்தி வந்துள்ளது.

எனவே தொற்று நோய்களை உருவாக்கக் கூடிய மலேரியா, டெங்கு காய்ச்சலுக்குக் காரணமான கொசுக்களை ஒழிப்பது போல ஒழிக்க வேண்டும், கொரோனாவுக்குக் காரணமான நோய்க்கிருமிகளை ஒழிப்பது போல சனாதன தருமத்தையும் ஒழிக்க வேண்டும்" என்று பேசினார்.

உதயநிதி ஸ்டாலின் சனாதனத்தைக் கடைபிடிக்கும் மக்களை இனப்படுகொலைச் செய்ய வேண்டும் என்று கூறியதாக பா.ச.க.வினர் சமூக ஊடகங்களில் பொய்ப் பரப்புரைச் செய்தனர்.

இந்து அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு அந்த மாநாட்டில் கலந்து கொண்டார். ஆனால் அவர் மாநாட்டில் சொற்பொழிவு ஆற்றவில்லை; இருந்த போதிலும் கலந்து கொண்டதே தவறு என்று அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வழக்குத் தொடுத்தனர்.

இதையொட்டி 6.9.2023 பெரியார் திடலில் நடைபெற்ற விசுவகர்ம யோஜனா கண்டன நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா.

"சனாதனமும் விசுவகர்மா திட்டமும் வேறு வேறானவை அல்ல. தலைமை அமைச்சர் சனாதனத்தை கடைப்பிடிப்ப தாகச் சொல்கிறார். அவர் அதை பின்பற்றுவதாக இருந்தால் உலகம் முழுவதும் சுற்றிவரக் கூடாது. சனாதனப்படி இந்து என்பவர் கடல் தாண்டிச் செல்லக்கூடாது. ஆனால் உலகம் சுற்றிவரும் பிரதமர் சனாதனத்தைக் காப்பேன் என்று கூறுவது அயோக்கியத் தனமானது. அமைச்சர்களை அழைத்து சனாதனத்தைப் பரப்பும்படி கூறியுள்ளார். நான் தலைமை அமைச்சருக்கும் அமித்சாவுக்கும் நேற்று புதுவையில் கலைஞர் சிலை திறப்பு விழாவில் சவால் விட்டேன்.



நீங்கள் நால்வருணத்தைப் பற்றியும், சனாதனத்தைப் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் கருத்துப் பரிமாற்றத்துக்கு நான் தயார். மோடி அவர்களும் அமித்சா அவர்களும் தில்லியில் பத்து இலட்சம் (அ) ஒரு கோடிப் பேரை திரட்டினாலும் உங்கள் சங்காரச்சாரியார் முன்னிலை யில் நான் வாதிடத் தயார். நீங்கள் உங்களுடைய ஆயுதங் களான வில், அம்பு, கத்தி போன்ற எல்லாவற்றையும் பத்திர மாக வைத்திருங்கள். நான் பெரியார், அம்பேத்கர்

நூல்களை மட்டுமே கொண்டு வருகிறேன். தில்லியில் திறந்தவெளியில் விவாதத்தை வைத்துக் கொள்ளலாம். பிரதமர் மகா விஸ்வகுரு, ஜகத்குருவின் கருத்துப்படி நான் பஞ்சமர் வகுப்பைச் சேர்ந்த சூத்திரன், உதயநிதி பேச்சு மிகவும் மென்மையானது. என்னுடைய பேச்சு அழுத்தமாக இருக்கும். உங்களில் யார் வேண்டுமானாலும் சனாதனம் குறித்து என்னிடம் வாதிடலாம். தில்லியில் எந்த இடத்திலும் தமிழ்நாட்டு மக்களின் சார்பில் உங்களை விவாதத்தில் சந்திக்கத் தயாராக உள்ளேன்'' என்று அறைகூவல் விடுத்தார்.

உதயநிதி, சேகர் பாபு, ஆ.இராசா ஆகியோர் மீதான வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதி அனிதா சுமந்த் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

வழக்குரைஞர் வில்சன் தன்னுடைய வாதத்தில் காசி பனாரஸ் பல்கலைக்கழகத்தில் 1902ஆம் ஆண்டு வெளியிடப் பட்ட 'Sanatana Dharma - An Elementary Text Book of Hindu Religion and Ethics' என்ற சனாதன தர்ம நூலிலிருந்து பல பக்கங்களைப் படித்துக் காட்டி சனாதன தருமம் என்பது ஆரியர்களுக்காக எழுதப்பட்ட மநு சட்டமாகும் என்று விளக்கிக் கூறினார்.

அந்நூலின் இயல் 7இல் நால்வருண அமைப்பு முறை ரிக் வேதத்தில் இருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

''பிராமணர்கள் முகத்திலும், சத்திரியர்கள் தோள்களிலும், வைசியர்கள் தொடையிலும், சூத்திரர்கள் கால் பாதத்திலும் பிறந்தார்கள்'' என்பதை எடுத்துக்காட்டிச் சாதி அமைப்பு முறை உருவாக்கம் ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையில் அமைந்தது. பல நூற்றாண்டுகளாக மேல் சாதியினரால் கீழ்சாதி மக்கள் ஒடுக்கப்பட்டு வந்தனர் என்பதைச் சுட்டிக் காட்டினார்.

அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள கருத்துரிமை யின்படி 'திராவிட சிந்தனைப் பள்ளி' கொள்கைப்படி நூறாண்டுகளாக பெரியார், அண்ணா, கலைஞர் கருணாநிதி உள்ளிட்டோர் மக்களிடையே சமத்தவத்தை உருவாக்க சனாதன தருமத்திற்கு எதிராகப் பேசி வந்தனர். ஏனென்றால் சனாதனம் தான் ஏற்றத்தாழ்வுகளுக்கு உட்படுத்தி ஒடுக்கப் பட்ட வகுப்பினரைத் தாழ்த்தி வைத்திருந்தது என்று எதிர் வழக்காடினார். வழக்குரைஞர் ஜோதி, வழக்குரைஞர் விடுதலை ஆகியோர், சனாதனத்துக்கும் நால்வருணத் திற்கும் உள்ள தொடர்பை மநுநீதியிலிருந்து மேற்கோள் காட்டி வழக்காடினர்.

பொதுவாக நீதிமன்றத்தின் தீர்ப்புகள் வாதங்களின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும். இந்த வழக்கில் வழக்குரைஞர்களில் வாதங்களை ஏற்றுக்கொள்ளாமல், நீதிபதி அனிதா சுமந்த், குப்புசாமி சாஸ்திரி பவுண்டேசன் கொடுத்துள்ள விளக்கவுரையை ஏற்றுக்கொண்டு சனாதனம் என்பது இந்து வாழ்வியல் நெறி (Hindu Way of Life) என்றும், நால்வருணத்திற்கும் இன்றைய சாதி அமைப்புக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும், இன்றைக்கு இருக்கிற சாதி அமைப்பு தோன்றி ஒரு நூறாண்டு காலம் தான் ஆகிறது என்றும் உண்மைக்கு மாறாகத் தன்னுடைய கருத்தை 6.3.2024 அன்றைய தீர்ப்பில் கூறியுள்ளார். தமிழ்நாடு அரசு 370 பதிவு செய்யப்பட்ட சாதிப் பட்டியல்களைக் கொண்டு இடஒதுக்கீடு கொடுத்து வருகிறது. இந்தப் போட்டியின் காரணமாகவே ஒரு சாதி இன்னொரு சாதியின்மீது பொறாமைக் கொள்கிற காரணத்தினால் சாதிச் சண்டைகள் உருவாகின்றன என்று கூறியுள்ளார். தீர்ப்பில் சில திருத்தங்களைச் செய்து அடுத்த நாள் வெளியிட்ட பதிவில் 184 சாதிகள் பட்டியலைத் தமிழ்நாடு வைத்திருக்கிறது என்று எழுதியுள்ளார்.


வருணாசிரம தருமம் காரணமாகத்தான் சமூகம் சாதிய அமைப்புகளாக மேல்கீழ் என்று இருப்பதை நீதிபதி ஏற்றுக் கொள்ளவில்லை. நீங்கள் பிரிவினைவாதம் பேசுகிறீர்கள். குறிப்பிட்ட சாதியை இழித்துப் பேசுகிறீர்கள் என்று? நீதிபதியே ஒரு சனாதனியாக இருந்து தீர்ப்பு வழங்கி உள்ளார். அரசு வேலைகளில் சாதி அடிப்படையில் இடஒதுக்கீடு அளிப்பதால் சாதிகளிடையே பொறாமை உணர்வு ஏற்பட்டு சாதிச் சண்டைகள் ஏற்படுவதாக தன்னுடைய சனாதன கருத்தைத் தீர்ப்பில் வெளியிட்டுள்ளார். எனினும் குற்றம் சாட்டப்பட்ட வர்கள் சட்டப்படி தண்டிக்கப்படாதவர்கள் என்பதால் அவர் களைப் பதவி நீக்கம் செய்ய இயலாது என்று தீர்ப்பில் கூறியுள்ளார்.

சனாதனம் குறித்து உதயநிதி பேசியதற்குக் கண்டனம் தெரிவித்து உத்திரப்பிரதேசம், மகாராட்டிரா, ஜம்மு-காஷ்மீர், பீகார், கர்நாடகா ஆகிய மாநிலங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. இந்த வழக்குகளை ஒன்றாக இணைக்கக் கோரி உதயநிதி ஸ்டாலின் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது. நீதிபதிகள் சஞ்சீவ் கன்னா, தீபங்கர் தத்தா அமர்வில் இந்த மனு 4.3.2024 அன்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் ''நீங்கள் சாதாரண நபர் அல்ல, மாநில அமைச்சர். சனாதனம் குறித்து உங்களது பேச்சு எந்த அளவுக்குத் தாக்கத்தையும், பின்விளைவையும் ஏற்படுத்தும் என்பதை தெரிந்திருக்க வேண்டும்'' என்று கூறினர்.

உதயநிதி ஸ்டாலின் தரப்பில் நேர் நின்ற மூத்த வழக்குரைஞர் அபிஷேக் மனு சிங்வி கருத்துச் சுதந்திரம் தொடர்பாக பத்திரிகையாளர்கள் அர்னாப் கோஸ்வாமி, முகமது ஹுபைர், நுபுர் சர்மா ஆகியோரது வழக்குகளை உச்சநீதிமன்றம் ஒரே வழக்காக விசாரித்ததைச் சுட்டிக்காட்டி அதேபோல இதையும் ஒரே வழக்காக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதன்பிறகு இவ் வழக்கை மார்ச் மாதம் 15ஆம் நாளுக்கு ஒத்தி வைத்தனர். இப்போது ஏப்ரல் 01 அன்று மீண்டும் இவ்வழக்கை ஒத்தி வைத்துள்ளனர்.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் முன்பே நீதிபதிகள் இவ்வாறு எச்சரிக்கை விடுவது அவர்களும் சனாதனிகளாகவே உள்ளனர் என்பதையே காட்டுகின்றது. பாரதிய சனதா கட்சி ஆட்சியில் பெரும்பாலான நீதிபதிகள் சனாதனிகளாகவே உள்ளனர் என்பது சனநாயகத்தில் நம்பிக்கை உள்ள அனைவரையும் கவலைகொள்ளச் செய்கிறது.

# ஆரியப் பார்ப்பனியப் பாசிசக் கருத்துகள் பொசுங்கட்டும்!.. மாநிலங்களின் உரிமைப் போராட்டங்களே பாஜகவின் பொய்ம்மை முகத்தை வெளிக்காட்டும்..



**பொழிலன்**
தமிழக மக்கள் முன்னணி

இந்தியாவின் 18 ஆம் நாடாளுமன்றத்திற்கான தேர்தல் அரசியல் புயல் போல் மாநிலங்களையெல்லாம் அலைக் கழித்துக் கொண்டிருக்கிறது.

கடந்த 16, 17 ஆம் நாடாளுமன்றத் தேர்தல்களில் பாஜக பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியைப் பிடித்திருந்தது.

2014 ஆம் ஆண்டின் 16ஆம் நாடாளுமன்றத்தில் பாஜக 282 இடங்களில் வெற்றி பெற்றிருந்தது. தமிழ்நாட்டில் அதிமுக 37 இடங்களில் வென்றிருந்தது. 2019 இல் நடைபெற்ற 17 ஆம் நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக 303 இடங்களில் வென்றிருந்தாலும் அதன் அணியில் இருந்த அதிமுக ஓரிடத்தில் மட்டுமே வென்றிருந்தது. 2014ஆம் ஆண்டு தொடங்கி 2024 ஆண்டு வரை 10 ஆண்டுகளாக முழுமையான அதிகாரத்தைக் கொண்டு ஆட்சி செய்து வருகிறது பாரதிய ஜனதா கட்சி.

இந்தப் பத்து ஆண்டுகளில் மொழித் தேசிய இனங்களின் அடையாளங்களையெல்லாம் சிதைத்துவிட்டு ஆரியப் பார்ப்பனியத்தை வலுப்படுத்திக் கொள்ள பாஜக மேற்கொண்ட நடவடிக்கைகள் மிகமிக அதிகப்படியானவை.

மொழி அடிப்படையில் மாநிலங்கள் உருவாக்கப் பட்டிருப்பது பாஜகவிற்கு சிறிதும் உடன்பாடில்லாதது. அதனால்தான் மொழி மாநிலங்களை எல்லாம் சிதைக்கிற வேலைகளை அது தொடர்ந்து நடத்தி வந்திருக்கிறது.

காசுமீரத்திற்கென அளிக்கப்பட்டிருந்த 370 ஆம் சட்டப்பிரிவை நீக்கியதோடு அது ஒரு மாநிலம் எனும் நிலையையே இல்லாமல் செய்துவிட்டது பாஜக. 2019 ஆகத்தில் காசுமீரத்தை இரண்டாகத் துண்டாடிவிட்டது. காசுமீரத்திற்குரிய 370ஆவது சட்டப்பிரிவை ஏதோ இரவலாக அவர்கள் பெற்றிடவில்லை. காஷ்மீரத்திற்குள் பிறநாட்டினர் பிற மாநிலத்தவர் எவரும் குடியேறிடவும், நிலம் வாங்கிவிடவும் முடியாது என்பது காஷ்மீர் இந்திய ஒன்றியத்துடன் இணையும் போது 26.10.1947இல் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக் கையின்படி பெற்ற உரிமை ஆகும்.

ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்பாக இந்தியா என்பது ஓர் அரசியல் சார்ந்த நாடாகவோ, இயற்கையானதாக அடையாளப்படுத்திடும் வகையில் நிலவியல் சார்ந்த பகுதியாகவோ இருந்திடவில்லை. சிந்து ஆற்றை அடிப்படை யாக வைத்து சிந்துசு (Indus) என்று ஆங்கிலேயர்கள் உள்ளிட்ட ஐரோப்பியர்களால் அழைக்கப்பட்டதுதான். பின்னர் அவர் களால் இந்து என்றும் இந்தியா என்றும் அழைக்கப் பெற்றது.

1600க்குப் பின்னர் ஆங்கிலேயர் ஆட்சி அதிகாரங்களால் இந்திய அரசு உருவாக்கப்பட்டு ஆளவும்பட்டது.

வந்தேறிய ஆங்கிலேயர்கள் 1947இல் ஒப்பந்தத்தின் அடிப்படையில் வெளியேறியபின், அதற்கு முன்பே வந்தேறிப் பரவியிருந்த ஆரியப் பார்ப்பனிய அதிகார வகுப்பினரின் பனியா பெருமுதலாளிகளின் கைகளுக்கு இந்திய அரசு கைமாறியது.

ஆரியப் பார்ப்பனிய- பனியா வகுப்பால் 1947இல் உருவாக்கப்பட்ட இந்தியாவிற்குள் 500க்கும் மேற்பட்ட தனி நில ஆட்சிப் பகுதிகள் மிரட்டப்பட்டும், அதிகாரப் பங்கு தருவதாக ஆசை காட்டப்பட்டும் இணைக்கப்பட்டன.


அப்போது காசுமீரமும், நாகலாந்தும், மிசோரமும் உள்ளிட்ட சில பகுதிகளும் முழுமையாக இந்தியப் பார்ப்பனிய அரசுக்குக் கட்டுப்பட்டுவிடவில்லை. இறுதியாக, காசுமீரம் இந்தியாவிற்குள் இணையலாமா வேண்டாமா என மக்களிடையே வாக்கெடுப்பு நடத்தி முடிவெடுக்கலாம் என்றும் அதுவரை காசுமீர் இந்திய அரசுக்கும் பாகிசுத்தானுக்கும் சிறுபகுதி சீனத்திற்கும் உரியது என்றும் உலக அவை ஏற்றுக்கொண்டு அறிவித்தது. காசுமீரத்தில் வாக்கெடுப்பு நடத்தி முடிவெடுக்கப்படும் வரை 370ஆம் பிரிவு காசுமீரத்திற்கு இருக்கலாம் என்று இந்திய அரசு ஒப்புக்கொண்டது.

ஆனால், வரலாற்று வழிநடந்த அத்தகைய அனைத்து நிகழ்வுகளையும் மூடிமறைத்து இந்திய வெறிப்படையைக் கொண்டு காசுமீர மக்களை நசுக்கி, அடக்கி, ஒடுக்கி இந்தியா விற்குள் வைத்திருந்தது மட்டுமின்றிக் காசுமீர் மாநிலத்தையே அதிகார வழி இரண்டாகத் துண்டாடிக் கூறுபடுத்தியது பாஜக அரசு.

சிந்து சமவெளி தொடங்கி கங்கை சமவெளி வரை வந்தேறிப் பரவி இருந்த ஆரியப் பார்ப்பனிய அதிகார வகுப்பினர் அப்பகுதிகளை ஆரிய வர்த்தம் என்ற அழைத்துக் கொண்டனர். அக்காலத்தில் பரவி இருந்த பல்வேறு ஆட்சியியல், வாழ்வியல் கருத்துகளை எல்லாம் தொகுத்து, குப்தர்கள் கால அளவில் அர்த்தசாசுத்திர, மனுசாசுத்திரங்கள் என உருவாக்கிக் கொண்டனர். தொடர்ந்த காலங்களில் ஆண்ட அரசுகளை - அரசர்களை மிரட்டியோ மயக்கியோ தங்களுக்கு வயப்படுத்திக் கொண்டு ஆரியப்பார்ப்பனிய அதிகாரத்தை ஊன்றிக் கொண்டனர்.

ஆங்கிலேயர்கள் வருகைக்குப் பின்னர் தங்களின் வழமையான உருட்டல் மிரட்டல் நடைமுறைகளுக்குப் பெரு மளவில் இடர்கள் ஏற்படவே ஆரியப்பார்ப்பனியம் ஒருங் கிணைந்து எப்படியாவது அதிகாரங்களை நிலைப்படுத்திக் கொள்ளுகிற வகையில் சூழ்ச்சி செய்யத் தொடங்கியது.

1925 இல் ஆர்எஸ்எஸ் தொடங்கப்படுவற்கு முன்பாகவே ஆரிய சமாஜம் உள்ளிட்ட பல இயக்கங்கள் உருவாக்கப்பட்டு ஆரியப் பார்ப்பனியக் கருத்துகளைப் பரப்பல் செய்துவந்தன.




1925இல் தொடங்கப்பட்ட ஆர்எஸ்எஸ்க்கு ஆரிய வர்ததத்தை உருவாக்க வேண்டும் என்பதே நோக்கமாக இருந்தது. அப்பகுதியில் வாழும் மக்கள் அவர்கள், சமஸ்கிருதத்தை மறுக்கமாட்டார்கள். அதுவே தேவமொழி என்பதை ஏற்பார்கள். எல்லா மொழியும் சமமானவை என்று சொல்ல மாட்டார்கள். கோயில்களில் சமஸ்கிருதத்தில் மட்டுமே ஓதவேண்டும். என்பதை ஏற்பார்கள் வேத புராணங்களை மறுக்கமாட்டார்கள். அவையெல்லாம் அநாதி. உலக அறிவே அவற்றில் தாம் உள்ளன என்பார்கள் என்பதை ஏற்பாளர்கள். இந்து மதமே சிறந்த மதம் என்பார்கள். இந்தியாவை இந்து நாடு என அழைக்க வேண்டும் என்பார்கள் என்பதை ஏற்பார்கள்.

அர்த்தசாசுத்திரத்தின்படி, மனுதர்மத்தின்படி வருண வேற்றுமைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.

இவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்துவதற்கு எந்த வன்முறை நடைமுறையையும் அவர்கள் செய்யத் தயங்கிய தில்லை. வரலாறு நெடுக ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பாளர் களையெல்லாம், அரசர்கள் தொடங்கி அறிஞர்கள், அற நெறியாளர்கள் எனப் பல்லாயிரம் பேர்களைக் கொலை செய்து வந்தவர்கள் அவர்கள். ஆர்எஸ்எஸ்இன் கொள்கைகளைப் பரப்புவதற்காக உருவாக்கப்பட்டவையே பாரதிய வித்யார்த்தி பரிஷத், பாரதிய ஜனசங்கம், வனவாசிகள் கல்யாண் ஆசிரமம், பாரதிய மஸ்தூர் சங்கம் என நூற்றுக்கும் மேலான அமைப்புகள்.

அவை அனைத்தும் ஒரே கருத்தில் ஒரே நோக்கத்தில் உருவாக்கப்பட்டவை. அவை யாவும் பார்ப்பனியத்தையே மேலாக எண்ணுபவை. அத்தகைய அடித்தளங்களின் மீது இந்திய அரசியல் அதிகாரத்தை பாரதிய ஜனதா கட்சி பாசிச பார்ப்பனிய உணர்வோடு கையகப்படுத்திக் கொண்டது.

கடந்த 2014 தொடங்கி 2024 வரை பத்தாண்டுகளில் அது ஆடி வருகின்ற வெறி ஆட்டம் எளிதே பட்டியலிட்டுவிட முடியாத படி அனைத்துத் துறைகளிலும் தாண்டவமாடி வருகிறது.

குசராத்திலும், மராட்டியத்திலும், தமிழ்நாட்டிலும் மதக்கலவரங்கள் எனும் பெயரில் அவர்கள் செய்த கொடிய கொலைகள் பல ஆயிரக்கணக்கானவை. பில்கிஸ்பானு உள்ளிட்ட பல கொலைகள் மாந்தயேமற்றவை. தபோல்கர் கல்புர்கி, கௌரிலங்கேசு உள்ளிட்ட அறிஞர் பெருமக்கள் பலர் பல மாநிலங்களில் கொல்லப்பட்டுள்ளனர்.

சிறுமி ஆசிபா உள்ளிட்ட குழந்தைகள், பெண்கள் பல்லா யிரக்கணக்கினர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப் பட்டுள்ளனர். வரவர இராவ், ஸ்டேன்சாமி-என நூற்றுக் கணக்கான மாந்த உரிமைச் செயல்பாட்டாளர்கள் கொடுஞ் சிறைக்கு ஆளாக்கப்பட்டவர்கள்.

என்ஐஏ, தேசியப் புலனாய்வு முகமை என்கிற பெயரில் மாநிலங்களுக்குள் அத்துமீறி நுழைந்து பன்னூற்றுக் கணக்கினரைச் சிறை கொட்டடிகளில் அடைத்து வைத்திருக் கின்றனர். மாட்டிறைச்சி சாப்பிட்டவர்கள் என்று கொல்லப் பட்டவர்கள் எத்தனை எத்தனையோ பேர்.

இவை ஏதோ இந்தப் பத்தாண்டின் செயல்பாடுகள் அல்ல; இதற்கு முன்பாகவும் சூழ்ச்சியாலேயே ஆட்சியைப் பிடித்துத் தன் அதிகாரத்தைப் படிப்படியாக ஊன்றியிருந்தது பாஜக.

1925 தொடங்கி படைத்துறை உள்ளிட்ட எல்லாத் துறைகளிலும் அரச அதிகாரிகள் அளவில் ஆர்எஸ்எஸ் ஊடுருவ தொடங்கிவிட்டது போலவே காங்கிரசு உள்ளிட்ட தேர்தல் அரசியல் கட்சிகளுக்குள்ளும் ஆர்எஸ்எஸ் ஊடுருவிச் செயல்பட்டது. காங்கிரசில் இருந்தவர்கள் பலர் ஆர்எஸ்எஸ் இயக்கத்தில் கரைந்தனர்.

அத்தகைய திட்டமிடல் வழியில்தான் 1952இல் பாரதிய ஜனசங்கமும் 1980-இல் பாரதிய ஜனதா கட்சியும் தோற்று விக்கப்பட்டன.

1977 இந்திராகாந்தி கொண்டு வந்த நெருக்கடிகால (எமர்ஜென்சி) நிலைக்குப் பிறகு ஜெயப்பிரகாஷ் நாராயணன் முன்னெடுத்த ஜனதா தளத்தை, ஆர்எஸ்எஸ் தேர்தல் அரசியல் களத்தின் வழி தங்களை வளர்த்துக் கொள்வதற்கு நல்லவாய்ப்பாக அமைத்துக் கொண்டது. அன்றைக்கு நடந்த ஆறாவது நாடாளுமன்றத்திற்குரிய 542 தொகுதிகளில் 345 இடங்களில் ஜனதாக் கூட்டணி வெற்றிபெற்றது. அதில் 298 இடங்களை ஜனதாகட்சி பெற்றிருக்க அவற்றுள் 95 இடங்கள் தங்களால் பெறப்பட்டது என்பதாக ஆர்எஸ்எஸ் அறிவித்துக்கொண்டது.

அந்த வாய்ப்பை இரண்டரை ஆண்டுகள் ஆட்சியில் இருந்து பயன்படுத்திக் கொண்டு அரசியல் களத்தில் ஊன்றிக் கொண்டது. தேர்தல் அரசியல் களத்தில் திட்டமிட்ட முதல்நகர்வு என்று எடுத்துக் கொண்டால்.

அடுத்தகட்ட நகர்வை 1980இலே தொடங்கிவிட்டது ஆர்எஸ்எஸ்.

1980இல் தொடங்கப்பட்ட பாரதிய ஜனதாகட்சி 1984இல் தனித்த ஓர் அணியை வாஜ்பாய் தலைமையில் கட்டிப் போட்டியிட்டு இரண்டு இடங்களில் மட்டுமே வெற்றிபெற்றது.

1989இல் நடைபெற்ற ஒன்பதாம் நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி தனித்த அணியை அத்வானி தலைமையில் கட்டி 85 இடங்களில் வெற்றி பெற்றது. ஜனதா தளத்தின் வழியாக கட்டப்பட்ட தேசிய முன்னணிக்கு 143 இடங்களில் வெற்றி கிடைத்திருந்தச் சூழலில் தேசிய

முன்னணிக்கு ஆதரவு தெரிவித்து வி.பி.சிங்கைத் தலைமை அமைச்சராக ஆக்கியது போல் வெளியில் காட்டிக்கொண்டு, அவரின் ஆட்சியைக் கவிழ்த்ததில் பாஜகவே காரணமாய் இருந்தது என்ற அவலத்தை விளங்கிக்கொள்ள வேண்டும். உள்ளிருந்தே கீழறுக்கும் பணியில் மண்டல் குழு அறிக்கையை நடைமுறைப்படுத்தவிடாமல் விபிசிங் ஆட்சியை இரண்டே ஆண்டில் கவிழ்த்தது பாஜக.

1990 செப்டம்பர், அக்டோபரில் எல்.கே.அத்வானி இரத யாத்திரை நடத்தி இந்து மதவெறியையூட்டியதன் பயனாக 1991இல் நடைபெற்ற பத்தாவது நாடாளுமன்றத் தேர்தலில் அத்வானி தலைமையில் கட்டப்பட்ட பாஜகவின் கூட்டணி 120 இடங்களில் வெற்றிபெற்று எதிர்க்கட்சியாய் ஆனது.

இந்தக் கால கட்டங்களையெல்லாம் இந்துமத வெறித் தனத்தைப் பரப்புவதற்கு பாஜக பயன்படுத்திக் கொண்டது. மதக்கலவரங்கள் நடத்தப்பட்டன. தமிழ்நாட்டில் பிள்ளையார் ஊர்வலங்கள் திட்டமிட்டு நடத்தப்பட்டன. 1992 ஆம் ஆண்டு பாபர் மசூதி இடிப்பைச் செய்து இந்து வெறியுணர்வு தூண்டிவிடப்பட்டது. 1996 ஆம் ஆண்டின் பதினோராவது நாடாளுமன்றத் தேர்தலில் பாஜகவின் கூட்டணி 161 இடங்களில் வென்றதுடன் வாஜ்பாயைத் தலைமை அமைச்சராக ஆக்கிப் பெரும்பான்மையை நிறுவ இயலாமல் 13 நாள்கள் ஆட்சியில் அமர்த்திக் காட்டியதன் வழி தனது மூன்றாவது கட்டத்தை அது எட்டியது.

1998இல் பன்னிரண்டாவது தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வழி 254 இடங்களில் 182 இடங்களைப் பெற்றி ருந்தது பாஜக. இந்தச் சூழலைத் தனக்கு நான்காவது கட்டமாக அது பயனாக்கிக் கொண்டது. வாஜ்பாய் தலைமை அமைச்சராகத் தேர்வு செய்யப் பெற்று 1999ஆம் ஆண்டு முதல் 2004 வரை ஆட்சியில் இருந்த காலம் பாஜகவிற்கு அடுத்த காலகட்டமாகக் காலூன்றி பார்ப்பனியத்தை வளர்த்துக் கொள்வதற்குப் பெருமளவில் பயன்பட்டது.

கல்வித்துறையில் பார்ப்பனியக் கருத்தாளர்களை நுழைத்தது. வரலாற்றைப் பார்ப்பனியச் சார்பில் எழுதியது, சமற்கிருத பரப்பல்களை அதிகப்படுத்தியது, சன்ஸ்தான் என்கிற பெயரில் சமற்கிருத ஊர்களை அமைத்தது எனப் பல்வேறு வகையில் ஆரியப் பார்ப்பனியம் காலூன்றி வலுப்படுத்தப்பட்டது.

தங்க நாற்கரச் சாலை திட்டம் பெயரில் நெடுஞ் சாலைத்துறையை விரிவுபடுத்தி அனைத்து ஊர்களுக்கும் புறவழியில் செல்கிறபடி விரிவான சாலை அமைப்புகளை அமைத்துச் சுங்கச்சாவடிகள் நிறுவி வழிப்பறிக் கொள்ளைகள் விரிவாகத் தொடங்கப்பட்டன. கனிமவளச் சூறையாடல்கள் அதிகமாகியது. 2004ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் பெயரில் காங்கிரசுக் கட்சி ஆட்சி ஆட்சி செய்தாலும் வலுவான எதிர்க்கட்சியாகத் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பெயரில் பாஜக இருந்தது.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி என்பது அடிப்படையில் பாஜகவுக்கு எதிரான கட்சியாக செயல்பட்டாலும், கோட்பாட்டு அடிப்படையில் பார்ப்பனிய எதிர்ப்புள்ள கூட்டணியாக இல்லை. இந்தியப் பார்ப்பனிய அரசியல் கட்டமைப்பை எதிர்க்கிற கொள்கையோ, பன்னாட்டுக் கார்ப்பரேட் முதலாளிகளை எல்லாம் விரட்டிவிட்டு அவர்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்து, மண்ணின் தொழில்களை வலுப்படுத்த வேண்டுமான கொள்கை கொண்டதோ இல்லை. மாநிலங்களுக்கே முழு உரிமைகளை அளித்திட வேண்டும் எனும் கருத்தும் அவர்களுக்கு இல்லை எனவே பாஜகவால் இவர்களை எளிதே வீழ்த்திவிட முடிந்தது.

இந்த நிலையில் 2014-2024 என்பது அவர்கள் ஏற்கனவே ஐந்தாறு கட்ட நிலையில் நிலைப்படுத்திக் கொண்ட தங்களின் அதிகாரக் கட்டமைப்பை இறுக்கமாக வலுப்படுத்திக் கொள்ள பெருவாய்ப்பாக்கிக் கொண்டது.

சாகர் மாலா என்று கடல் வளத்தை, துறைமுக ஆளுகைகள் அதிகாரத்தை அம்பானி அதானிகளுக்கு அளித்த தன் வழித்தடங்கள் அளவில் வலுப்படுத்திக் கொண்டனர். நெடுஞ்சாலைகளில் மிக அதிகப்படியான சுங்கச்சாவடிகள் அமைத்து வழிப்பறிக் கொள்ளை செய்ய தொடங்கினர்.

ஜிஎஸ்டி வரி என்கிற பெயரில் வணிக வரிகள், முன்னர் போராடிப் பெற்றிருந்த தொழிலாளர் சட்டங்களை எல்லாம் செயலிழக்கச் செய்துவிட்டு முழுக்க முழுக்க கொத்தடிமை முறைகள் ஆக்கியது. கல்வித்துறையை முழுக்க முழுக்க இந்திய அதிகாரத்துறையிடம் கொண்டு சென்றது. அனைத் திலும் நுழைவுத் தேர்வு என்கிற வகையில் (நீட் உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகள் வழியாகவே) மாணவர்களைப் பாகுபடுத்தி ஒடுக்கப்பட்ட வகுப்பு மாணவர்களின் கல்வி ஈடுபாட்டைத் தடைசெய்தது. பாடத்திட்டங்களில் பார்ப்பனியக் கருத்தாடல்களை நுழைப்பதன் வழிமாநில கல்விக்கு மொழிப் பாடங்கள் தவிர பிறவற்றை உருவாக்குவதில் தடைசெய்தது. தேசியக்கல்விக் கொள்கையை எப்படியாவது திணித்திடுவது, மாநில அறிவை அடையாளப்படுத்துகிற சித்த மருத்துவம் போன்ற துறைகளை வளர விடாமல் செய்திடுவது. ஆக எல்லாவற்றிலும் மாநில அடையாளங்களே சிறிதும் தலைதூக்கி விடாதபடி ஆளுநர்களைக் கொண்டு, அதிகாரிகளைக் கொண்டும் மாநில உணர்வுகளையே தேய்த்து அழித்து வருகிற நடைமுறையை இந்தப் பத்தாண்டுகளில் ஒன்றிய பாசக வல்லாட்சி கடுமையாகச் செய்து நிறைவேற்றி வந்திருக்கின்றது.

மணிப்பூர் தேசத்தையே நாசப்படுத்தி நடத்திய வெறி யாட்டமும், அங்குப் பெண்களுக்குச் செய்த கெடுமைகளையும் கொடுங்கொலைகளையும் உலகமே அறிந்தாலும் அவற்றைப் பற்றிக் கவலைப்படாது வெறியாட்டம் போட்டு வருகின்றனர்.

வேளாண் சட்டங்கள் என்கிற கொடுஞ்சட்டத்தைக் கொண்டு வந்து, அதை எதிர்த்துப் போராடிய உழவர்கள் நூற்றுக் கணக்கினர் இறந்துபோனது பற்றியோ ஆண்டுக்கணக்கில் அவர்கள் தில்லி நெடுஞ்சாலைகளில் போராடியது பற்றியோ கவலைகொள்ளாத ஆரியப்பார்ப்பனிய திமிர் தன்மையில் தாண்டவமாடி வருகின்றது.

பட்டேலுக்கு 3000 கோடியில் சிலை, ராமனுக்குப் பல ஆயிரம் கோடியில் கோயில், பல ஆயிரம் கோடியில் நாடாளு மன்றத்திற்குப் புதிய கட்டடம் பாசிச பாசகமோடி ஆட்சி என மக்கள் பணத்தைப் பாழாக்குவது. பல்கலைக்கழக வேந்தர்களைத்

தங்கள் இழுப்புக்கு நகர்த்துவது, சனாதனமே சிறந்தது என ஊடகங்களைக் கையில் வைத்துக் கொண்டு உளறிக் கொட்டுவது,

திருவள்ளுவரை, வள்ளலாரைக் காவி புனைந்து இழிவுபடுத்துவது, தமிழ் தெரியாமல் தமிழியம் தெரியாமல் ஆரிய பூச்சு பூசிப் பேசித் திரிவது, மாநில உரிமைகளுக்குத் தடையாக இருந்து முட்டுக்கட்டை இடுவது-என ஆளுநரை வைத்துக்கொண்டு பார்ப்பனிய பாஜக அரசு அடிக்கிற கொட்டங்கள் கொஞ்ச நஞ்சமன்று. அவற்றையெல்லாம் எப்படி முறியடிக்கப் போகிறோம்.

தேர்தலில் பாஜகவைத் தோற்கடிப்பதால் மட்டுமே இவற்றையெல்லாம் நீக்கிவிட முடியாது. தேர்தல் களத்தில் மட்டுமல்ல மக்கள் களத்தில், குமுகக் களத்திற்குள் நஞ்சாக ஆரியப் பார்ப்பனியம் பரவி இருக்கிறது.

பாஜகவை, அதன் பரிவாரங்கள், ஆர்எஸ்எஸ்ஐ பரவி இருக்கின்றவர்கள் அளவில் அடி அறுக்காமல் அவற்றின் கொடுமைகளிலிருந்து மீளமுடியாது..

அவை வேரூன்றி வளர்வதற்கு அவற்றுக்கு அடித்தளமாக இருப்பதே ஒரேமொழி (சமஸ்கிருத-இந்தி), ஒரேமக்கள் (ஆரியப் பார்ப்பனிய வயப்படுத்தப்பட்ட மக்கள்), ஒரேநாடு (மாநில அடையாளங்களை அழித்திட்ட நிலையிலான இந்தியா), ஒரே பண்பாடு (ஆரியத்தை உயர்த்திக் கொண்டிருக்கிற வருணாச்சரமப் பண்பாடு), ஒரே வரலாறு (ஆரியமே உலகம். ஆரியமே அறிவு என அனைத்தையும் தனக்காக உருவாக்கிக் கொண்டிருக்கிற வரலாறு) என இத்தகைய புனைவுகளை எல்லாம் வேரறுக்காமல் ஆர்எஸ்எஸ்ஐயோ பாஜகவையோ வீழ்த்திவிட முடியாது.

எனவே அடிப்படையானது மாநிலங்கள் அனைத்தும் அவ்வற்றின் அதிகாரங்களை மீட்டு நிலைப்படுத்திக் கொள் வதற்கு அனைத்து மாநிலங்களும் தங்களின் உரிமைகளுக்குப் போராடியாக வேண்டும்.

மாநிலங்கள் என்கிற மொழிவழித் தேசிய இனங்கள் தங்கள் உரிமைகள் என்கிற போர் கருவியால்தான் பாரத வர்ஷம் எனும் ஒரேநாடு என்னும் ஆரியப் பார்ப்பனியப் பாசிசத்தை வீழ்த்த முடியும்.

அத்தகைய மாநில உரிமை இயக்கங்கள் தங்களுக்குள் ஒரு கூட்டமைப்பை உருவாக்கிக் கொண்டு புதிய ஒன்றியத் தைக்கூட உருவாக்கிக் கொள்ளலாம். அந்த வகையில் யாவரையும் கேளீராகக் கருதுகிற, அறஉணர்ச்சி என்பது வேறு, பாரதத்தேஷ்-என்று ஆரிய அடிமைச் சகதிக்குள் அடிமைப்பட்டு மூழ்குகிற நிலை என்பது வேறு.


எனவே, ஆரியத்தை பாஜகவை வேரறுக்க மாநிலங் களின் உரிமைப் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிப்போம். அவையே முதன்மையானது என முழங்குவோம்!

அனைவரும் இணைந்து தமிழ்நாட்டு உரிமைகளை முன்நிறுத்திப் போராடும் சூழலில்

ஆரியப் பார்ப்பனியப் பாசிச சனாதன பாரதம், பாரத வர்ஷம் எனும் அவர்களின் கருத்தாடல்கள் அனைத்தும் பொசுங்கட்டும்.

சின்னபுங்கனேரி ஆசிரியர்

## வே.காசிநாதன் மறைவு




மார்க்சியப் பெரியாரியப் பொது வுடமைக் கட்சியின் கடலூர் மாவட்ட துணைச் செயலாளரும் தோழர் வே.ஆனைமுத்துவுக்கு அணுக்க மான தோழராக விளங்கிய வருமான சின்னபுங்கனேரி ஆசிரியர் வே.காசி நாதன் 19.02.2024 அன்று வயது மூப்பின் காரணமாக இயற்கை எய்தினார். அன்னாரை இழந்து வாடும் குடும்ப உறவுகள் திருமதி சிவபதி காசிநாதன், கா.அமுதா-ஆதித்தன், கா.ஜோனட்-பாண்டியன், கா.அனார் கலி-குலோத்துங்கன்; கா.சாக்ரடீஸ்-செல்வநாயகி; கா.சூரியா-ராஜன் ஆகியோருக்கு ஆழ்ந்த இரங்கலைத் மா.பெ.பொ.க. சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்.

வே.காசிநாதன் அவர்கள் திருச்சி பெரியார் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் பயின்றவர். அவர் தனது அண்ணன் து.தில்லைவனத்தின் வேண்டுகோளை ஏற்று 1972-73இல் நகலகம், கணினி இல்லாத காலத்தில் ஆசிரியர் பணியில் ஓராண்டு ஊதியம் இல்லா விடுப்பு எடுத்து பெரியார் ஈவெரா சிந்தனைகள் தொகுப்பிற்காக தோழர் வே.ஆனைமுத்து குடி அரசு, விடுதலை ஏடுகளில் குறித்து கொடுத்ததை சுமார் இருபதாயிரம் பக்கங்கள் எடுத்து எழுதியவர். காட்டுமன்னார் கோவில் பகுதியில் பெரியார் நகர் என்று பெயர் வர காரணமானவர். காட்டுமன்னார்கோவில் சிந்தனையாளர் கழகத்தின் சார்பில் பொதுக்கூட்டங்கள் பல முன்னின்று நடத்தியவர். ஆசிரியர் பணியிலும் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி அமைப்பு தோன்றவும் அதன் முதன்மை செயல்பாட்டாளராக பல ஆண்டுகள் பணியாற்றியவர். வே.காசிநாதன் அவர்களின் கண்கள் புதுச்சேரி அரவிந்தர் கண் மருத்துவமனைக்கு கொடையாக வழங்கப்பட்டது. அவரின் உடல் சென்னை மதுரவாயல் லலித்தாம்பிகை மருத்துவக்கல்லூரிக்கு கொடையாக வழங்கப்பட்டது.

அன்னாரின் நினைவேந்தல் - படத்திறப்பு 3.3.2024 அன்று சின்னபுங்கனேரியில் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் தோழர் ச.சீவானந்தம் தலைமையில் நடைபெற்றது. படத்தை ஆசிரியர் கூட்டணி மாநில தலைவர் மூ.மணிமேகலை திறந்துவைத்து நினைவேந்தல் உரை யாற்றினார். நிகழ்வில் மு.தங்கமணி ஆசிரியர் மு.இராம நாதன் ஆசிரியர் கு.ஆதித்தன் தி.துரைசித்தார்த்தன் மற்றும் ஆசிரியர் கூட்டணியின் தோழர்கள் பலர் பங்கேற்று நினைவேந்தல் உரை நிகழ்த்தினர். தோழர் வே.காசிநாதன் புகழ் ஓங்குக!!!

## இந்துக்களின் வாக்குகளை அணிதிரட்டவே
# குடியுரிமைத் திருத்தச் சட்ட அறிவிப்பாணை வெளியீடு!



க. முகிலன்

1925ஆம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ். தோற்றுவிக்கப்பட்டது. கி.பி.1200 முதல் இசுலாமியர்கள் 500 ஆண்டுகளும் அதன்பின் கிறித்தவர்கள் 200 ஆண்டுகளும் இந்தியாவை ஆட்சி செய்ததால் இந்து மதத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகளைச் சரிசெய்து, மீண்டும் சனாதன தர்மத்தை நிலைநாட்டி, இந்தியாவை இந்துமத அடிப்படையில் இந்துக்களுக்கான நாடாகக் கட்டமைப்பதே ஆர்.எஸ்.எஸ்.இன் குறிக்கோள்.

எனவே ஆர்.எஸ்.எஸ்.ம் அதன் கிளை அமைப்புகளான சங் பரிவாரங்களும் இசுலாமியர்களையும் கிறித்துவர்களையும் இந்து மதத்தின் பகைவர்களாகக் கருதி ஒடுக்க முனைகின்றனர். ஆர்.எஸ்.எஸ்.இன் அரசியல் அமைப்பான பா.ச.க. ஒன்றிய அரசிலும் பல மாநிலங்களிலும் ஆட்சியதிகாரத்தில் அமர்ந்த பின், சட்ட ஏற்புடன் இசுலாமியர்கள் ஒடுக்கப்பட்டு வருகின்றனர்.

இசுலாமியர்களை ஒடுக்கும் திட்டத்தின் ஒரு கூறாக 2019 திசம்பரில் நரேந்திர மோடி தலைமையிலான பா.ச.க. அரசு குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை (CAA-சிஏஏ) நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றியது. குடியரசுத் தலைவர் ஒரே நாளில் இச்சட்டத்திற்கு ஒப்புதல் அளித்தார். இச்சட்டத் திருத்தம் இந்தியாவின் அண்டை நாடுகளான பாக்கித்தான், வங்கதேசம், ஆப்கானித்தான் ஆகிய மூன்று நாடுகளில் இசுலாம் மதத்தின் ஒடுக்குமுறைக்கு ஆளான இந்துக்கள், சீக்கியர்கள், பார்சிகள், பவுத்தர்கள், சமணர்கள், கிறித்தவர்கள் (இப்பட்டியலில் கடைசி நேரத்தில் கிறித்தவர்கள் சேர்க்கப்பட்டனர்) 2014 திசம்பர் 31க்கு முன் இந்தியாவுக்குள் வந்திருந்தால் அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வழிவகை செய்கிறது.

இச்சட்டத்திருத்தத்தில் இந்தியாவின் அண்டை நாடுகளான சிறீலங்கா, மியான்மர், நேபாளம், பூட்டான் ஆகியவை சேர்க்கப்படவில்லை. ஏனெனில், இஸ்லாமிய நாடுகளில் மட்டுமே மத ஒடுக்குமுறை இருக்கிறது என்கிற நச்சுக் கருத்தை இந்துக்களிடம் பரப்ப வேண்டும் என்பதே ஆகும்.

சிறீலங்காவில் பௌத்த மதத்தின் பெயரால் தமிழர்கள் கொடுந்துன்புறுத்தலுக்குள்ளாகி தமிழ்நாட்டில் அடைக்கலம் புகுந்து, ஏதிலிகளாக வாழ்ந்து வருகின்றனர். இந்துக்களான இவர்களுக்கு இந்தியக் குடியுரிமை அளிக்க சிஏஏ-வில் ஏன் வழிவகை செய்யவில்லை. இவர்கள் தமிழர்கள் என்கிற பகை உணர்ச்சியா? இதேபோல், மியான்மரில் உலகிலேயே மிகக் கொடுமையான மத ஒடுக்குமுறைக்கு உள்ளாகி வரும் ரோஹிங்கியா முசுலீம்களுக்கு ஏன் குடியுரிமை வழங்கப்படவில்லை.

குடியுரிமை வழங்குவதற்கு மதத்தை அடிப்படையாகக் கொள்ளும் அணுகுமுறை உலகில் எந்த நாட்டிலும் இல்லை. மதச்சார்பற்ற-குடியாட்சிய நாட்டில் குடியுரிமை வழங்குவதற்கு ‘மத ஒடுக்குமுறை’ என்கிற அளவுகோல் என்பது இந்திய அரசமைப்புச் சட்டக்கூறு 14க்கு முற்றிலும் எதிரானதாகும். இந்துத்துவப் பாசிச சிந்தனையில் மூழ்கிக் கிடகும் ஆர்.எஸ்.எஸ். - பா.ச.க.விற்கு முசுலீம்களை எப்போதும் அச்சத்திலிருக்கும்படி செய்வதற்கான ஆயுதமே சிஏஏ சட்டம்.

அதனால் இந்தியா முழுவதும் முசுலீம்கள் சிஏஏ-வை எதிர்த்துப் போராடினர். குறிப்பாக பெண்கள் வீதியில் அமர்ந்து தொடர்ந்து போராடினர். தில்லி ஷாகின்பாக்கில் இசுலாமியப் பெண்களின் போராட்டம் உலக அளவில் கவனம் பெற்றது. முசுலீம்-அல்லாத மாணவர்கள், இளைஞர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள், முன்னாள் நீதிபதிகள், மூத்த வழக்குரைஞர்கள், இயக்கங்கள், அரசியல் கட்சிகள் எனப் பல தரப்பினரும் சிஏஏ-வை எதிர்த்தனர். ஒன்றிய அரசு இப்போராட்டத்தைக் கடுமையாக ஒடுக்கியது. 65 பேர் கொல்லப்பட்டனர். 3000 பேர் கைது செய்யப்பட்டனர்.



ஒன்றிய அரசு, இந்தியாவில் வாழும் இசுலாமியரின் குடியுரிமைக்கு எந்தச் சிக்கலும் ஏற்படாது; சிஏஏ குடியுரிமை வழங்குவதற்கானதே தவிர, பறிப்பதானதற்கு அல்ல என்று தொடர்ந்து கூறிவந்தது. ஆனால் அது உண்மையன்று.

சிஏஏ-வை அடுத்து தேசிய குடிமக்கள் பதிவேடு (National Register of Citizens - NRC) தயாரிக்கப்பட உள்ளது. இதற்கு பெற்றோர்-பாட்டன்-முப்பாட்டன் ஆகியோரின் பிறந்த நாள், இருப்பிடம், மதம் முதலான சான்றுகள் தரப்பட வேண்டும். அசாமில் அயலாரை வெளியேற்றும் மாணவர் போராட்டம் தீவிரமாக நடைபெற்றது. இராசிவ்காந்தி தலைமை அமைச்ச ராக இருந்த போது 1985இல் போராட்டக் குழுவினருடன் ஒன்றிய அரசு ஓர் ஒப்பந்தம் செய்தது. அதன்படி அசாமில் 3 கோடி மக்களுக்கான குடிமக்கள் பதிவேட்டிற்கான கணக்கீடு எடுக்கப்பட்டது. இதில், இந்தியக் குடியுரிமை இல்லாத ‘அந்நியர்கள்’ 19 இலட்சம் பேர் இருப்பதாகக் கண்டறியப் பட்டது. இவர்களில் 7 இலட்சம பேர் இசுலாமியர், 12 இலட்சம் பேர் இந்துக்கள். சிஏஏ-இன்படி 12 இலட்சம் இந்துக்களுக்குக் குடியுரிமை வழங்கப்படும். 7 இலட்சம் இசுலாமியர்கள் தடுப்பு முகாமுக்கு அனுப்பப்படுவார்கள். இந்தியாவில் 18 கோடி இசுலாமியரும் 2.2 கோடி கிறித்தவர்களும் உள்ளனர் (உலக அளவில் கிறித்தவர் 238 கோடி, இசுலாமியர் 190 கோடி, மதநம்பிக்கையற்றவர் 119 கோடி. இந்துக்கள் 116 கோடி). இந்தியாவில் குடிமக்கள் பதிவேட்டிற்கான கணக்கெடுக்கும் போது எத்தனை இலட்சம் அல்லது கோடி முசுலீம்களின் குடியுரிமை பறிக்கப்பட்டு ‘அந்நியர்களாக’ ஆக்கப்படுவார் களோ?

சிஏஏவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் 237 வழக்குகள் தொடுக்கப்பட்டன. கரோனா பெருந்தொற்று 2020 மார்ச்சு முதல் தீவிரமடைந்து இரண்டு ஆண்டுகள் நீடித்ததால் சிஏஏ எதிர்ப்புப் போராட்டம் தொடரவில்லை. நாடாளுமன்றத்தில் இயற்றப்படும் சட்டத்திற்கு ஆறு மாதங்களுக்குள் அதைச் செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட வேண்டும். கடும் எதிர்ப்பு காரணமாக மோடி அரசு சிஏஏ-விற்கான விதிமுறைகளை உருவாக்கவில்லை. ஒவ்வொரு ஆறு மாதத்திற்கும் இக்கால அளவை நீட்டித்துக் கொண்டது. உச்சநீதிமன்றத்திலும் வழக்கு விசாரணைக்கு வருவதைத் தடுக்க இன்னும் விதிமுறைகள் வகுக்கப்படவில்லை என்று கூறி போக்குக் காட்டி வந்தது.

2024 நாடாளுமன்றத்திற்கான தேர்தல் நாளை தேர்தல் ஆணையம் அறிவிப்பதற்கு சில நாட்களுக்கு முன், 11.3.2024 அன்று குடியுரிமைத் திருத்தச் சட்டத்தைச் செயல்படுத்துவதற் கான விதிமுறைகளை வெளியிட்டது. தேர்தலுக்கு முன் சிஏஏ-வை செயல்படுத்தவது குறித்து அறிவித்தால். பெரிய அளவில் போராட்டம் நடத்த இயலாது என்று பா.ச.க. கருதியிருக்கும். தேர்தல் பத்திர விவரங்கள் வெளியிடப்பட்ட தால் பா.ச.க.வின் ஊழலும் மிரட்டிப் பணம் பறிக்கும் போக்கும் அம்பலமாகி இந்தியா முழுவதும் முகாமையான பேசுபொருளானது. இதைத் திசைதிருப்பும் நோக்கில் சிஏஏ-வுக்கான விதிகளை பா.ச.க. வெளியிட்டது. ஏனெனில் குடியுரிமை வழங்குவது நீண்ட நடைமுறை கொண்டது. இதை இப்போது வெளியிட்டதன் மற்றொரு நோக்கம் நீண்டகால தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றியதாகக் காட்டி இந்துக்களின் வாக்குகளை ஈர்ப்பதாகும்.

வாய்ப்புள்ள போதெல்லாம் மாநில உரிமைகளைப் பறிப்பது ஒன்றிய அரசின் வழக்கமாகும். இதுவரை, இந்தியக் குடியுரிமை பெற விரும்பும் அயல்நாட்டைச் சேர்ந்த ஒருவர் முதலில் மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பிக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்து மாநில அரசுக்கு அனுப்புவார். மாநில அரசு தன் பரிந்துரையுடன் உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பும். 2009ஆம் ஆண்டின் குடியுரிமை விதிகளின்படி, ஒருவருக்குக் குடியுரிமை வழங்குவதற்கு முன்பு, மாநில அரசின் கருத்தைக் கேட்க வேண்டும். 2024 மார்ச்சு 11 அன்று பிறப்பிக்கப்பட்ட சிஏஏ-வுக்கான விதிகளில் இந்த நடைமுறை அடியோடு நீக்கப்பட்டுள்ளது.

இப்போது ஒன்றிய அரசே நேரடியாக மாவட்டக் குழு, அதிகாரமளிக்கப்பட்ட குழு என இரண்டை ஏற்படுத்தும். குடியுரிமை பெற விரும்பும் ஒருவர் முதலில் மாவட்டக் குழுவுக்கு இணைய வழியில் விண்ணப்பிக்க வேண்டும். இவர் ஆறு வகையான சான்றுகளை அளிக்க வேண்டும். எந்த மதத்தைச் சேர்ந்தவர், எந்த நாளில் இந்தியாவுக்குள் வந்தார், வாடகைக் குடியிருப்புச் சான்று, பிற அடையாளச் சான்றுகள், பாக்கித்தான், வங்கதேசம், ஆப்கானித்தான் ஆகிய நாடுகளில் ஒன்றால் வழங்கப்பட்ட ஒட்டுநர் உரிமச் சான்று, கல்விச் சான்று ஆகியவற்றை விண்ணப்பத்துடன் அளிக்க வேண்டும். மாவட்டக் குழுவில் மூத்த காவல்துறை கண்காணிப்பாளர் அல்லது அஞ்சல் துறை கண்காணிப்பாளர் இருப்பார்.

மாநில அளவில் அதிகாரம் அளிக்கும் குழு செயல்படும். இதில் மாநிலத்தின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இயக்குநர், உளவுத் துறை உயர் அலுவலர், தலைமை அஞ்சல் அலுவலர், மாநில அல்லது தேசிய தகவல் நடுவத்தின் அலுவலர், ஒன்றிய உள்துறை அமைச்சக அலுவலர் ஒருவர், இரயில்வே மண்டல மேலாளர் ஆகியோர் இருப்பர். விண்ணப்பித்தவர் குறித்து உளவுத் துறையும், பாதுகாப்புத் துறையும் ஆய்வு செய்யும். இக்குழுவே குடியுரிமை வழங்கும் அதிகாரம் படைத்தது.

இந்திய முசுலீம்களின் குடியுரிமை சிஏஏ-வால் பாதிக்கப் படுமா என்று நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட வினாவுக்கு “எந்தவொரு குடிமகனும் குடியுரிமைக்கான சான்றுகளைக் காட்டுமாறு கேட்கப்படமாட்டார்கள்” என்று ஒன்றிய அரசு விடை கூறியது. அதேபோன்று தேசியக் குடியுரிமைப் பதிவேட்டால் (NRC) பாதிக்கப்படுவார்களா என்ற வினாவுக்கு, “தேசிய அளவில் குடிமக்கள் பதிவேடு எடுப்பது பற்றி இன்னும் அரசு முடிவு செய்யவில்லை. எனவே சிஏஏ-வையும் என்.ஆர்.சி.யையும் இணைத்துப் பேச வேண்டியதில்லை” என்று விடை கூறப்பட்டது. ஆனால் நாடாளுமன்றத்திற்கு

வெளியில் பா.ச.க. தலைவர்கள் என்.ஆர்.சி. எடுக்கப்படும் என்று இசுலாமியரை அச்சுறுத்தும் வகையில் பேசி வரு கின்றனர். மேலும் கடந்த பத்தாண்டுக் கால மோடி ஆட்சியில் பா.ச.க. தன் தேவைக்கு ஏற்ப பச்சோந்தித் தனமாக நடந்து கொண்டிருக்கிறது. 1991 பா.ச.க. ஆட்சியில் உத்தரப்பிரதேச முதல்வர் கல்யாண்சிங் பாபர் மசூதியைக் காப்போம் என்ற உச்ச நீதிமன்றத்தில் வாக்குறுதி கொடுத்துவிட்டு, பிறகு இடித்தார்கள்.

ஆர்.எஸ்.எஸ்.இன் தத்துவகுருவான கோல்வால்கர், ''இந்த நாட்டில் உள்ள முசுலீம்கள் இந்துக்களின் பழம் பெருமைகளையும் வாழ்வியல் முறைகளையும் போற்றி மதித்து நடக்க வேண்டும். இராமரை இந்நாட்டின் உத்தம புருஷனாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு முசுலீம்கள் நடந்து கொண்டால் இந்நாட்டில் வாழலாம். இல்லையேல் இரண்டாந்தரக் குடிமக்களாகத்தான் வாழமுடியும். வாக்குரி மையும் கோரக்கூடாது'' என்று கூறியுள்ளார். கடந்த பத்து ஆண்டுகளில் மோடியின் ஆட்சி முசுலீம்களை இத்தன்மையில் நடத்தவே முயன்று வருகிறது. மாட்டுக்கறி வைத்திருக் கிறார்கள் என்றும், பசுக்களை இறைச்சிக்காக கொண்டு செல்கிறார்கள் என்றும் வடஇந்தியாவில் பல்வேறு இடங்களில் முசுலீம்கள் சங் பரிவாரக் குண்டர்களால் தாக்கப்பட்டனர்; கொல்லப்பட்டனர்.

நரேந்திர மோடியே மேடையில், ''உடையை வைத்து யார் (முசுலீம்) என்று தெரிந்து கொள்ளலாம்'' என்று பேசினார். உத்தரப்பிரதேச முதலமைச்சர் சட்டப் பேரவைக்கான தேர்தல் பரப்புரையில் 80 விழுக்காடு (இந்துக்கள்) எதிர் 20 விழுக்காடு (முசுலீம்கள்) என்று கூறினார். 2019இல் இரண் டாவது தடவையாகத் தலைமை அமைச்சரானதும் நரேந்திர மோடி ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு அரசமைப்புச் சட்டப்படி சிறப்பு உரிமைகள் அளிக்கும் பிரிவு 370யை நீக்கினார். ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தை இரண்டாகப் பிரித்து, மாநிலம் என்கிற தகுதியையும் பறித்து, ஒன்றிய ஆட்சிப் பகுதிகளாக மாற்றினார். இது இந்தியா முழுவதும் உள்ள முசுலீம்களை அச்சுறுத்தும் நடவடிக்கையே ஆகும்.

இந்துக்களின் வாக்குகளைத் திரட்டுவதையும், இசுலாமி யர்களை அச்சுறுத்துவதையும் நோக்கமாகக் கொண்டே தேர்தல் அறிவிப்புக்குமுன் சிஏஏவை செயல்படுத்துவதற்கான அறிவிப்பாணையை பா.ச.க. ஒன்றிய அரசு வெளியிட்டுள்ளது. அரசியலை இந்துமயமாக்கு என்று சாவர்கர் கூறியதை மோடி ஆட்சி செயல்படுத்தி வருகிறது.

மோடி மூன்றாவது தடவையாக தலைமை அமைச்ச ரானால், சிஏஏவும் தேசியக் குடிமக்கள் பதிவேடும் செயல் படுத்தப்படும். பல இலட்சம் இந்திய இசுலாமியர்கள் குடியுரிமை யற்றவர்களாக்கப்பட்டு, ஏதிலிகளாகத் தடுப்பு முகாம்களில் மந்தைகள் போல் அடைக்கப்பட வாய்ப்புண்டு. சிஏஏ இசுலாமி யருக்கு மட்டுமின்றி சமத்துவக் குடியாட்சியம் இந்தியாவில் காப்பற்றப்பட வேண்டும் என்று விரும்புகிற அனைவருக்கும் எதிரானது. எனவே 2024 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ச.க.வை வீழ்த்த வேண்டும். சமூக தளத்திலும் பாசிச இந்துத்துவ ஆற்றல் முறியடிக்க வேண்டும். ❖

## மே 17 இயக்கம் இரண்டு நாள்கள் நடத்திய தமிழ்த் தேசியப் பெருவிழா 2024




மே 17 இயக்கத்தின் சார்பில் 2024 பிப்ரவரி 24-25, இரண்டு நாள் தமிழ்த் தேசியப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. பிப்ரவரி 24 காலை 9 மணிக்கு சைதாப் பேட்டை, வி.கே.எம். மகாலில் இரா. நல்லகண்ணு அறிவுச்சுடரேற்றி தொடங்கி வைத்தார். அசோக்குமார் தலைமையில் பெ.ஆ.பிரவீன்குமார் வரவேற்புரையாற்றிட திருமுருகன் காந்தி நோக்க உரையாற்றினர். அறிஞர் அவையம் என்ற பெயரில் தமிழ்நாட்டின் பலதுறை சார்ந்த ஆளுமைகளை அழைத்து 24 அன்று மூன்று அமர்வு களும் 25 அன்று இரண்டு அமர்வுகளும் நடை பெற்றன. விருது வழங்கும் விழா சைதாப்பேட்டை தேரடியில் திறந்தவெளியிலும் நடைபெற்றது.

25.2.2024 அன்று நடைபெற்ற நான்காவது அமர்வில் வாலாசா வல்லவன் கலந்துகொண்டு திராவிடர் இயக்கமும் தமிழ்த் தேசிய எழுச்சியும் என்ற தலைப்பில் கருத்துரையாற்றினர்.



அருந்திறல் தமிழர் வாழ்நாள் சாதனையாளர் விருது வே.ஆனைமுத்து அவர்களுக்கு வழங்கப்பட்டது. நாடாளு மன்ற உறுப்பினர் வை.கோ. விருதுகளை வழங்கினார். ஆனை. பன்னீர்செல்வம் பெற்றுக் கொண் டார். இரா.நல்ல கண்ணு, தொ.பரமசிவன், க.நெடுஞ்செழியன், கே.இராஜய்யன் ஆகியோருக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. தமிழ் கலை செயற்பாட்டாளர் விருது தமிழ்வேந்தன் (எ) வேலுச்சாமி, பேரா. பாத்திமாபாபு, ப.பா. மோகன், கம்பம் அப்பாஸ் ஆகியோருக்கும் வழங்கப்பட்டன. இரண்டு நாள் நிகழ்வுக ளும் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

# பெண்களின் சமஉரிமைக்குத் தொடரும் போராட்டம்



தி.துரைசித்தார்த்தன்



திவ்யா மோடி

தில்லியைச் சேர்ந்த முற்போக்குக் கருத்தினரும் தொழில் முனைவோருமான திவ்யா மோடி அவர்கள் ''திவ்யா மோடி டோங்யா'' என்றுள்ள தனது பெயரை திருமணத்திற்கு முந்திய பெயரான 'திவ்யா மோடி' எனப் பெயர் மாற்றம் கோரி விண்ணப்பித்தார். அதற்கு பதிப்புத்துறை, வீட்டுவசதி மற்றும் நகரகப் பணிகள் அமைச்சகத்திலிருந்து ஓர் அறிவிக்கை பெறப்பட்டது.

மேற்குறிப்பிட்ட அறிவிக்கை (Notification) யில் பெயர் மாற்றம் செய்திட மணவிலக்குப் பெற்றதற்கான நீதிமன்றத் தீர்ப்பாணையின் நகல் அளித்திடல் வேண்டும் அல்லது மணவிலக்கு வழக்கு நிலுவையில் இருப்பின் கணவரிட மிருந்து 'மறுப்பின்மைச் சான்று' பெற்று அளித்திடல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மறுப்பின்மைச் சான்று அளித்திடாவிடின் வழக்கின் தீர்ப்பு வரும்வரை பெயர் மாற்றம் செய்திட முடியாது எனவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பெயர் மாற்றத்திற்கு மேற்குறிப்பிட்டத் தகவல்கள் அளிக்கப்படல் வேண்டும் என்ற அறிவிக்கை, அரசமைப்புச் சட்டம் பிரிவு 14இல் 'சட்டத்தின்முன் அனைவரும் சமம்' என்று கூறப்பட்டுள்ளதையும், பிரிவு 19(1) (a) இல் அளிக்கப் பட்டுள்ள கருத்துச் சுதந்திரத்தையும், பிரிவு 21இல் உறுதியளிக் கப்பட்டுள்ள தனிமனிதச் சுதந்திரத்தையும் மறுப்பதாகவும் இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு எதிரானதும் ஆகும் என்று ஒன்றிய அரசுக்கு எதிராக 29.02.2024 அன்று தில்லி உயர்நீதிமன்றத்தில் திவ்யா மோடி வழக்குத் (W.P. (C) 3028/2024)தொடுத்துள்ளார்.

இந்த வழக்கை தற்காலிகத் தலைமை நீதிபதி மன்மோகன், நீதிபதி மன்மீத் பிரீதம்சிங் அரோரா ஆகியோர் அமர்வு விசாரணைக்கு ஏற்றுக்கொண்டு வழக்கை 28.05.2024 அன்றைக்கு ஒத்தி வைத்துள்ளது.

திருணமான பெண் தன் பெயருக்குப் பின் கணவன் பெயரைச் சேர்த்துக்கொள்வது பெண்ணடிமைத்தனத்தின் அடையாளம். அமெரிக்கா, அய்ரோப்பிய நாடுகள் போன்றவையும் இதற்கு விதிவிலக்கு அல்ல. பெண் எவ்வளவு படித்திருந்தாலும் உயர் பதவியில் இருந்தாலும் ஆணின் பாதுகாப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் உரியவள் என்று வரலாற்றில் நெடுங்காலமாக இருந்துவரும் ஆணாதிக்கக் கருத்தின் முத்திரைதான் பெண்ணின் பெயருக்குப்பின் கணவன் அல்லது தந்தையின் பெயரைச் சேர்ப்பதாகும்.

### பெண்களுக்குச் சமஉரிமையை மறுப்பதுத் தொடரலாமா?

ஆள்வது அரசமைப்புச் சட்டமா? மநுசாத்திரமா? என்ற வினா எழாமல் இருக்காது. பெண் ஆணுக்கு நிகர் அல்ல என்ற கெட்டிப்பட்டுள்ள பாலினப் பாகுபாட்டை பெண்கள் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும் எனும் சனாதனம் சமூக நடப்பில் மட்டுமல்ல, அரசியல் நடைமுறையிலும் தொடர்கின்றது என்பதையே இந்த வழக்கு வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது.

பெண்கள் தனியாகப் பொதுவெளியில் பள்ளியில் குழந்தைகளைச் சேர்க்கும்போது, வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்ள கடவுச் சீட்டு (Passport) க்கு விண்ணப்பிக்கும்போது என இந்த அலைக்கழிப்புகள் தொடர்ந்து கொண்டுள்ளன. கல்வி கற்றப் பெண்களாயினும் தொழில் முனைவோராக உள்ள பெண்களாயினும் இதிலிருந்துத் தப்பமுடியாது.

1. பெண்-ஆண் என வேறுபாடு இல்லாமல் குடிமக்களுக்கு அரசமைப்புச் சட்டம் அளித்துள்ள உரிமைகளைப் பயன்படுத்தத் தேவையற்றத் தடைகளை உருவாக்கு வதா?
2. பெண்-ஆண் பாகுபாட்டை இன்னமும் தொடரத்தான் வேண்டுமா?
3. ஆணாதிக்கச் செயல்களை இப்போதும் நியாயப்படுத்து வதா?


### பெண்கள் சமஉரிமைத் துய்ப்பது எப்போது?

குடிமக்கள் அனைவருக்கும் சமமான உரிமைகள் வழங்கப்பட்டுள்ள அரசமைப்புச் சட்டம் 1950 சனவரி 26இல் நடைமுறைக்கு வந்து 74 ஆண்டுகள் ஆனபின்னும் அரசமைப்பு உறுதியத்துள்ள பெண்-ஆண் சமத்துவ உரிமையை மறுக்கும் அரசதிகாரத்தில் அமர்ந்துள்ள பார்ப்பனிய-உயர்சாதி சனாதன வல்லதிகாரத்தைத் தகர்த்திடல் வேண்டும். அதற்கு அரசதிகாரத்தில் உள்ளப் பதவிகள்-பணிகள் யாவற்றிற்கும் வகுப்புவாரி விகிதாச்சார இடப்பங்கீட்டை நடைமுறைப்படுத்திட வேண்டும்.

பெரியார் முன்னெடுத்த பெண்-ஆண் சமஉரிமைக் கோட்பாடு செயலுக்கு வர அவரதுக் கருத்துகள் உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகளின் பாடத் திட்டத்தில் இடம்பெறச் செய்யவேண்டும்.

பாலின அடிப்படையில் உரிமை மறுப்புகளையும் பாகுபாட்டினையும் களைந்தெறிவோம்! ❖

# சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழியாக வேண்டும்



வாலாசா வல்லவன்

பழங்காலத்தில் தமிழ்நாட்டில் தமிழே வழக்காடு மொழியாக இருந்ததற்கான சான்றாக சிலப்பதிகாரத்தின் வழக்காடு காதை திகழ்கிறது.

ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட பிறகு பல மொழி பேசும், பல்வேறு நாடுகளாக இருந்த நிலப்பரப்பை ஒன்றிணைத்து மையப்படுத்தப்பட்ட ஆட்சியைக் கட்டமைத்தனர்.

விரிந்த நிலப்பரப்பாக இருந்த காரணத்தினால் தங்களின் நிர்வாக வசதிகளுக்காக மாகாணங்களாகப் பிரித்து ஆட்சி செய்தனர். ஆங்கிலேயர்கள் தங்கள் நிர்வாக வசதிக்காக ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக்கினர். மக்களுக்கு நீதி வழங்குவதற்காக கொல்கத்தா, மும்பை, சென்னை மாகாணங்களில் 1862இல் மூன்று உயர்நீதிமன்றங்களைத் தோற்றுவித்தனர். நீதிமன்றங்களிலும் ஆங்கிலத்தையே வழக்காடு மொழியாகவும், தீர்ப்புரை மொழியாகவும் நடைமுறைக்குக் கொண்டு வந்தனர்.

ஆங்கிலேயரிடமிருந்து இந்தியா விடுதலை பெற்ற பிறகு டாக்டர் அம்பேத்கர் தலைமையில் இயற்றப்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950 சனவரி 26 முதல் நடைமுறைக்கு வந்தது. அந்தச் சட்டம் தான் இன்றும் நடைமுறையில் உள்ளது. அந்தச் சட்டத்தில் இந்திய அரசின் ஆட்சி மொழி, உச்சநீதி மன்றம், உயர்நீதிமன்றங்களில் பயன்படுத்த வேண்டிய மொழிகள் பற்றிய விளக்கங்கள அளிக்கப்பட்டுள்ளன.

நீதிமன்றத்தின் மொழிகள் பயன்பாடு பற்றிய பிரிவு 348(1)(3) உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் ஆகியவற்றில் நாடாளுமன்றம் புதிய சட்டம் இயற்றும் வரையில் ஆங்கிலத்திலேயே நடைபெற வேண்டும் என்று கூறுகிறது.

பிரிவு 348(2) மாநில ஆளுநர் குடிஅரசுத் தலைவரின் இசைவைப் பெற்று அந்த மாநிலத்தின் ஆட்சி மொழியை உயர்நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாக அனுமதி அளிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் தீர்ப்புகள் வழங்குவதற்கு அனுமதி இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.


மொழிவழி மாநிலப் பிரிவினைக்குப் பிறகு சென்னை மாநிலத்தில் தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் 1956இல் இயற்றப்பட்டது.

31.8.1956 அன்று சட்டக் கல்லூரியில் தமிழ் இலக்கியச் சங்கத்தைத் தொடங்கி வைத்துப் பேசிய அன்றைய முதலமைச்சர் காமராசர் “தமிழ்நாட்டில் இனிமேல் நீதிமன்றங்கள் தமிழிலேயே நடைபெறப் போகிறது. மாணவர்கள் அதற்குத் தங்களைத் தயார் படுத்திக்கொள்ள வேண்டும்” என்று கூறினார். அதை வரவேற்று 1.9.1956இல் விடுதலை ஏட்டில் தலையங்கம் எழுதினார் குத்தூசி குருசாமி. சட்டப் புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்க்க வல்லுநர் குழுக்களை அமைத்து மொழியாக்கத்தை விரைவுபடுத்த வேண்டும் என்று எழுதினார். “தன்னைப் பற்றி நீதிமன்றத்தில் என்ன பேசப்படுகிறது என்பதை குற்றம் சுமத்தப்பட்டவர் உணர்ந்துகொள்ள வேண்டும்” என்று முதலமைச்சர் பேசியிருக்கிறார். ஆம்! உண்மைதான்; அதுதான் உண்மையான சனநாயகம் ஆகும் என்று விடுதலை ஏட்டின் தலையங்கத்தில் எழுதினார் குத்தூசி குருசாமி. 1957இல் கீழ்நிலை நீதிமன்றங்களில் தமிழ்மொழி பயன்படுத்தப்படும் என்று அரசு அறிவித்த போதிலும் போதுமான நடவடிக்கைகள் எடுக்காத காரணத்தால் அப்போது அது நடைமுறைக்கு வராமல் போனது.

1967இல் தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி ஏற்பட்ட பிறகு, 1976இல் குற்றவியல் நீதிமன்றங்களிலும் 1982இல் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் உரிமையியல் நீதிமன்றங்களிலும் தமிழ் ஆட்சி மொழியானது.

அரசியல் அமைப்புச் சட்டம் 348(2)இன்படி வழங்கப்பட்டுள்ள உயர்நீதிமன்றத்தில் இந்தி (அ) அந்தந்த மாநில மொழிகளை வழக்காடு மொழியாகப் பயன்படுத்தலாம் என்ற வாய்ப்பைப் பயன்படுத்தி 1950இல் இராசஸ்தான், 1969இல் உத்தரப்பிரதேசம், 1971இல் மத்தியப்பிரதேசம், 1972இல் பீகாரிலும் உள்ள உயர்நீதிமன்றங்களில் இந்தி மொழி வழக்காடு மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

1965இல் இந்திய அரசின் அமைச்சரவை உயர்நீதிமன்றங்களில் மாநில மொழிகளின் வழக்காடும் உரிமையை வழங்கும் அதிகாரத்தை இந்திய உச்சநீதிமன்றத்திற்கு வழங்கிவிட்டது. இது இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 348(2)க்கு எதிரானது ஆகும்.



2006இல் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக அறிவிக்கக் கோரி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்டது. இதேபோல, மேற்குவங்காளத்தில் 1997இலும், குசராத்தில் மோடி முதலமைச்சராக இருந்த போது 2012இலும், கர்நாடகாவில் 2014இலும் தங்கள் மாநில மொழிகளை உயர்நீதி மன்றத்தில் வழக்காடு மொழிகளாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நிறைவேற்றிய தீர்மானங்களை ஒன்றிய அரசு உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்த போதிலும், உச்சநீதிமன்றம் இந்தி மொழி மாநிலங்களைத் தவிர, மற்ற மாநிலங்களில் அம்மாநில மொழியை வழக்காடு மொழியாக அனுமதிக்க மறுத்துவருகிறது. இது இந்திய அரசமைப்புச் சட்டத்தின் விதி 348(2)க்கு எதிரானது ஆகும். மக்களின் உரிமையான மாநில மொழியை ஏற்க மறுப்பது சனநாயக விரோதமாகும்.

இந்தி அல்லாத பிற மாநிலங்களைச் சார்ந்தவர்கள் ஒன்றுபட்டு போராடித்தான் நாம் நம்முடைய உரிமையைப் பெற்றுக்கொள்ள முடியும். மாநிலக் கட்சிகள் இக்கோரிக்கை வெற்றி பெற நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்து உச்ச நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை திரும்பப் பெற்று மக்கள் மன்றத்திற்கே அளிக்க வேண்டும். உயர்நீதிமன்றங்களில் அந்தந்த மாநில மொழிகளையே வழக்காடு மொழிகளாக இடம்பெறச் செய்ய வேண்டும். ❖

## தேவநேயப் பாவாணர் 122ஆம் பிறந்த நாள் பன்னாட்டுத் தாய்மொழி நாள்



தமிழ்வழிக் கல்வி இயக்கத்தின் சார்பில் 18.2.2024 அன்று அம்பத்தூர் கடைவீதிப் பகுதியில் தேவநேயப் பாவாணர் 122ஆம் பிறந்த நாள் விழா மற்றும் பன்னாட்டு தாய்மொழி நாள் விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. த.மணிசேகரன் தலைமை தாங்கினார். அ.சின்னப்பா தமிழர், ஆவடி நாகராஜ், இல.குமார், வள்ளுவன், கார்வேந்தன், முல்லைத் தமிழன், மோகன்ராம், க.மனோகரன், நா.நந்தன் உள்ளிட்டோர் உரையாற்றினர். வாலாசா வல்லவன் சிறப்புரையாற்றினார்.

## சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக்கிட வலியுறுத்தித் தொடர் உண்ணாநிலைப் போராட்டம்



சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக் காடு மொழியாக்கவும் சென்னை உயர்நீதிமன்றத்திற்குத் தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்று பெயர் மாற்றக் கோரியும் வழக்குரைஞர்களும் தமிழ் உணர்வாளர்களும் 24 பேர் கோரிக்கை நிறைவேறும் வரை தொடர் உண்ணாநிலைப் போராட்டம் நடத்தினர். 28.2.2024 அன்று சென்னை, எழும்பூர் இராசரத்தினம் விளையாட்டு அரங்கம் அருகே இப்போராட்டம் நடைபெற்றது. பல்வேறு தமிழ் அமைப்பினர் ஆதரவு தெரிவித்து வந்தனர். மா.பெ.பொ.க. சார்பில் வாலாசா வல்லவன் சென்று ஆதரவு தெரிவித்து வந்தார். பேரா. சுப.வீ. 6.3.2024 அன்று வந்து ஆதரவு தெரிவித்தார். தமிழக சட்ட அமைச்சர் இரகுபதி அவர்கள் வந்து பேச்சு வார்த்தை நடத்தி முதல்வருடன் பேசி, அடுத்த சட்டமன்ற கூட்டத் தொடரில் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி இக்கோரிக்கை வெற்றி பெறப் பாடுபடுவோம் என உறுதி அளித்தார். எட்டு நாட்களாக நடைபெற்று வந்த உண்ணாநிலைப் போராட்டம் முடித்துக் கொள்ளப்பட்டது.

# பாலாற்று நீரில் தமிழ்நாட்டின் உரிமையைக் காப்போம்! ஆந்திர அரசுத் தடுப்பணைக் கட்டுவதைத் தடுப்போம்!!



- நா. மதனகவி

தமிழ்நாட்டின் மிகப்பழமையான ஆறுகளில் ஒன்றான பாலாறு கருநாடக மாநிலம் சிக்பெல்லாப்பூர் மாவட்டம், நந்திமலைப் பகுதியில் தொடங்குகின்றது. இவ்வாறு கருநாட கத்தில் 93 கி.மீ.உம் ஆந்திர மாநிலத்தில் 33 கி.மீ.உம் தமிழ்நாட்டில் திருப்பத்தூர், வேலூர், இராணிப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களின் வழியாக 222 கி.மீ. சென்று கல்பாக்கம் அருகில் வயலூரையடுத்த உய்யாலிக் குப்பத்தில் வங்கக் கடலில் கலக்கின்றது.

பெத்தமங்கல நீர்த்தேக்கம், இராம்சாகர் நீர்த்தேக்கம் என இரண்டு பெரிய நீர்த்தேக்கங்களில் பாலாற்றில் வரும் நீரை கருநாடகம் தேக்கிக் கொள்கிறது. ஆந்திர மாநிலத்தில் உள்ள 33 கி.மீ. தொலைவுக்குள் பாலாற்றில் பெரியதும் சிறியதுமாக 22 தடுப்பணைகளைக் கட்டியுள்ளது. தற்போது 26.02.2024 அன்று குப்பம் தொகுதி, ரெட்டிக் குப்பம் பகுதியில் 23ஆவதாக ஒரு தடுப்பணைக் கட்டிட ஆந்திர முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி அடிக்கல் நாட்டியுள்ளார். அதற்காக ரூ.215 கோடி நிதி ஒதுக்கியுள்ளதாகவும் கூறி யுள்ளார்.

ஆந்திர அரசு குப்பம் தொகுதி கணேசபுரத்தில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டிட அப்போதைய ஆந்திர முதல மைச்சரும் குப்பம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான சந்திரபாபு நாயுடு பணிகளைத் தொடங்கினார். தமிழ்நாட்டில் பாலாற்றின் கரைகளில் வாழும் உழவர்களும் பொது மக்களும் கொதித்தெழுந்து தங்கள் எதிர்ப்பினை பல வகைகளில் வெளிப் படுத்தினர்.

1892இல் மைசூர் மன்னர் அரசும் சென்னை மாகாண அரசும் இரு பகுதிகளிலும் பாயும் ஆற்றுநீரைப் பகிர்ந்துகொள்வது பற்றி ஓர் ஒப்பந்தம் மேற்கொண்டன. 1924இலும் மற்றுமொரு ஒப்பந்தம் மேற்கொண்டன. இரு பகுதிகளில் யார் அணைகள் கட்டுவதாயினும் மற்றொரு தரப்பினர் ஒப்புதலுடனே மேற் கொண்டிட வேண்டும் என ஒப்பந்தத் தில் விதி வகுக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் ஒப்பந்தத்தைப் புறந்தள்ளி, கணேசபுரத்தில் ஆந்திர அரசு தடுப்பணைக் கட்டுவதைத் தடுக்க வேண்டும் என தமிழ்நாட்டரசு உச்சநீதி மன்றத்தில் 2006 இல் வழக்குத் (ஓ.எஸ்.எண். 02/2006) தொடுத்தது.

பாலாற்றில் ஏற்கெனவே கட்டப்பட்டிருந்த பெரும்பள்ளம், கங்கனஹள்ளி, சீத்தாவூர், கங்குத்தி முதலான தடுப்பணைகள் பல 5 அடி உயரம் முதல் 12 அடி உயரம் வரை உயர்த்திக் கட்டும் பணியை ஆந்திர அரசு மேற்கொண்டது. இந்த நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்திடுமாறு கோரி, தமிழ் நாட்டு அரசு உச்ச நீதிமன்றத்தில் 2016இல் 2ஆவது வழக்கு (ஓ.எஸ்.எண். 03/2016) ஒன்றினைத் தொடுத்தது.

இந்த வழக்கினை விசாரித்த உச்சநீதி மன்றம் 16.02.2018 அன்று அளித்தத் தீர்ப்பில் ஆந்திர அரசு தடுப்பணைகள் உயரத்தினை அதிகரித்திட தடைவிதித்தது. 1892ஆம் ஆண்டு ஒப்பந்தம் செல்லுபடியாகும் என்றும் தீர்ப் பளித்துள்ளது. சித்தூர் மாவட்டம், நயனூர் அருகில் காப்புக்காடு உள்ள கங்குந்தி என்ற இடத்தில் கட்டப்பட்டிருந்த 6 அடி உயரம் 45 அடி நீளத் தடுப்பணை இடிக்கப்பட்டது.

முன்பு பாலாற்றில் 4368 டி.எம்.சி. அளவு நீர் வந்தது. திருப்பத்தூர், வேலூர், இராணிப்பேட்டை உள்ளிட்ட முந்திய வேலூர் மாவட்டத்தில் 502 ஏரிகள் இருந்தன. காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட 620 ஏரிகள் பாலாற்று நீரை நம்பி இருந்தன. இந்த ஏரிகளுள் பல காணாமல் போயுள்ளன. மிகப் பல ஏரிகள் காய்ந்து கிடக்கிறன. பழைய வேலூர் மாவட்டத்தில் 4710 சதுர கி.மீ. பரப்பு நிலமும், காஞ்சிபுரம்-செங்கல்பட்டு மாவட்டத்தில் 2187 சதுர கி.மீ. பரப்பு நிலமும் பாலாற்று நீரை நம்பி இருந்தன. முன்பு பாலாற்றுப் படுகை பகுதியில் 10 அடி ஆழத்தில் இருந்த நிலத்தடி நீர் இப்போது மிகவும் மோசமான நிலையை அடைந்துவிட்டது. கிணற்று நீர்ப்பாசனப் பரப்பும் வெகுவாகக் குறைந்துவிட்டதால் உழவை நம்பியிருந்த மக்கள் வேலையற்றவர்களாக பெருநகரங்களில் அன்றாடக் கூலியாட் களாக அல்ல லுறுகின்றனர்.


தமிழ்நாட்டு அரசு உச்சநீதிமன்றத்தில் பல ஆண்டுகளாக நிலுவையிலுள்ள பாலாறு வழக்குகளை விரைந்து விசாரணை நடத்தி முடித்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்.

1956ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான ஆற்றுநீர் பங்கீட்டுச் சிக்கல் சட்டப்படி ஒன்றிய அரசை வலியுறுத்தி, தீர்ப்பாயம் அமைத்து நியாயமான தீர்வு கண்டிட முன்வர வேண்டும் என பாலாறு பாசனப் பகுதி மக்கள் தமிழ்நாட்டு அரசினை வலியுறுத்த வேண்டும். ❖



## பத்தாண்டுகளுக்குப் பின்

# பேரா. சாய்பாபா விடுதலை



**க. முகிலன்**

பேராசிரியர் ஜி.என். சாய்பாபாவும் மற்ற அய்வரும் மும்பை நீதிமன்றத்தின் நாக்பூர் கிளையால் சிறைத் தண்டனையிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர். சாய்பாபா 90 விழுக்காடு உடல் செயலிழப்பு உடையவர். 5 அகவையில் போலியோ நோய் தாக்கியது. 1967இல் பிறந்த சாய்பாபா தற்போது 57 அகவையினர். தாயின் பெருந்துணையுடன் ஆங்கில இலக்கியத்தில் முதுலைப் பட்டமும் பின்னர் முனைவர் பட்டமும் பெற்றவர். 2003 முதல் தில்லி பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்தார். தன் சிறு வயது தோழியை மணந்தார்.

2014இல் சாய்பாபா கைது செய்யப்பட்டார். மற்ற அய்வரும் 2013இல் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மாவோவிய அறிக்கைகளையும் நூல்களையும் வைத்திருந்தனர். மாவோவிய அமைப்புகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர். இந்திய அரசுக்கு எதிராகப் போர் தொடுக்க சதித் திட்டம் கொண்டிருந்தனர் என்பன இவர்கள் மீதான குற்றச்சாட்டு.

2017இல் கச்சிரோலி விசாரணை நீதிமன்றம் சாய்பாபா உட்பட 5 பேருக்கு வாழ்நாள் தண்டனையும் மற்ற ஒருவருக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதித்தது. இவர்கள் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். 2022 அக்டோபர் 14 அன்று இவர்கள் குற்றவாளிகள் என்பதற்கான சான்றுகள் இல்லை; இவர்களை உபா சட்டத்தின்கீழ் குற்றம் சாட்டியதும் தவறு என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் மகாராட்டிர அரசு அன்று (வெள்ளிக்கிழமை) மாலையே இத்தீர்ப்புக்குத் தடைவிதிக்கக் கோரி உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தது.

உச்சநீதிமன்றத்தில் வழக்கத்திற்கு முரணாக 2022 அக்டோபர் 15 சனிக்கிழமை விடுமுறை நாளில் காலை 9.30 மணிக்கு நீதிபதி எம்.ஆர். ஷா தலைமையிலான அமர்வு, இவர்கள் இந்திய இறையாண்மைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் எதிரான குற்றவாளிகள் என்று கூறி மும்பை உயர்நீதி மன்றத் தீர்ப்புக்குத் தடைவிதித்தது. சாய்பாபா 2023 இல் உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்தார். மீண்டும் மும்பை உயர்நீதிமன்றமே வேறு அமர்வில் விசாரிக்க வேண்டும் என்று உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்தது.



இதன்மீது நடந்த விசாரணையின் முடிவில் உயர்நீதி மன்றம் 5.3.2024 அன்று தீர்ப்பளித்தது. சாய்பாபா உள்ளிட்டோர் மீதான குற்றச்சாட்டுகளுக்குத் தக்க ஆதாரங்களைக் காவல்துறையும் அரசும் நிரூபிக்கவில்லை என்று கூறி இவர்களை விடுதலை செய்வதாக அறிவித்தது. ஆயினும் மகாராட்டிர அரசு 6.3.2024 அன்று உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தது. உச்சநீதிமன்றம் இதை ஏற்க மறுத்தது. இறுதியில் 7.3.2024 அன்று சாய்பாபாவும் மற்றவர்களும் பத்து ஆண்டுகள் புனையப்பட்ட வழக்கினால் சிறையில் துன்புற்றனர்.

சாய்பாபா இளமைக்காலம் முதலே சமூகநீதிக் கொள்கையில் ஈடுபாடு கொண்டவர். குறிப்பாக பழங்குடியினரின் வாழ்வுரிமைக்கான அமைப்புகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டவர். இதனாலேயே சாய்பாபா ஒரு தீவிர மாவோயிஸ்ட் என்று கருதபபட்டு உபா சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் ஒவ்வொரு நாளும் தன் உடல் இயலாமையால் பல துன்பங்களை ஏற்றார்.

உபா, என்.ஐ.ஏ. போன்ற சட்டங்கள் அய்யத்திற்கிடமான அல்லது சாதாரணமான சிறிய ஆதாரங்கள் அடிப்படையில் எந்தக் குற்றமும் செய்யாதவர்கள் பலர் கைது செய்யப்பட்டு பிணையில் வெளிவர முடியாமல் பல ஆண்டுகள் சிறையில் அடைக்கப்படும் கொடுமை நடக்கிறது. பீமா கோரேகான் வழக்கு இதை நன்கு உணர்த்துகிறது. 2008இல் உபா சட்டத்தில் சேர்க்கப்பட்ட விதியின்படி, ஒருவர் தீவிரவாதம் பற்றிய வெளியீடுகளை வைத்திருப்பதாலேயே அவர் தீவிரவாதி என்று கருதி உபா சட்டத்தின்கீழ் கைது செய்யக்கூடாது. ஆனால் நடைமுறையில் இதற்கு எதிராகவே காவல் துறையும் அரசுகளும் நடந்துகொள்கின்றன என்பதற்கு சாய்பாபா வழக்கு ஒன்றே போதிய சான்றாகும்.

சாய்பாபா கடுமையான இயலாமையில் உள்ள மாற்றுத் திறனாளி என்பதால் அய்க்கிய நாடுகளின் மனித உரிமை வல்லுநர்கள் சாய்பாபாவை விடுதலை செய்யுமாறு கோரினர். ஆனால் தன் உயர்வுக்கும் வாழ்வுக்கும் பெருந்துணையாக விளங்கிய தன் தாய் மரணப்படுக்கையில் இருந்த போதும், இறந்த பின்பும் பிணை வழங்க அரசு மறுத்துவிட்டது. நடைமுறையில் இந்திய சனநாயக அரசு மனித உரிமைகளை எந்த அளவுக்கு மதிக்கிறது என்பதையே இது காட்டுகிறது. ❖

# புலவர் கலியபெருமாள் நூற்றாண்டு விழா தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்ச்சி



புலவர் கலியபெருமாள் நூற்றாண்டு விழா தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்ச்சி 2.3.2024 அன்று மேடவாக்கம் தமிழ்க் களத்தில் நடைபெற்றது. முனைவர் மா. பூங்குன்றன் தலைமை தாங்கினார். தமிழ்வாணன் தொடக்கவுரை யாற்றினார். பொழிலன் நோக்கவுரை ஆற்றினார். புலவர் கு.கலியபெருமாள் குடும்பத்தினர் சோழநம்பியார், கண்ணகி, மாசிலாமணி, ஊர்மிளா வள்ளுவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தோழர்கள் தி. வேல்முருகன், ச.ம.உ., வன்னிய அரசு, த.செயராமன், கி. குணத்தொகை, க.இரா. தமிழரசன், வாலாசா வல்லவன் உள்பட பலர் உரையாற்றினர்.

# பேரா. இரா.ச. குழந்தைவேலன் அகவை 80 நிறைவு - பகுத்தறிவு விழா



புதுச்சேரி, அரியாங்குப்பம் பகுத்தறிவாளர் பேரா. இரா.ச. குழந்தைவேலன் அவர்களின் 80 அகவை நிறைவையொட்டி பேரா. இரா.ச. குழந்தைவேலனார் தமிழ்ப்பணி அறக்கட்டளையினர் 2.2.2024 அன்று கடலூர் நகர அரங்கில் பகுத்தறிவு விழாவாக ஏற்பாடு செய்திருந்தனர். காலை 9 மணிமுதல் தொடக்க விழா கோவன் கொள்கை முழக்கம் சிவ. வீரமணி தலைமையில் நடைபெற்றது. 12 மணிக்கு பாட்டரங்கம் நடைபெற்றது. பிற்பகல் 2 மணிக்கு திருத்தணி பன்னீர்செல்வம் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. மாலை 4 மணிக்கு தி.க.பொதுச் செயலாளர் துரை. சந்திரசேகரன் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது.

பாவாணர் பைந்தமிழ் - பொழிலன் ❖ இலக்கு ஒன்றே - வாலாசா வல்லவன் ❖ ஈரோட்டுக் கண்ணாடி - மதிவதனி வேண்டும் ஆகியோர் அவ்வத் தலைப்புகளில் உரையாற்றினர். மாலை 6 மணிக்கு பெரியார் பார்வையில் நான் கண்ட பெரியார் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. பேரா. இரா.ச. குழந்தைவேலன் நன்றியுரையாற்றினார்.

## காந்தியாரைப் படுகொலைச் செய்தவர்கள்
# ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதிகளே!
### கருத்தரங்கம்

காந்தியாரைப் படுகொலைச் செய்தவர்கள் ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதிகளே! என்ற தலைப்பில் கருத்தரங்கம் 3.2.2024 அன்று மேடவாக்கம் பாவலரேறு தமிழ்க் களத்தில் நடைபெற்றது. மக்கள் தமிழகம் கட்சியின் தலைவர் நிலவழகன் தலைமை தாங்கினார். தமிழக மக்கள் முன்னணி பொழிலன் மா.பெ.பொ.க. வாலாசா வல்லவன், அரசியல் செயற்பாட்டாளர் அருள் முருகன் ஆகியோர் காந்தியாரைப் படுகொலைச் செய்த ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதிகளை, சதிகளை விரிவாக விளக்கி உரையாற்றினர். தமிழக மக்கள் முன்னணி இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது.

## நான்கு தமிழர் விடுதலை வேண்டி ஆர்ப்பாட்டம் - பொதுக்கூட்டம்





இராசீவ் கொலை வழக்கில் 32 ஆண்டுகள் சிறையில் இருந்து விடுதலை பெற்ற பிறகும் ஒன்றிய அரசால் திருச்சி நடுவண் சிறை சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்த முருகன், சாந்தன், ஜெயக்குமார், இராபர்ட் பயாசு ஆகிய நான்கு தமிழர்களை விடுதலை செய்து அவரவர்கள் உறவினர்கள் வாழும் நாடு களுக்கு அனுப்பி வைக்க வலியுறுத்தி புதுவண்ணையில் 13.2.2024 அன்று பொதுக்கூட்டம் நடைபெற்றது. நிலவழகன் தலைமைத் தாங்கினார். க.ரா. தமிழரசன் நோக்க உரையாற்றினார். தோழர்கள் பொழிலன், வாலாசா வல்லவன், சீராளன், தபசிகுமரன், தமிழ்ச் செல்வன், தெய்வமணி, திரண்குமார், செயக்கிருட்டிணன் ஆகியோர் உரையாற்றினர். அதன் பின்னர் சாந்தன் 28.02.2024 அன்று மறைவுற்றார் என்பது வருந்தத் தக்கது.

## காஞ்சிபுரம் ச. பார்த்திபன் மறைவு



காஞ்சிபுரம் மா.பெ.பொ.க. தோழர் சம்பந்த சிவக்குமார் அவர்களின் தம்பி ச. பார்த்திபன் உடல்நலக்குறைவு காரணமாக 16.3.2024 சனி மாலை மறை வுற்றார். மறுநாள் காலை அவரது உடல் எரியூட்டப்பட்டது. மா.பெ.பொ.க. தோழர்கள் சி.நடராசன், தீ.கோபால கிருட்டிணன், இரா.நாராயண மூர்த்தி ஆகியோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர். தம்பியை இழந்து துயரும் சம்பந்த சிவக்குமார் அவர்களுக்குப் புதிய சிந்தனையாளன் ஆசிரியர் குழுவின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## தமிழீழ சாந்தன் மறைவு



இராசீவ் காந்தி படுகொலை குற்றவழக்கில் தவறுதலாக சேர்க் கப்பட்ட சின்ன சாந்தன் 30 ஆண்டு கள் சிறை வாழ்க்கைக்குப் பின்பு தன்னுடைய தாயாரைக் காண்பதற்கு இலங்கை செல்வதற்கு முயற்சி செய்து நீதிமன்றம் மூலம் அனுமதி பெற்றார். திருச்சி நடுவண் சிறையில் சரியான மருத்துவமும், மருந்தும் கொடுக்காமல் உடல்நிலை மிகவும் சீர்கேட்டு 28.02.2024 அன்று இயற்கை எய்தினார். உச்சநீதிமன்றம் தீர்ப்பினால் விடுதலை பயனடைந்தவுடன் இலங்கைக்கு அனுப்பாமல் இந்திய ஒன்றிய அரசு வேண்டுமென்றே அவரை சிறப்பு முகாமில் அடைத்தது அவருடைய கடைசி ஆசையான தன்னுடைய தாயாரைக் காணாமலே இறக்க நேரிட்டது கொடுமையாகும்.

## சேலத்தில் தமிழ்நாடு அறிவியல் பண்பாட்டு இயக்க ஆண்டு விழா



தமிழ்நாடு அறிவியல் பண்பாட்டு இயக்க ஆண்டு விழா 4.2.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சேலம் தமிழ்ச் சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது. நல்லூரான் தலைமைத் தாங்கினார். வாசு வரவேற்புரையாற்றினார். அரங்க. குணசேகரன், மா. மனோகரன் ஆகியோர் வாழ்த் துரை வழங்கினர். 11 மணிக்கு நடைபெற்ற கருத்தரங்கில் இயங்கியல் மற்றும் இயந்திரவியல் பொருள் முதல்வாதம் என்ற தலைப்பில் நல்லூரான், மார்க்சியப் பார்வையில் பெரியார் என்ற தலைப்பில் வாலாசா வல்லவன், அடிக் கட்டுமானமும் மேல் கட்டுமானமும் என்ற தலைப்பில் வினோத் வில்சன் ஆகியோர் கருத்துரையாற்றினர். சாதியற்றோருக்கு இடஒதுக்கீடு நூல் விமர்சன அரங்கு பிற்பகலில் நடைபெற்றது. தமிழ்நாடு அறிவியல் பண்பாட்டு இயக்கத்தினர் நிகழ்வுக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

## வேலூரில் 28.02.2024 அன்று உழவர்கள் போராட்டத்தை ஆதரித்து ஆர்ப்பாட்டம்



உழவர் சங்கங்களின் கூட்டமைப்பு (எஸ்.கே.எம்.)க்கு விளைபொருள்களுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலை அளிப்பதாக உறுதியளித்ததைச் செயல்டுத்திடுமாறு பா.ச.க. மோடி அரசை வலியுறுத்திட அரியானா, ஷம்பு எல்லையில் உழவர்கள் கூடி இருந்தனர். 21.02.2024 அன்று கனவுரி என்ற அவ்விடத்தில் கூடியிருந்த உழவர்களைக் கலைத்திட அரியானா காவல்துறையினர் துப்பாக்கியால் சுட்டனர். இதில் பஞ்சாப், பதின்டா மாவட்டம், பல்லோ கிராமத்தைச் சேர்ந்த உழவர் 21 வயது இளைஞர் சுப்கரன்சிங் படுகொலை செய்யப்பட்டார். இப்படுகொலையைக் கண்டித்தும் ஒப்புக்கொண்ட குறைந்தபட்ச ஆதரவு விலையை அளிக்காத பாசிச பா.ச.க. அரசுக்கு எதிரான உழவர் போராட்டத்தை ஆதரித்தும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பு.ஜ.தொ.மு. மாவட்டப் பொருளாளர் மு. பாபு தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் அமைப்புகள், கட்சிகள் சிலவற்றின் பொறுப்பாளர்கள் பங்கேற்று கண்டன உரையாற்றினர். மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் சா. குப்பன் கண்டன உரையாற்றினார். மக்கள் கலை இலக்கியத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் கோவன் கண்டன சிறப்புரையாற்றினார். மா.பொ.பொ.க. தோழர்கள் மீ.டில்லிபாபு, மு.சுவாமிநாதன், லோ.இரத்தினகுமார் ஆகியோரும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## வேலூரில் 05.03.2024 அன்று பாலாற்றில் ஆந்திரம் தடுப்பணைக் கட்ட உள்ளதைத் தடுத்திடக் கோரி ஆர்ப்பாட்டம்




ஆந்திர மாநிலத்தில் பாலாறு பாயும் 33 கி.மீ. இடைவெளியில் ஏற்கெனவே 22 தடுப்பணைகள் உள்ள நிலையில் குப்பம் அருகில் சாந்திபுரம் பகுதியில் ரூ.215 கோடி செலவில் தடுப்பணைக் கட்டிட 26.02.2024 அன்று ஆந்திர முதலமைச்சர் அடிக்கல் நாட்டியுள்ளார்.

இந்தத் தடுப்பணைக் கட்டப்பட உள்ளதைத் தடுத்திடக் கோரி வேலூர் மாவட்ட ஆட்சியகரம் எதிர்ப்புறத்தில் 05.02.2024 அன்று பாலாறு பாதுகாப்பு சமூக விழிப்புணர்வு இயக்கம், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி, அகில இந்தியத் தொழிற்சங்க மய்யக் கவுன்சில் (ஏ.அய்.சி.சி.டி.யு.), புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி (என்.டி.எல்.எப்.) ஆகிய நான்கு அமைப்புகள் கூட்டாக ஆர்ப்பாட்டம் நடத்தின.

பாலாறு பாதுகாப்பு சமூக விழிப்புணர்வு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் ச.ந.ச.மார்த்தாண்டம் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் மா.பெ.பொ.க. சார்பில் மு.சுவாமிநாதனும் மீ.டில்லிபாபுவும் உரையாற்றினர்.

## நம்மால் முடியும்!



மக்களின் நலனில் அக்கறை கொண்டோர் பொது மக்களை அரசியல்படுத்துங்கள்.

கட்சி வழிப்பட்டு மட்டும் சிந்திப்பதிலிருந்து கட்சித் தலைவரை வழிபடும் மூடத்தனத்திலிருந்து-சாதி வழிப்பட்டுச் செயல்படுவதிலிருந்து பொது வாழ்வு என்பது ஒரு பிழைக்கும் வழி என்கிற சிந்தனைக்கு ஆட்படுவதிலிருந்து இளந்தலை முறையினரை விடுவித்திடுங்கள்.

மானிடத்தின் நல்வாழ்வுக்கு நீரும் காடும் மலையும் சுற்றுச் சூழலும் காப்பாற்றப்பட்டுப் பாதுகாக்கப்படுவது மிகவும் இன்றியமையாதது.

இது நம்மால்-மனிதர்களால் முடியும். தமிழர்களால் உறுதியாக முடியும்.

**- தோழர் வே.ஆனைமுத்து**

## பாவலரேறு பெருஞ்சித்திரனார் 91ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா
## பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் எழுத்தடைவுகள்
## 16 தொகுப்புகள் முன்பதிவு அறிவிப்பு




பாவலரேறு பெருஞ்சித்திரனார் 91ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா மற்றும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் எழுத்தடைவுகள் 16 தொகுப்புகள் முன் பதிவு அறிவிப்பு நிகழ்வு 9.3.2024 மேடவாக்கம் தமிழ்களத்தில் முனைவர் மா. பூங்குன்றன் தலைமையில் நடைபெற்றது. மா. பிறைநுதல் வரவேற்புரை யாற்றினார். இர. பொற்கொடி, முனைவர் கி. குணத்தொகை ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொழிலன் எழுத்தடைவுகள் குறித்த விளக்கவுரை ஆற்றினார். வி.சி.க. தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், சொல்லாய்வு அறிஞர் அருளியார், தமிழ்க்கேள்வி செந்தில்வேல், ம.தி.மு.க. மல்லை சத்தியா, பேராசிரியர் த. செயராமன், வாலாசா வல்லவன் ஆகியோர் உரையாற்றினர். அரசி நன்றியுரையாற்றினார்.

**பாவலரேறுவின் எழுத்தடைவுகள்**

**16 தொகுதிகள் விலை : ரூ.12,000 - முன்பதிவு விலை : ரூ.10,000**

**தொடர்புக்கு : 9841668320. 909248002, 9841444953**

---

### பாலாற்றில் ஆந்திரம் தடுப்பணை கட்டுவதைக் கண்டித்து 09.03.2024 அன்று
## காஞ்சிபுரத்தில் ஆர்ப்பாட்டம்



09.03.2024 அன்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரகம் அருகில் பாலாற்றில் ஆந்திர அரசு சட்ட விரோதமாக அணை கட்டுவதைக் கண்டித்து பாலாறு பாதுகாப்புக் கூட்டியக்கத்தின் சார்பில் கூட்டியக்கத்தின் ஒருங் கிணைப்பாளர் காஞ்சி அமுதன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

உழவர் சங்கத் தலைவர் கே.எம். வெங்கடேசன் ஆர்ப்பாட்டத்தில் தொடக்கவுரையாற்றினார். தொடக் கத்தில் பாவலர் பூங்குன்றன், காஞ்சி உலக ஒளி ஆகியோர் பாலாறு பாதுகாப்புப் பற்றிய பாடல்களைப் பாடினர். சீதாவரம் உழவர் ஆ. மோகன் வரவேற்பு ரையாற்றினார்.

தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான தி.வேல்முருகன் கண்டன நிறைவுரையாற்றினார். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சமத்துவ வழக்குரைஞர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் த.பார்வேந்தன் உட்பட உழவர் சங்கங்களின் பொறுப் பாளர்கள் கண்டன உரையாற்றினர்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் சா. குப்பன் கண்டன உரையாற்றினார். வேலூர் பாலாறு பாதுகாப்பு சமூக விழிப்புணர்வு இயக்கத்தின் பொறுப்பாளர் எம். பரசுராமன், மா.பெ.பொ.க. வேலூர் மா. தசரதன், மா.பெ.பொ.க. காஞ்சிபுரம் தீ. கோபால கிருட்டிணன், இரா. நாராயணமூர்த்தி, சம்மந்த சிவகுமார் உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

# வங்கித் துறையைச் சீரழித்த மோடி அரசு

**மோடி** ஆட்சிக்கு வந்ததும் 2015 ஜனவரி, 1ஆம் தேதி புனேவில் பிரதமர், நிதி அமைச்சர், பொதுத்துறை வங்கிகளின் நிர்வாக இயக்குனர்கள், மேல் அதிகாரிகள் கலந்து கொண்ட கியான் சங்கம் என்ற நிகழ்வு நடந்தது. அதில் பொதுத்துறை வங்கிகளின் நிர்வாக இயக்குனர்களை வைத்தே வங்கிகளை இணைக்கவும், தனியார் மயமாக்கவும் திட்டம் உருவாக்கப் பட்டது. தனியார் வங்கிகளில் நிர்வாக இயக்குனர்களாக இருந்த கே. வி. கமத், பி.ஜே. நாயக், பரேஷ் சுதாங்கர், சந்திர சேகர் கோஷ் போன்றவர்கள் வகுப்பெடுத்தார்கள். பொதுத்துறை சீர்திருத்தத்திற்கு மெக்கன்ஸி எனும் வெளிநாட்டு கம்பெனி பொதுத்துறை நிர்வாக இயக்குனர்களுக்கு, என்ன செய்ய வேண்டும் என PPT தயார் செய்து கொடுத்து கற்பித்தது. அப்போதைய நிதித்துறை செயலர் கஷ்முக் அடியா, முன்னுரிமைக் கடன்கள் நீண்ட காலமாக தொடர்கின்றன. பரிசீலிக்கப்பட வேண்டும் என்றார். வங்கிகள் அரசின் கட்டுப்பாட்டில் இருந்து மாறி அரசு தொடர்புடையவைகளாக மாறும்; 4 - 5 உலகில் பெரிய வங்கிகள் உருவாக்கப்படும்; வங்கிகளின் கடன் யாருக்கு செல்ல வேண்டும் என்பது பரிசீலிக்கப்பட வேண்டும்; அரசு வங்கிகளில் தலையிடாது; வங்கி துறை சீர்திருத்தம் வேகப்படுத் தப்படும், என தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து ஆண்டு தோறும் இதுபோன்ற கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. விளைவு? 28 பொதுத்துறை வங்கிகள் 12 ஆக குறைக்கப்பட்டு விட்டன. தனியார் வங்கிகள் 24 உள்ளன. உலகத் தரம் வாய்ந்த வங்கி ஒன்று கூட இல்லை. உலகில் முதல் வரிசையில் இருக்கும் 50 வங்கிகளில் நமது வங்கிகள் ஒன்று கூட இல்லை. கிராமப்புற வங்கி கிளைகள் 58 லிருந்து 29 ஆக குறைந்துள்ளன. கிராமப்புறங்களில் 7.7 கடனும், சிறுநகரங் களில் 1. 3 கடனும், நகர்புறங்களில் 16.7 கடன்களும், பெருநகரங் களில் 63 கடனும் கொடுக்கப்படுகிறது. முன்னுரிமை கடன் குறைந்து வருகிறது.

சிறு கடன்கள் மிகவும் குறைந்துவிட்டன."சிறு, குறு நிறுவனங்களுக்கு கடன் கொடுப்பது குறைந்துவிட்டது. அவற்றிலும் பெரிய நிறுவனங்களுக்கு மட்டுமே கடன் கிடைக்கிறது. சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு கடன் குறைந்துவிட்டது. சுய உதவிக்குழுக்களுக்கு 11-12% வட்டி. ஆனால் டாட்டாவுக்கு ஏர் இந்தியாவை வாங்க 4.5% வட்டி. கடந்த 10 ஆண்டுகளில் ரூ. 15.6 லட்சம் கோடி பெரு முதலாளிகளுக்குத் தள்ளுபடி செய்யப்படுகிறது.

வங்கிகள் அல்லா நிறுவனங்கள் செய்யப்படுகிறது NBFC மற்றும் நுண் கடன் நிறுவனங்கள் வங்கிகளில் இருந்து 11% வட்டிக்கு கடன் பெற்று பெண்களுக்கும், சிறு வியாபாரிகளுக்கும், விவசாயிகளுக்கும், சிறு, குறு தொழில் செய்பவர்களுக்கும் 36% வட்டியில் கடன் கொடுக்கின்றன.

ஸ்டேட் வங்கி சாதாரண மக்களுக்கு கடன் கொடுக்க அதானி நிறுவனங்களுடன் இணைந்த கடன் ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளது. பெரு முதலாளிகளுக்கு ஏராளம் கடன் தள்ளுபடி. மொத்த வராக்கடனில் 82 பெரும் முதலாளிகளுக்கு கொடுத்தது, என பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 5 ஆண்டுகளில் ரூ.35,587கோடி ரூபாய் சாதாரண மக்களிடமிருந்து குறைந்த பட்ச இருப்பு கட்டணம். எஸ்.எம்.எஸ். சேவை கட்டணம், ஏ.டி.எம். கட்டணம் என்ற பெயரில் வசூலிக்கப்பட்டுள்ளது. இதல்லாம் கடன் பரிசீலனை கட்டணம், (காசு செலுத்த கட்டணம்) ஆய்வு கட்டணம், என பல கோடி வசூலிக்கப்படுகிறது. வங்கிகளில் நிரந்தர பணிகளில் ஆட்களை குறைத்து ஒப்பந்த பணியாளர்கள் நியமனம், அதிகரித்துள்ளது.

தனியார் வங்கிகள் உட்பட நிரந்தரப் பணியாளர்கள் 15 லட்சம். ஒப்பந்த பணியாளர்கள் / முகவர்கள் 33 லட்சம். இதன் மூலம் இட ஒதுக்கீட்டுக்கு வேட்டு. வராக் கடனை மீட்க தனியமைப்பு என்ற பெயரில் தேசிய கடன் தீர்ப்பாயம் தொடங்கியது இந்த மோடி ஆட்சி. இதன்மூலம் வராக்கடனில் சராசரி 80% தள்ளுபடி.

ஸ்டெர்லைட்-வேதாந்தா குழுமத்திற்கு வீடியோகான் கம்பெனியை வாங்க 95 தள்ளுபடி. அதாவது ரூ.59132 கோடி கடனில் ரூ.56248 கோடி தள்ளுபடி. விவசாயிக்கு கடனை திருப்பி செலுத்த பலவித கொடுமைகள்- இதன் காரணம் தினமும் சராசரி 3 விவசாயிகள் தற்கொலை. அனில் அம்பானியின் கம்பெனியை வாங்க அண்ணன் முகேஷ் அம்பானிக்கு 99% தள்ளுபடி.

வங்கிகளில் தலையிட மாட்டோம் என சொன்னவர்கள் வங்கி நிர்வாகங்களை மிரட்டி கடன் கொடுக்க சொல்கிறார்கள். யாருடைய பயமுறுத்தலால் என அனைவரும் அறிவோம். 43 கோடி பேருக்கு முத்ரா கடன் கொடுத்ததாக சொல்கிறார்கள். இந்தியாவில் 30 கோடி குடும்பங்களே உள்ளன. உண்மையில் 43 கோடி பேருக்கு கடன் கொடுத்திருந்தால் வீட்டுக்கு 1 1/2 பேருக்கு கடன் கிடைத்திருக்கும். கிடைத்ததா என நீங்களே விசாரியுங்கள், உண்மை தெரியும். தேர்தல் பத்திர வழக்கில் ஸ்டேட் வங்கி நிர்வாகத் துக்கு கொடுத்த அழுத்தம் காரணமாக உச்ச நீதிமன்றத்தையே அவமதிக்க முயற்சித்தது ஸ்டேட் வங்கி நிர்வாகம்.

எல்லா பொதுத்துறை வங்கிகளும் ஏராளம் இலாபமீட்டியும் முதலில் 2 வங்கிகளை தனியார் மயமாக்குதல், பின்னர் மற்றவற்றை தனியார் மயமாக்குதல் என தவறான முடிவு ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது. சட்டப்படி நியமிக்கப்பட வேண்டிய அதிகாரிகள் சங்க பிரதிநிதிகள், அதிகாரிகள் அல்லாத தொழிற்சங்க பிரதிநிதிகள் நிர்வாகக் குழுவில் 10 ஆண்டுகளாக நியமிக்கவில்லை. இது வங்கிகளில் மோசடி செய்ய வழி வகுக்கிறது. 1969-இல் வங்கிகளைத் தேசியமயமாக்கிய போது திருமதி. இந்திரா காந்தி அவர்கள், ஏழைகளுக்கு, விவசாயி களுக்கு, சிறு குறு தொழில் செய்பவர்களுக்கு கடன் கிடைக்கவும், கிராமப்புறங்களில் வங்கி கிளைகளை தொடங்கவும், நாட்டின் வளர்ச்சிக்கு மக்களின் சேமிப்பை பயன்படுத்தவும், அரசியல் சாசனம் சொல்லும் ஏற்றத்தாழ்வில்லா சமுதாயத்திற்கு ஒரு படிக்கல்லாக இது இருக்கும் என சொன்னார்; நிரூபித்தார். நேர் மாறாக மோடி வங்கிகளை பெரு முதலாளிகளுக்குத் தாரை வார்த்து வருகிறார். பொதுத்துறை வங்கிகளைப் பாதுகாப்போம்.

தனியார் மயமாக்கலைத் தடுப்போம்; தேர்தல் நமக்கு அந்த வாய்ப்பைத் தந்துள்ளது. சுய உதவிக் குழு பெண்களுக்கு குறைந்த வட்டியில் கடன் கிடைக்க, விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியில் கடன் கிடைக்க, சிறு குறு தொழில்களுக்கு மானியத் துடன் கடன் கிடைக்க, மாணவர்களுக்கு கல்விக் கடன் கிடைக்க, கிராமங்களும் சிறு நகரங்களும் வளர்ச்சி பெற மாற்றம் கொண்டு வருவோம்.

முடிவு உங்கள் கையில். **தாமஸ் பிராங்கோ** முன்னாள் பொதுச் செயலாளர் அகில இந்திய வங்கி அதிகாரிகள் கூட்டமைப்பு

வெளியீடுகள் : மக்கள் இயக்கங்கள் 2024

# படுக்கை ஆடுகள்!

பேராசிரியர் இரா. சோதிவாணன்




தீவினைகள் தமிழ்நாட்டைச் சூழும்போது
தலையணைகள் உறங்க அழைத்தால் போவீரோ?
காவிகளின் பெரும்படையே நுழையும் போது
காலமிது காவிமயம் ஆயிற்றென்று
ஆவி–கொட்டாவி விட்டு வெறுமே நிற்பீரோ?
அட, உணர்வு சிறிதுமின்றிப் பதராவீரோ?
தாவிவரும் புலியைக்கைக் குலுக்குவீரோ?
'தமிழச்சி! கைமுறத்தால் அடி'என்பீரோ?

புவிஈர்ப்பே மேலனவற்றைக்கீழ் ஈர்க்கும்.
புரட்டுருவின் வடக்கே, தெற்கை ஈர்க்க வேர்க்கும்.
செவிஈர்ப்பின் பொய்யுரை ஒப்பனைகள் சேர்க்கும்.
செருக்கூர்வேல் நெஞ்சதனில் பாய்ச்சிவிட்டுத்
தவிக்கும்வாய், பால்வார்ப்பதாய் நடிக்கும்.
தரைமின்னல்போல் செல்வ உடை உடுத்தி
உயிர் எளிமைப் பற்றி ஒரு 'கயமை' பேசும்.
'உடை நீக்கி மணிப்பூரில்' பெண்மை காக்கும்!

இதுவரையில் நீ என்ன கிழித்தாய் தோழா
இதுநேரம்; சங்கிகள்வாய் (பொய்) கிழிப்பாய் நீயே!
பொதுவெளியில் நரிச்சூழ்ச்சி தெரியவந்தும்
புடைசூழ்ந்து ஓநாய்கள் மகுடம் சூட்டும்.
எதுவரையில் ஏமாந்தோம் என்று காட்டி
எரிமலையின் ஈரோட்டார்ப் புரட்சி ஆர்த்துப்
புதுவிடியல் வந்துஒரு நூற்றாண்டான
பின், பழைமை (சனாதன) ஆப்படிக்க விடுவாயோநீ.

வழித்தோன்றல் முதல்வராம் ஸ்டாலின் எட்டு
விழித்திசையில் முதல் முப்பெருந் தோன்றலாரின்
(பெரியார், அண்ணா, கலைஞர்)
வழித்தோன்றித் திராவிட முறை நல்லாட்சி
முதிர்பேரிகை கொட்டு முரசொலிதான் ஆர்க்கப்
பழித்தூண்டும் பூணூலார் கூட்டம் ஆட்டம்
படுபள்ளம் வீழ்ந்தொடுங்க வகுத்த நேரம்.
எழுமுகிலின் இடிமுழக்கம், இந்தியா எல்லாம்
விழித்துக் கொள்ளட்டும்; பொதுமை வெல்லட்டும்.


# இந்திய வழக்குரைஞர் குழுவில் வழக்குரைஞராகப் பதிவு



தாம்பரம் ஆல்மைட்டி கஸ்தூரி சகோதரி மகனும் மாடம்பாக்கம் அழகிரி சாந்தி அழகிரி மூத்தமகன் கௌதம்அழகிரி தமிழ்நாடு-புதுச்சேரி வழக்குரைஞர் குழுவில் வழக்கறிஞராகப் பதிவு செய்தார். இதை தொடர்ந்து தாம்பரம் சட்டமன்றத் உறுப்பினர் எஸ்.ஆர்.ராசா, முன்னாள் அமைச்சர் டி.கே.எம்.சின்னையா ஆகியோரிடம் வாழ்த்துக்கள் பெற்றார். மகிழ்ச்சியான தருணத்தில் புதிய சிந்தனையாளன் இதழ் வளர்ச்சிக்கு ரூபாய் இரண்டாயிரம் வழங்கினார்.



- செய்தி : **தாம்பரம் சுப்பிரமணி**



# ஆரியம் வேர் ஆர்எஸ்எஸ் மரம் பாஜக கிளை...

'இளையதாக முள்மரம் கொல்க! களையுகர் கைகொல்லும் காழ்த்த இடத்து'

# சங்கமித்ரா!



'விடுதலை' ஏட்டில் குத்தூசி சா.குருசாமியின் "பலசரக்கு மூட்டைக் கட்டுரைக் கருத்து களைப் படித்து மகிழ்ச்சி பொங்கச் சிரித்தவர், பெரியார்!" "அவருக்கு அடுத்தாற்போல், உங்களுடைய கட்டுரைகளைப் படித்துத்தான், பெரியார் அப்படிச் சிரித்து மகிழ்ந் தார். என்று தோழர் வே.ஆனை முத்து கூறுவார்.

இந்தியிலும் ஆங்கிலத்திலும் தெலுங்கிலும் தமிழிலும் நீரோட்டமாக உரையாற்றும் திறன் படைத்தவர். பலமுறை தோழர் வே.ஆனைமுத்து அவர்களுடன் வட மாநிலங்களுக்குச் சென்று வந்தவர். தோழர் ஆனைமுத்து பணிகளுக்கு உறுதுணையாக இருந்தார். தோழர் ஆனைமுத்து நூல்கள் வெளியிடத் தூண்டுநராகவும் துணையாகவும் விளங்கியவர்.

பார்ப்பனீயத்தின் வைரி! பார்ப்பன ஆதிக்க ஒழிப்பு முன்னணிப் போராளி! ஒடுக்கப்பட்டோர் உரிமைக் காப்புப் படையின் முன்னணி வீரர்! 'ஒடுக்கப்பட்டோர் குரல்' தன் முன்னேற்றம்' 'சங்கமித்ரா விடையளிக்கிறார்' என்கிற இதழ்கள் நடத்தினார்.

விடுதலை, உண்மை, சிந்தனையாளன், வளர்தொழில், கண்ணியம், முகம் ஆகிய இதழ்களில் எழுதியவர். இயற்பெயர் பா.இராமமூர்த்தி. தோழர் சங்கமித்ரா பழகுவதற்கு இனிமையானத் தோழர்!

தோழர் சங்கமித்ரா மறைந்து பதினோராண்டுகள் ஒழிவிட்டன.

**தோழர் சங்கமித்ரா புகழ் ஓங்குக!**

## புதிய சிந்தனையாளன் வளர்ச்சி நிதி மார்ச்சு-ஏப்பிரல்-2024

| | |
|---|---|
| பேரா. மு.திருமாவளவன், சென்னை | 2000.00 |
| து.செ.நிறைமொழி, காட்டுமன்னார்கோவில் | 1000.00 |
| மா.முருகேசன்–அலமேலு, தீத்தாண்டுப்பட்டு | 1000.00 |
| சம்பந்த சிவக்குமார்–பானுமதி, காஞ்சிபுரம் | 1000.00 |
| சுக. முல்லை–சே.சு.வினீத் நாராயணன், திருவள்ளூர் | 500.00 |
| க.நாகராசன், அன்னனூர் | 200.00 |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர் மற்றும் ஆசிரியர் : **வாலாசா வல்லவன்**
எண்.2/12, சி.என்.கே.சந்து, சேப்பாக்கம், சென்னை - 600 005. கைப்பேசி : 8668109047
அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்,**
16, (142), ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014. பேசி : 044-2848 2441